
# தமிழரசு

பிப்ரவரி 1–15, 1999, ரூ.3





















# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
எய்ட்ஸ்
சென்னை -8

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# இந்த இதழில்

**கன்னியாகுமரி மாவட்டச் சிறப்பிதழ்**


★ தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டுத் தொடக்க விழா... 2
★ நான்காவது தமிழ்... 12
★ தகவல் தொழில்நுட்பத்தில் தமிழுக்கு ஒளிமயமான எதிர்காலம்... 15
★ இணையத்தில் தமிழ்... 17
★ தமிழ் இணையம் 99 முடிவுகள்... 18
★ தமிழ்நாடு முழுவதும் சமுதாய இணைய மையங்கள் முதலமைச்சர் அறிவிப்பு... 20
★ திருவாமூர் சமத்துவபுரம்... 26
★ குடியரசு தின விழா... 31
★ கன்னியாகுமரி மாவட்டம்... 32
★ குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை... 34
★ கண்கவரும் கன்னியாகுமரி... 37
★ வளர்ச்சிப்பாதையில் கன்னியாகுமரி மாவட்டம்... 40
★ மாவட்ட ஆட்சியருடன் நேர்காணல்... 44
★ வேளாண்மை வளர்ச்சி.. 47
★ அழகு மிளிரும் ஆலயங்கள்.. 50
★ குமரி மாவட்டக் குடிநீர்த் திட்டங்கள்... 55
★ சாலை போக்குவரத்தில் சாதனை... 57
★ சமூக நலத்திட்டங்கள்... 58
★ அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்... 59
★ வனவளம் கொழிக்கும் கன்னியாகுமரி... 62
★ மின்வசதி... 63
★ பால் வளம்... 64


## திருக்குறள்

*சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே*
*மற்றின்பம் வேண்டு பவர்.*

*அறவழியில் நிலையான பயனை விரும்புகிறவர் உடனடிப் பயன் கிடைக்கிறது என்பதற்காக அறவழி தவறி நடக்க மாட்டார்.*

*- கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...*


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு – 2030
தை – மாசி
பிப்ரவரி 1–15, 1999
மலர் : 30 இதழ் : 15
விலை ரூ.3


<u>முதல் பக்க அட்டையில்</u>
**தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு**
<u>கடைசிப்பக்க அட்டையில்</u>
**குடியரசு தின விழா (26–1–1999)**

# கிராமப்புற மக்களை இண்டர்நெட்டில் இணைக்கும் சாதனை

- மேதகு ஆளுநர்
செல்வி எம்.பாத்திமா பீவி பாராட்டு

"தொழில்நுட்ப நெடுஞ்சாலையின் ஒருங்கிணைந்த பகுதியாக தமிழை உருவாக்கும் பணியை நிறைவாக்கும் இந்த மாநாட்டிற்கு வெளிநாடுகளிலிருந்து வருகை தந்துள்ள அமைச்சர்கள், பிரமுகர்கள் மற்றும் வல்லுநர்களை நான் வரவேற்கிறேன்.

புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், தகவல் அளிப்பதை மிகவும் எளிதாக்குதவன் மூலம் தகவல் தொழில்நுட்பத்தை ஒட்டு மொத்த வளர்ச்சிக்குப் பயன்படுத்த முடியும். இன்று இண்டர்நெட் உலகில் உள்ள 170 நாடுகளைப் பல்வேறு மொழிகள் பேசுபவர்களை இணைக்கிறது. 1969 ஆம் ஆண்டு இண்டர்நெட் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து தொடர்ந்து முக்கியத்துவம் பெற்று வருகிறது. 1990ஆம் ஆண்டுகளில் இண்டர்நெட் தனி நபர்களின் பயன்பாட்டுக்கு வந்தது. அதன் மூலம் ஆயிரக்கணக்கானோர் ஒவ்வொரு நாளும் அதில் இணைந்து வருகின்றனர்.

### தமிழக அரசுக்குப் பாராட்டு

இம்மாநிலத்தின் விஞ்ஞானப் பாரம்பரியத்தின் மூலம் தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பத்தில் முற்போக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. மாநில அரசு தகவல் தொழில்நுட்பத்திற்காகத் தனித்துறையே அமைத்துள்ளது. தகவல் தொழில் நுட்பத்தில் மனிதவளத்தை பெருமளவில் ஈடுபடுத்தவும், பாரம்பரிய மிக்க கல்வித்துறை சிறப்பைப் பயன்படுத்தவும், தகவல் தொழில் நுட்பத்தில் தீவிரமான வளர்ச்சியை எட்டவும் மாநில அரசு மிகவும் ஆர்வத்துடன் உள்ளது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் வேகம் குறையாமல் பராமரித்துவரும் தமிழ்நாடு அரசை நான் பாராட்டு கிறேன். அந்த வகையில் 'தமிழ் இணையம் 99' மற்றொரு பாராட்டுக்குரிய நடவடிக்கையாகும்.

தகவல் தொழில்நுட்பத்தில் தனியார் துறையின் போட்டி மனோபாவத்தின் மூலம் ஆதாயம்பெற மாநில அரசு விரும்புகிறது. அதிலும் தனி நபர்களும், தனியார் துறையும் சமன்பொருள் மேம்பாட்டுக்கு, குறிப்பாக தமிழ் மொழியில் இண்டர்நெட் ஏற்படுத்தியதில் ஆற்றியுள்ள பங்கை மகிழ்ச்சியுடன் அங்கீகரிக்கிறது. இதில் ஒரே தன்மை ஏற்படாமல் உள்ளது.

### ஒரே மாதிரியான குறியீடுகள்

உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் தங்கள் தாய்மொழியை நேசிக்கும் சிறப்புக்குரியவர்கள். உலகில் இண்டர்நெட் அன்றாடப் பணிகளில் ஒன்றாகத் திகழ்வதில் ஒரே மாதிரியான குறியீடுகள் தேவை. அதை உருவாக்கும் முயற்சிகளில் தமிழ்நாடு அரசு ஈடுபட்டுள்ளது. இதில் வெற்றி பெறுவதன் மூலம் எதிர்காலத்தில் தமிழ்நாடு தமிழ் இணையத்தின் மைய வழிகாட்டியாகத் திகழ முடியும்.

இந்த நேரத்தில் சர்வதேச அளவில் தமிழ் மொழியை அறிமுகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட அனைவரையும் பாராட்டுகிறேன். மற்ற எந்த இந்திய மொழியையும் விட தமிழ் இண்டர்நெட்டில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. ஒரே மாதிரியான குறியீடுகளை உருவாக்குவதன் மூலம் தமிழ் இணையம் பெறும் வெற்றி அதன் மூலம் உலகம் முழுவதும் உள்ள தமிழ் இணைய மக்கள் ஒருங்கிணைந்து தமிழ் மற்றும் தமிழ்நாடு பற்றிய தகவல்களை பகிர்ந்து கொள்ளமுடியும்.

இதில் தமிழ்நாட்டின் பெருமளவிலான ஆங்கிலம் அறியாத கிராமப்புற மக்களை இண்டர்நெட்டில் இணைக்கும் திறமையே குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

சர்வதேச அறிஞர்கள் தமிழில் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் வகையில் தமிழ்மொழி தகவல் நெடுஞ்சாலையில் முக்கிய இடம் பெறச் செய்யும் இந்த முயற்சி ஒரு முற்போக்கான நடவடிக்கை; இதன் மூலம் தமிழ்மொழி மிகவும் மேம்பாடடையும். இந்த நிலைமை அனைத்தும் உருவாவதற்கு கற்பிப்பதிலும், கற்பதிலும் தமிழ்மொழியை நவீனப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்த பெருமை முழுவதும் முதல்வர் கலைஞர் அவர்களையே சாரும்.




மக்களின் பெரும் நன்மைக்கு உதவும் வகையில் மாநில நிர்வாகத்தின் பல்வேறு பகுதிகளையும் நவீனப்படுத்துவதில் உறுதியும் திறமையும் கொண்டுள்ள மாறன் அவர்களைப் பாராட்டுகிறேன்".

★ ★ ★

# தகவல் தொழில் நுட்பத்தின் மின்னல் வேக வளர்ச்சியில் தமிழ்மொழி பின்தங்கி விடக்கூடாது

– முதலமைச்சர் கலைஞர்

இன்று நடைபெறுகின்ற இந்த மாநாட்டுக் கருத்தரங்கம் எந்தக் குறிக்கோளோடு நடைபெறுகிறதென்பதை வரவேற்புரையிலிருந்து எனக்கு முன்னால் சிறைப்புரை ஆற்றியவர்கள் உரை வரை கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றது. தகவல் தொழில்நுட்பத்தினைத் தமிழகத்தில் சீராக வளர்ப்பதற்கு வழிகாட்டத்தக்க வகையில் என்னுடைய தலைமையில் மாநில அளவிலான தகவல் தொழில்நுட்பப் பணி முனைப்புக்குழு (State Level Task Force on Information Technology) 8-10-1998 அன்று அமைக்கப் பட்டது. இதன் துணைத் தலைவராக மத்திய தொழில்துறையின் முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் மென்பொருள் தொழில் மேம்பாடு, பள்ளிகளில் கணினி அறிமுகத்திற்குப் பாடத் திட்டத்தை உருவாக்குதல் - அனைத்துத் துறைகளிலும் கணினியைப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கு உதவும் வகையில் டாக்டர் அனந்த கிருஷ்ணனின் தலைமையில் துணைக்குழு ஒன்றும் 8-10-1998 அன்றே அமைக்கப்பட்டுள்ளது.

### உலகத்தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டினை நடத்த முடிவு

பணி முனைப்புக்குழு, துணைக்குழு ஆகியவற்றின் முதல் கூட்டம் 28-11-1998 அன்று நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்குரிய பணிகளைத் தீவிரப்படுத்துதல் தொடர்பாக பல்வேறு முடிவுகள் மேற்கொள்ளப் பட்டதுடன், இந்த "உலகத்தமிழ் இணையம் - கருத்தரங்க மாநாட்டினை இந்த நாட்களில் சென்னையில் நடத்திடவும்" அன்றே முடிவெடுக்கப்பட்டது.

இந்த மாநாட்டின் வரவேற்புக்குழு முரசொலி மாறன் தலைமையில் 2-12-1998 அன்று அமைக்கப்பட்டது.

### விவாதிக்கப்படவிருக்கும் மூன்று முக்கியப் பொருள்கள்

எனவே இந்த முயற்சிகள் இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டதல்ல; சென்ற ஆண்டில் இருந்தே உலகத்தில் உள்ள எல்லா அறிஞர்களையும் தொடர்பு கொண்டு அதன் தொடர்ச்சியாக இன்று இந்த மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இன்றும், நாளையும் நடைபெறும் இந்த உலகத்தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டில் மூன்று முக்கியப் பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

- தமிழ் விசைப்பலகை வடிவமைப்பைத் தரப்படுத்துதல்.
- தமிழ் வரிவடிவக் குறியீட்டு முறையைத் தரப்படுத்துதல்.
- இண்டர்நெட் மல்டி மீடியா பயன்பாடுகளில் தமிழைச் செயல்படுத்துதல்.

இதைக் குறித்துத்தான் இந்த கருத்தரங்கத்திலே விவாதிக்கப் படவிருக்கின்றது. இந்த மாநாட்டிற்கு வருகை தந்துள்ள பிரதிநிதிகளின் பட்டியலைப் பார்த்தேன். உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும், குறிப்பாக மலேசியா, இலங்கை,சிங்கப்பூர், மொரிஷியஸ்.

- இங்கெல்லாம் தமிழ் வழங்கப்படுகிறது. இதில் மொரிஷியஸ் தவிர்த்த நான் குறிப்பிட்ட மூன்று நாடுகளில் - மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளில் தமிழ் ஒரு ஆட்சி மொழி என்பதை நான் பெருமிதத்தோடு இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அந்த நாடுகளிலிருந்தும் - தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட அந்த நாடுகளிலிருந்தும் தூதுக் குழுக்கள் வந்திருப்பது வியப்புக்குரிய ஒன்றல்ல; ஆனால் அங்கிருந்து மாத்திரமல்ல,

அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நார்வே, அயர்லாந்து, குவைத்

- இப்படி உலகின் பல நாடுகளில் இருந்தும் பிரதிநிதிகள் இங்கே வருகை புரிந்திருக்கின்றார்கள். அதுவும் அவர்கள் எல்லாம் சொந்தச் செலவிலே வந்திருக்கிறார்கள் என்பதுதான் போற்றத்தக்க, புகழத்தக்க, நமக்குச் செலவில்லை என்று நாம் மகிழத்தக்க ஒன்றாகும்.

**பல நாடுகளிலிருந்து ஆர்வத்தோடு வந்துள்ள பிரதிநிதிகள்**

இதைப் பார்க்கும்போது - இப்படி ஆர்வத்தோடு பல நாடுகளிலிருந்து வருகை தந்துள்ள பிரதிநிதிகளை யெல்லாம் பார்க்கும்போது என் உடல் புல்லரிக்கிறது! உள்ளம் புளகாங்கிதம் அடைகிறது. இந்த அறிஞர் பெருமக்களுக்கும், ஆர்வலர்களுக்கும் என் சார்பாகவும் தமிழக அரசின் சார்பாகவும் வணக்கத்தையும், நன்றியையும் மீண்டும் மீண்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிங்கப்பூர் நிபுணர் குழுத் தலைவர் கோவிந்தசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல இந்தக் கருத்தரங்க மாநாட்டிற்கு முன்னோடியாக 1997இல் சிங்கப்பூரில் அதன் தேசியப் பல்கலைக்கழகம் நடத்திய தமிழ்நெட் 1997 என்ற கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் டாக்டர் Tan Tin Wee அவர்களும், கோவிந்தசாமி அவர்களும் முக்கிய பங்கேற்றதை நினைவு கூர்கிறேன்.

அந்தக் கருத்தரங்கிற்குத் தமிழக அரசின் சார்பாக தமிழக அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்களை அன்றைக்கு நான் அனுப்பி வைத்ததையும் கோவிந்தசாமி அவர்கள் இங்கே நினைவுபடுத்தினார்கள்.

அந்த மாநாட்டில் கணிப்பொறி இணையத்திலும், தகவல் நெடுஞ்சாலையிலும் ஒருவருக்கொருவர் தொடர்பின்றி ஏற்பட்டுள்ள குழப்பத்தை கருத்தரங் கத்திலே கலந்து கொண்டவர்கள் அன்றைக்குச் சுட்டிக் காட்டினர்.

அதாவது அவர்கள் நோயைக் கண்டறிந்தவர்கள். மருந்தை அப்போது காணவில்லை.

**நோய்க்குரிய மருந்தைக் காணத்தான் இந்த மாநாடு**

அந்த நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கத்தான் - அதற்குப் பரிகாரம் காணத்தான் - இம்மாநாட்டையும் கருத்தரங்கையும் நாம் கூட்டியிருக்கிறோம் என்று சொன்னால் அது தவறல்ல, மிகையாகாது.

அறிஞர் பெருமக்களாகிய நீங்கள் ஒரு முடிவினை எடுத்து அதை இந்த மேடையில் நானும், மலேசிய நாட்டு அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்களும், இலங்கை நாட்டு அமைச்சர் தொண்டைமான் அவர்களும், சிங்கப்பூர் சார்பாக வந்துள்ள கோவிந்தசாமி அவர்களும், மொரிஷியஸ் நாட்டு அமைச்சர் ராமசாமி சிதம்பரம் பிள்ளையும், புதுவை முதலமைச்சர் ஜானகிராமனும் ஏற்றுக்கொண்டு விட்டால் அதைத் தமிழ்கூறும் நல்லுலகே ஏற்றுக்கொண்டதாகப் பொருள் என்று நான் கருதுகிறேன்.

மென் பொருட்களைத் தயார் செய்யும் தனியார் துறையும் இதை வரவேற்கும் என்பதில் அய்யமில்லை.

நாளைக்கு நீங்கள் எடுக்கப் போகின்ற முடிவைத்தான் சொல்கிறேன்.

ஏனெனில் தமிழக அரசு பிரமாண்டமான முறையில் தகவல் புரட்சியை மக்களிடத்திலே எடுத்துச் செல்வதில் தீவிரமாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் நிர்வாகத்தின் அனைத்துத் துறைகளிலும் கணிப்பொறியை நுழைத்திட தமிழக அரசு திட்டமிட்டு செல்படுகிறது.

இம்மாநாடு அங்கீகரிக்கும் மென்பொருள்களைத் தான் தமிழக அரசு இனிமேல் வாங்கும் என்ற உறுதியையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோலவே - அதுதான் மலேசியாவிலும், இலங்கையிலும், மொரிஷியசிலும், சிங்கப்பூரிலும் மற்றும் தமிழ் கூறும் நல்லுலகம் முழுதும் பயன் படுத்தப்படும் என நம்புகிறேன்.

## இலக்கிய ரீதியாக நமக்கு கிடைத்துள்ள சான்றுகள்

- எனவே தனியார் துறை இதைக் கவனிக்கத் தவறாது என்றும் கருதுகிறேன். ஆனால் ஒன்று - கருத்தரங்கில் ஒருமித்த முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டு தமிழர்கள் ஒன்று கூடினால் (கூடுவது சிரமம்) தகராறுதான். போர்தான் என்பதை அனுபவ ரீதியாக நாமெல்லாம் அறிவோம். இன்றல்ல, அந்தக் காலத்திலேயே ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும் போட்டுக் கொண்ட சண்டை நமக்கு இலக்கிய ரீதியாக கிடைத்திருக்கின்றது.

நான் இங்கே நடைபெறுகின்ற இந்தக் கருத்தரங் கத்தை சிங்கப்பூரில் நோயைக் கண்டுபிடித்தோம். இங்கே மருந்து கண்டுபிடிக்க கூடியிருக்கிறோம் என்று சொன்னேன். ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன்.

சிறந்த மருத்துவர்கள் - திறமைமிக்க மருத்துவர்கள் - ஆற்றல் வாய்ந்த மருத்துவர்கள் நான்கு பேர் கூடினால் ஒருமித்த கருத்தையெடுப்பது கஷ்டம். மருத்துவர்களைப் போலத்தான் இங்கே நீங்கள் கூடியிருக்கிறீர்கள். எனவே தான் ஒருமித்த கருத்தை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## தமிழை ஒருபோதும் தூங்க விடக்கூடாது

ஒரு நிகழ்ச்சி. வரவேற்புக் குழுத்தலைவர் முரசொலி மாறனின் தம்பி முரசொலி செல்வத்திற்கு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இதயத்தில் வலி ஏற்பட்டு ஆபத்தான கட்டத்திலே சென்னை பொது மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்டார். நான் அப்போது மதுரையிலே ஒரு கூட்டத்திலே பேசிக் கொண்டிருக் கிறேன். எனக்கு தகவல் வந்து அங்கிருந்து காரிலே புறப்பட்டு சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறேன். அதற்கிடையே அன்றிரவு நடைபெற்ற நிகழ்ச்சி - இதய வலி ஏற்பட்டவர்கள் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும். அதற்காக தூங்க வேண்டும், எனவே அவரை தூங்க வைக்க என்ன செய்யலாமென்று இரவு பத்து மணிக்குத் தொடங்கிய மருத்துவர்களின் ஆலோசனை - நான்கைந்து தலை சிறந்த மருத்துவர்கள் - இதய சிகிச்சைக்காகவே தனியாகப் படித்த மருத்துவர்கள் விவாதித்தார்கள். ஒருவர் 'வேலியம்' (Valium) கொடுத்தால் தூக்கம் வரும். அதைக் கொடுக்கலாம் என்கிறார். இன்னொருவர் அந்த மருந்தைக் கொடுக்கக் கூடாது என்கிறார். இல்லையில்லை. பெதடின் இஞ்செக்ஷன் கொடுக்கலாம் என்று இன்னொரு மருத்துவர் கூறுகிறார். ஏறத்தாழ இரண்டு மணி நேரம் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அந்த அறையிலிருந்து நர்ஸ் வெளியே வந்தார். பேஷண்ட் என்ன செய்கிறார் என்று மருத்துவர்கள் கேட்க, நன்றாகத் தூங்கி விட்டார் என்று நர்ஸ் சொன்னார். பேஷண்ட் தூங்கலாம், அறிஞர் பெருமக்களே, தமிழைத் தூங்கவிட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

நீங்கள் தமிழ் அறிஞர்கள் - தமிழ் ஆர்வலர்கள் மட்டுமல்ல, கணிப்பொறி வல்லுநர்களும் கூட.

எனவே, உங்களிடம் Scientific temper - விட்டுக் கொடுக்கும் விஞ்ஞான மனப்பான்மை இருக்கும் என்று நம்புகின்றேன். நீங்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு, எத்தனையோ இரவுகள் கண்விழித்து, உங்கள் மென்பொருளைக் கண்டு பிடித்திருப்பீர்கள். எனக்குத் தெரியும். எனவே, ஒவ்வொருவரும் தன் குஞ்சுதான் பொன் குஞ்சு என்று கருதக்கூடும். அதில் தவறில்லை. ஒருவகையில் நானும் ஒரு படைப்பாளிதான்! உங்கள் உணர்வுகள் எனக்குப் புரிகிறது.

ஆனால் - தகவல் புரட்சி காட்டுத் தீயாக பரவிக் கொண்டிருக்கின்றது என்பதை மறந்துவிடக் கூடாது. இன்று கண்டுபிடிக்கப்பட்டது. அடுத்த மாதம் பழசாகி விடுகிறது - அத்தகைய வேகமான முன்னேற்றங்கள் மின்னல் வேகத்தில் நடைபெற்று கொண்டிருக்கின்றது. இந்த மின்னல் வேக வளர்ச்சியில் நாம் பின்தங்கி விடக்கூடாது. நம் மொழி, தமிழ்மொழி பின்தங்கி விடக்கூடாது.

## தரநிர்ணயம் செய்திட வல்லுநர்களே வாரீர்!

எனவே தர நிர்ணயம் செய்திட வாரீர்! என்று உங்களையெல்லாம் அழைக்கின்றேன். இது தமிழ்நெட் 1999. இதில் குறைகள் இருந்தால் தமிழ்நெட் 2000த்தில் அவற்றைச் சரி செய்து கொள்ளலாம் என்று கூறி, உங்கள் நல்ல முடிவுகளை எதிர்பார்த்து நாளை சந்திக்கிறேன். நாளைதான் சந்திக்கிறேன்.

நாளைதான் முக்கியமான நாள்.

முடிவுகள் எடுக்கப்படும் நாள்.

முடிவுகள் அறிவிக்கப்பட இருக்கும் நாள் -

அந்த முடிவுகளை நிறைவேற்ற தமிழக அரசு என்ன செய்யுமென்று நான் அறிவிக்கவிருக்கும் நாள். கணிப் பொறியும், இணையமும் நமக்குத் தோழனாக,

தொண்டனாக, அறிவு புகட்டும் ஆசானாக மாற்ற இன்றும் நாளையும் எடுக்கப்படும் முடிவுகள் உதவும் என்று கூறிக்கொள்கிறேன்.

**உலகெங்கும் உள்ள தமிழர்கள்**
**ஏற்றுக்கொண்ட தமிழ் வாழ்த்து**

இங்கே தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது.

*"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்*
*சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்"*

- என்ற தமிழ்த்தாய் வாழ்த்து. அந்தத் தமிழ்த்தாய் வாழ்த்தை நான் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்ற அந்தக் காலத்தில்தான் அறிமுகப்படுத்தினேன். இப்போது உலகமெங்கும் இருக்கின்ற தமிழர்கள் தங்களுடைய தமிழ்த்தாய் வாழ்த்தாக இதை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய இந்த தமிழ்த்தாய் வாழ்த்தில் இரண்டொரு வரிகளைக்கூட நீக்க வேண்டியதாயிற்று. ஏனென்றால் நம்மொழியை வாழ்த்துகின்ற நேரத்தில் பிறமொழியை இகழக்கூடாது என்பதற்காகத்தான் ''ஆரியம் போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையா உன் சீரிளமைத் திறம்வியந்து" - என்ற வரிகளை நீக்கிவிட்டோம். ஆரியம் உலக வழக்கு அழிந்து, ஒழிந்து விட்டது என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை என்பதற்காக அது சேர்க்கப்படவில்லை - அதுமாத்திரமல்ல; மங்கல விழாக்களில் ''அழிந்து'', ''ஒழிந்து'' என்ற சொற்கள் வேண்டாம் என்பதற்காகவும் அதை மாற்றியமைத்தோம். இன்று உலகமெங்கும் இருக்கின்ற தமிழர்களின் தமிழ்த்தாய் வாழ்த்தாக இந்த வாழ்த்து அமைந்திருக்கின்றது.

**தமிழனாய் நிமிர்ந்தவர்கள் தலைநிமிர்ந்து**
**கர்ச்சிக்க வேண்டும்**

பாரதியார் சொன்னார் -

*"சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் - கலைச்*
*செல்வங்கள் யாவுங் கொணர்ந் திங்கு சேர்ப்பீர்"!*

- என்று சொன்னார். கலைச் செல்வம் என்றால் வெறும் கலை மாத்திரமல்ல; தொழிற்கலை, விஞ்ஞானக் கலை போன்றவைகள் எல்லாம் கூட அந்தக் கலைச் செல்வத்திலே அடங்கும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினார் -

*"உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்*
*ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்*
*சல சலவென எவ்விடத்தும் பாய்ச்சி விட வேண்டும்!*
*எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்*
*தலைமுறைகள் பல கழித்தோம்;*
*குறைகளைந்தோமில்லை.*
*தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்".*

- என்று பாரதிதாசன் பாடினார்.

*நான் தமிழன்;*
*எனது நாடு தமிழ்நாடு;*
*எனது மொழி தமிழ்மொழி;*
*தமிழ் மொழியாளர் எல்லாம் என் உறவினர்;*
*என் சமூகம் தமிழர் சமூகம்;*
*என் சாதி தமிழ்ச் சாதி;*
*தமிழர் நலமே என் மதம்;*
*என் கடமை தமிழ்நாட்டு ஊழியம்;*
*என் தெய்வம் தமிழணங்கு;*
*என் மந்திரம் தமிழ்;*
*என் தோத்திரம் எந்தாய் வாழ்க!*

- என்று தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவனும் தலை நிமிர்ந்து கர்ச்சிக்க வேண்டும் என்று கூறியவர் சுத்தானந்த பாரதியார்.

இவற்றையெல்லாம் இதயத்தில் பதிய வைத்துக் கொண்டு தமிழ் பரவிட, எனக்கு முன்னால் இங்கே சிறப்புரை ஆற்றியவர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியதைப் போல, எல்லா துறையிலும், தமிழைப் பயன்படுத்துகின்ற நல்வழியை, உற்ற வழியை, உரிய வழியை நாளைக்குக் காணுங்கள், கண்டு அறிவியுங்கள் என்று கேட்டு இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

- உலகத் தமிழ் இணையம் 99
கருத்தரங்க மாநாட்டில் 7-2-99 அன்று
முதலமைச்சர் கலைஞர் அவர்கள்
ஆற்றிய உரை.

தமிழுண்டு தமிழ் மக்களுண்டு — இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு!
தமிழ் என்று தோள்தட்டி ஆடு! — நல்ல
தமிழ்வெல்க வெல்கஎன்றே தினம்பாடு!

- **பாவேந்தர் பாரதிதாசன்**

# தமிழ் இணையம்

# உலகத் தமிழர்களை இணைக்கும் பாலம்

- கல்வி அமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன்

இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் வளர்ச்சியின் விரைவுக்கு எடுத்துக்காட்டாகவும் அறிவியல் வளர்ச்சியை மேலும் விரைவுப்படுத்தும் உந்து கருவியாகவும், செய்திகளை மின்னணு ஆற்றல் மூலம் ஒளி வேகத்தில் பரப்புவதன் மூலம் தகவல் தொடர்பு புரட்சி ஏற்படுத்தி இருப்பது கணிப்பொறியாகும்.

பல நூற்றாண்டுகளாக உருக்கொண்டு வந்த கணக்கீடு கருவிகள், நூற்றாண்டுகள் முன் Calculator என்னும் கணிப்பானாக உருவாகி, அதைத் தொடர்ந்து காந்தப்புலத்தில் மின்னணுப் பயன்பாடு மூலம் கணினி (Computer) ஆக வடிவெடுத்து இன்று பருமனும் சுருங்கி, ஆற்றலும் பெருகி, அதன் ஐந்தாவது தலைமுறை வளர்ச்சி பெற்றுள்ளது. இதனுள் உருவாக்கப்பட்ட "நினைவுகொள்' திறன் அடியான பல்வகை ஆற்றலால் பயன்மிகுந்து, பயன்பாடும் பேரளவினதாக உள்ளது. எந்த நாடும் அதனைத் தவிர்த்து வளர்ச்சியும் முன்னேற்றமும் காணமுடியாது.

இன்றையத் தமிழ் கூறும் நல்லுலகு என்பது வடவேங்கடம் தென்குமரி இடையே மட்டும் இல்லை. அலாஸ்காவிலிருந்து, ஆஸ்திரேலியா வரை தமிழ் பேசுவோர் பாரெங்கும் பரவியுள்ளனர். தென்னகத்தில் இயற்கையின் ஐவகை நிலங்களிலே வாழ்ந்த தமிழன் இன்று 5 கண்டங்களிலும் வாழ்கிறான். தமிழகத்தில் ஐந்தரை கோடித் தமிழரும், அயல்நாடுகளில் ஒன்றரை கோடித் தமிழரும் வாழ்கின்றனர். தமிழ் பேசும் மக்களில் ஏறத்தாழ 95 இலட்சம் பேர் பிறநாடுகளின் குடி மக்களாகவோ அல்லது அந்நாடுகளில் தங்கி வாழ்பவராகவோ உள்ளனர். சிலநாடுகளில் தமிழ் ஆட்சி மொழியாகவும் உள்ளது. உலகத் தமிழர் அனைவரும் இணையலாகும் வலுவான தொடர்பு சாதனமாக இணையம் விளங்குகிறது. உலகத்தமிழரின் நலன் நாடும் தமிழக அரசு இந்தத் தொடர்புத் திறனை மேம்படுத்தவே தமிழ் இணைய, மாநாடு நடத்த முன் வந்துள்ளது.

ஆசியாவிலேயே முதல் முறையாக முன்னூறு ஆண்டுகட்கு முன் தமிழ்மொழி எழுத்து அச்சு வாகனமேறி, தகவல் தொடர்பில் முன்னிலை பெற்ற நாள் முதலாய் ஒவ்வொரு அறிவியல் தொடர்பு சாதனத்தையும் தமிழ் நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளது. இந்த வகையில் கணினித் துறையிலும் பன்னாட்டுத் தமிழர்களும் தமிழைத் தகவல் புரட்சியின் ஆற்றல் மிகு கருவியாகப் பயன்படுத்தி வருகின்றனர். உலக மொழிகளில் குறிப்பாக இந்திய மொழிகளில் கணினி பயன்பாட்டிற்கு மிகவும் ஏற்புடையதாக அமைந்துள்ள மொழி 'தமிழ்' என்று இந்திய அறிவியலாளர் கழகம் சான்றுரைத்துள்ளது. கணினியில் தமிழ் எழுத்து வடிவங்களை உருவாக்குவதிலும், கணினியில் தமிழைப் பயன்படுத்துவதிலும் உலகெங்கும் தமிழ் ஆர்வலர்கள் பலரும் கடந்த 15 ஆண்டுகளாக இடையறா முயற்சியில் ஈடுபட்டு வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

கணினி பயன்பாட்டில் பரந்து உலகத்தையே சுருங்கச் செய்து ஒரு சிற்றூராக உருவாக்கிடும் செய்தி பரிமாற்றத்துக்கு வழிசெய்யும் தகவல் தொடர்பு இணையம் (Internet) இன்று பெரும் அளவிலும் அதிக வல்லமையுடனும் ஆங்கிலத்தின் மூலம் செயற்படும் நிலை உள்ளது.

எனினும் கணினித்துறையில் தமிழ் சிறப்பாகக் கால்பதித்ததன்தொடர்ச்சியாக கணினியின் அடுத்த கட்டவளர்ச்சியான "இணையம்" என்னும் தகவல் நெடுஞ்சாலையில் பிற இந்திய மொழிகள் இடம்பெறும் முன்னரே தமிழ் பயணம் தொடங்கியுள்ளது. இணையத்திற்குள் தமிழோசை இன்று இனிமையாக உரத்த ஒலியில் கேட்கிறது. தமிழ் தொடர்பான இணையத்தளங்கள் (WEBSITES) ஏறத்தாழ 3000 உள்ளன. திருக்குறளில் இருந்து இன்றைய

திரைப்பாடல்கள் வரை இந்தத் தளங்களில் இடம்பெற்றுள்ளன. உலகின் பல பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான இணைய இதழ்கள் மின் அம்பலத்தில் அரங்கேறி வருகின்றன. சென்னை யிலிருந்து உலகத் தமிழருக்காக அமைக்கப்பட்ட "இன்தாம்", என்ற இணையத்தளம் பல இதழ்களை இணையத்தின் மூலம் நடத்தி வருகிறது. தமிழ் வழிப்பட்ட நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் உலகெங்கும் தொழில் முனைவோராகவும், வணிகராகவும் உள்ள தமிழர்கள் பற்றிய விவரங் களையும் விரிவாக இது வழங்கி வருகிறது. இது போலப் பலவகை தகவல்களைத் தமிழ் இணையங்கள் பரப்பி வருகின்றன.

என்றாலும் கணினியில் தமிழ் எழுத்துக்களை உள்ளீடு செய்யும் குறியீடுகள் பல்வேறு வகைப் படுதலின் ஒன்றி உள்ளீடு செய்ததைப் பிறவகைக் குறியீடுகளைப் பின்பற்றும் கணினிகளில் உரிய வடிவில் பெற - தோன்றச் செய்ய முடியாத நிலை உள்ளது. அதனால் இணையம் மூலம் தமிழில் தரப்படும் தகவல் உலகெங்கும் பரவ இன்று முடிவதில்லை. இதனைக் கருதியே தமிழக முதல்வர் கலைஞர் இணையம் பயன் உடையதாக வளர்வதற்கு இன்றியமையாத பொதுவான ஒரு குறியீட்டு முறையையும், உள்ளீடு செய்வதற்குரிய வசதியான விசைத்தட்டையும் ( Key Board) உருவாக்க விரும்பி பன்னாட்டு கணினி அறிஞர்களையும் கலந்து ஆய்வு செய்து முடிவு காண்பதற்கு டாக்டர் அனந்தகிருஷ்ணன் தலைமையில் ஒரு நிபுணர் குழு அமைத்தார்கள். இதில் முதல்வர் கலைஞர் கொண்டுள்ள தீவிரமான ஈடுபாடு மிகவும் பாராட்டப்படுவதாகும்.

**மாநாட்டின் மூலம் நல்ல முடிவு**

ஒரு பக்கம் தமிழ் இணையம் தகவல் அளிப்பில் வளர்ச்சி பெற்றாலும் இணையத்தில் ஆங்கில மொழியின் தெளிவான பயன்பாட்டிற்கு நிகராகத் தன்னைத் தரப்படுத்திக் கொள்ளவில்லை. அவ்வாறு தரப்படுத்த மூன்று முக்கியப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டிய நிலை உள்ளது. இந்த மாநாட்டின் மூலம் அவைபற்றி நல்ல முடிவு காணப்பட முடியும் என்று நம்புகிறேன்.

1. தமிழ் மொழி விசைப் பலகை வடிவமைப்பைத் தரப்படுத்துதல்,

2. தமிழ் வடிவக் குறியீட்டு முறையைத் தரப்படுத்துதல்,

3. பல ஊடகப் (Multi Media) பயன்பாடுகளில் தமிழைச் செயல்படுத்துதல்.

தமிழ் கணினிகளில் அமைந்துள்ள விசைப் பலகைகளில் வெவ்வேறு இடங்களில் எழுத்துக்களை அமைத்துள்ளனர். எனினும் இவற்றை 3 வகையான விசைப்பலகை முறைகளுக்குள் அடக்கலாம்.
1. தட்டச்சு விசைப் பலகை (Typewriter Keyboard)
2. ஒலியியல் விசைப்பலகை (Phonetic Keyboard)
3. ரோமன் எழுத்து முறை விசைப்பலகை. உலகெங்கிலும் இந்த 3 வகைகளும் வழக்கில் உள்ளன.



இந்த மூன்று வகைகளிலும் குறை நிறைகள் உள்ளன. எனினும், இவற்றை ஆராய்ந்து சீரான ஒரே அமைப்புடைய விசைப் பலகையை உருவாக்கினால் எதிர்காலத்தில் தமிழ்க் கணினியைப் பயன் படுத்துவோர் குழப்பமின்றிப் பயன்படுத்த முடியும்.

கடந்த ஆண்டுகளில் கணினியில் தமிழ் இடம் பெறவேண்டும் என்ற ஆர்வத்தில் உலகெங்கும் வாழும் பலர் தமிழ் எழுத்தை உள்ளீடு செய்யும் முறையை தாம் கருதியவாறு உருவாக்கி உள்ளனர். நூற்றுக் கணக்கான உள்ளீடு முறை கொண்டவையாக அவை காணப்படுகின்றன. இதனால் ஒரு மென்பொருளில் உள்ளீடு செய்த தமிழ்ச் சொற்களை மற்றொரு மென்பொருள் அவ்வாறே ஏற்காது. வெளியிடுவதும் மாறுபடும். ஆங்கிலத்தில் 'A' வுக்குரிய பொத்தானை அழுத்தினால் எவ்வித மென் பொருளிலும் கணினித் திரையில் 'A' தான் வரும். ஆனால் தமிழில் ஒவ்வொரு கணினியிலும் உள்ள வெவ்வேறு 'கோர்' அடிப் படையில் பதிவு (உள்ளீடு செய்வதால்) வெவ்வேறு எழுத்து தோற்றமளிக்கும். ஆங்கிலத்தில் உள்ள எல்லா மென்பொருள்களும் ஏ.எஸ்.சி.ஐ.ஐ. என்ற ஒரே உள்ளீடு குறியீட்டு முறையைப் பயன்படுத்துவதால் - அனைவரும் பயன்கொள்ள முடிகிறது. ஆனால் தமிழுக்காக இதுவரை ஒருமைப்படுத்தப்பட்ட குறியீட்டு முறை அனைவரும் ஏற்று கைக்கொள்ளும் வகையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்திய அரசின் மின்னணுவியல் துறையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள உயர் கணிப்பொறி மேம்பாட்டு மையம், இந்திய மொழிகள் அனைத்திற்கும் பொதுவானதொரு குறியீட்டு முறையை (ISKY) அமைத்துள்ளது. இது தேவநாகரி எழுத்து முறையை அடிப்படையாக வைத்து வடிவமைக்கப்பட்டது. பிற இந்திய மொழி எழுத்துக்களிலிருந்து தமிழ் எழுத்து வரிசை (நெடுங்கணக்கு) வேறுபட்டு நிற்பதால் தமிழுக்கு இதனைப் பயன்படுத்துவதில் சிக்கல்கள் எழுவதாகப் பலரும் கருதுகின்றனர். சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளைச் சேர்ந்த தமிழ்க் கணினி அறிஞர்கள் ஒரு குழு அமைத்து, 3 வகை விசைப்பலகைகளிலும் பயன்படுத்தும் வண்ணம் தமிழ் மென்பொருள் குறியீட்டு முறை (TSCIE) ஒன்றை அமைத்துள்ளனர்.

**உலகப் பயன்பாடுகளைப் பெற மென்பொருள் குறியீட்டு முறை**

இவை இரண்டைத் தவிர மூன்றாவது சிந்தனையும் உள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் உலகத்தர அமைப்பு நிறுவனம் பதினாறு நுண்ணறை (16 bit) அடிப்படையில் UNICODE என்ற முறையை அறிமுகப்படுத்த உள்ளது. அதற்கேற்ப அனைத்துத் தமிழ் எழுத்துக்களையும் எட்டு நுண்ணறை (8 bits) கணினிகளில் இடம் பெறச் செய்வதால் பல்வேறு உலகப் பயன்பாடுகளைப் பெறலாமென்றும் அதற்கேற்ப மென்பொருள் குறியீட்டு முறை அமைக்கப்பட வேண்டுமென்றும் ஒரு கருத்து உள்ளது.

பல் ஊடகப் பயன்பாட்டைப் பொறுத்தவரை தமிழில் மிகக் குறைவான செயல்பாடுகளே நிகழ்ந்துள்ளன. தமிழில் பல் ஊடகக் குறுந்தட்டுகள் (CD) விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில்தான் வெளிவந்துள்ளன. தமிழ்க்குறுந்தட்டுகள் பெருகினால் தமிழ்க் கணினி வழிக் கல்வியை இன்னும் சிறப்பாக்கலாம். தமிழ்க் கலைக் களஞ்சியங்களும் மற்றும் பல்வகைத் தொகுப்புகளும் இதில் இடம் பெறச் செய்யலாம். ஒரு தமிழ் நூலகத்தையே சில குறுந்தட்டுகளில் அடக்கி விடலாம். இந்த முயற்சியில் நூல் வெளியீட்டாளர் களும், கல்வியாளர்களும் ஈடுபட வேண்டும்.

கணினித் தமிழ்ப் பயன்பாட்டு வளர்ச்சிக்காக - விசைப் பலகையைத் தரப்படுத்தி உலகெங்கும் ஏற்கப்படுவதனால் விளையும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் விசைப் பலகையிலும் மென்பொருள் குறியீட்டிலும் ஒரு முறையை நாம் முடிவு செய்வதற்காகவே இந்த மாநாடு கூட்டப்பட்டுள்ளது.

*"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவ மென்ப திழுக்கு"*

- என்னும் வள்ளுவரின் அறிவுரைக்கேற்ப பன்னாட்டு கணினி நிபுணர்களும், தமிழ் ஆர்வலர்களும் கலந்து ஆய்வு செய்தே ஒரு தகுந்த முடிவுக்கு வர உள்ளனர்.

விரைந்திடும் 21ஆம் நூற்றாண்டில் தமிழ் மொழி அமர்ந்து விரையப் போகும் சொகுசு வாகனமாக இணையம் விளங்கப் போகிறது. Internet என்ற ஆங்கிலச் சொல்லை இணையம் என்று தமிழ் மரபுக்கேற்பவும், இன்றையச் சூழலுக்கு ஏற்பவும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது உலகத் தமிழர்களை இணைக்கும் பாலம். உலகின் செல்வாக்கு மிகுந்த மொழிகளுக்கு இணையாகத் தமிழை உயர்த்தும் ஏணி. தமிழில் உள்ள இணையில்லாத இலக்கியச் செல்வங்களையும் அறிவியல் கருவூலங்களையும் இணையம் போற்றிப் பாதுகாக்கும் என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். கணினியின் மூலம் தமிழ்மொழிப் பயன்பாடு மிகும் என்பதில் ஐயமில்லை. இணையத்தின் மூலம் யாண்டுமுள தமிழ் உள்ளங்கள் இணைவதாக! வாழ்க தமிழ்!!

*- தமிழ் இணையம் - 99*
*கருத்தரங்க மாநாட்டில்*
*கல்வி அமைச்சர்*
*பேராசிரியர் க. அன்பழகன்*
*ஆற்றிய உரை*

★ ★ ★



# இது ஒரு புதிய புரட்சியின் தொடக்கம்!

**மலேசிய அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமிவேலு**

தொல்காப்பியத்திற்கு முன் தோன்றிய மூத்த மொழியான நம் தமிழ்மொழி உலக மொழியாக ஆக வேண்டும் என்ற அவா நமக்குப் பல்லாண்டு காலமாக இருந்து வருகிறது. தேன்மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவச் செய்தல் வேண்டும் என்று ஒரு பாவலர் பாடினார்.

உலக மொழிகளிலே மிகவும் பழமை வாய்ந்தது, சிறப்பு வாய்ந்தது, சீர் உடையது, இனிமையானது தமிழ்மொழி. இந்தச் சிறப்புகள் எல்லாவற்றையும் விட உலகத்தில் ஒரு ஏற்புடைய மொழியாக தமிழ் ஆகவேண்டும், ஆக்கப்பட வேண்டும் என்பதில் முதல்வர் கலைஞர் காட்டி வரும் அக்கறைக்கு இன்றைய மாநாடு ஓர் அடிக்கல் நாட்டு விழாவாக அமைந்துள்ளது என்று சொன்னால் மிகையாகாது.

தமிழ்மொழி உலகமெலாம் பரவுவதற்கு "தமிழ் இணையம்" முறையாகச் செயல்பட்டால் அந்த வெற்றி நிச்சயமாக தமிழுக்குக் கிட்டும். 21-ஆம் நூற்றாண்டின் நுழைவாயிலில் நிற்கின்ற நாம் இது ஒரு புதிய புரட்சியின் தொடக்கம் என்று சொல்லலாம். முதல்வர் கலைஞர் திட்டமிட்டு மேம்படுத்த முனைந்துள்ள தகவல் தொழில்நுட்ப புரட்சியானது தமிழ் வளர்ச்சிக்கோர் புதிய மார்க்கத்தை வகுக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

அந்த புரட்சியின் வாயிலாக தமிழகம், தமிழ்மொழி இவை இரண்டும் பல புதிய மாறுதல்களைக் காணக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த மாறுதல்களின் தொடக்கம்தான் தமிழ்இணையம் 99.

தமிழ்மொழியின் வாயிலாக, நமது ஆற்றலை பயன்படுத்தி பேரளவில் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்புகள் இந்த இணையத்திற்குக் கிட்டும். இதன் மூலம் பல புதிய சவால்களும் மாற்றங்களும் ஏற்படும்.

**ஆங்கிலத்துக்கு நிகராகத் தமிழ்**

இனி தமிழகத்திலே உள்ள பல்கலைக்கழகங்கள் தங்களுடைய பட்டப்படிப்புகளை உள்நாட்டு தமிழர்களுக்கு மட்டுமல்ல, வெளிநாடுகளிலே வாழுகின்ற தமிழர்களுக்கும் இணையத்தின் வழி கற்பிப்பதோடு மாத்திரமல்லாது அதன் மூலம் நல்ல வருவாய் பெறுவதற்கான வாய்ப்புகளும் கிட்டும்.

அடுத்த நூற்றாண்டில் தமிழ், ஆங்கில மொழிபோல் ஒரு பொருளாதார மொழியாக, வாணிகத்துறையில் முக்கிய பயனீட்டு மொழியாக, வருமானத்தை ஈட்டித்தரும் மொழியாக இந்த இணையத்தின் மூலம் ஆகும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

★ ★ ★

# தமிழர்களைத் தமிழ்மொழி வழியாக ஒன்றிணைக்க வேண்டும்

- இலங்கை அமைச்சர்
திரு. **தொண்டமான்**

உலகமெங்கிலும் தமிழர்கள் பரவி இருக்கின்றனர் என்பதைப் பார்க்கும்போது தமிழுலகத்திற்கு அஸ்தமனமே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். எனவே அப்படிப்பட்ட தமிழர்களை தமிழ்மொழி வழியாக ஒன்றிணைக்க வேண்டியது அவசியமும், கட்டாயமும் ஆகும். தகவல் தொழில் நுட்பம் அவர்களை ஒருங்கிணைத்து உள்ளது.

இதுவரை செய்துள்ள சாதனைகள் எல்லாம் மிகக்குறைவுதான். இன்னும் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கிறது. முடிவில்லாமல் தொடர்ந்து கொண்டே இருக்கும் தகவல் தொழில்நுட்பத் துறையின் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. மாற்றத்திற்கு ஏற்ப ஏற்பட்டுள்ள சவால்களையும், வாய்ப்புகளையும் சந்திக்க தமிழ்நாடு தயராகிவிட்டதும் தெரிகிறது. இப்போது தமிழ்நாடும் உலகத்தின் தகவல்தொழில்நுட்பத் துறையில் தன்னை நிலை நிறுத்திக் கொண்டு உள்ளது.

தமிழகத்தை இந்தியாவிலேயே முன்னணி தொழில்வளமிக்க மாநிலமாக மாற்றவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளது கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். கணினி தொழில்நுட்பத்தை எதிர்காலத்தில் வருகின்ற சவால்களைச் சந்திக்கிற வகையில் மிகவும் திறமையுடன் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ★



# உலக சமுதாயத்தை இணைக்கும் தகவல் தொழில்நுட்பம்

- மொரீஷியஸ் அமைச்சர்
திரு. **ராமசாமி சிதம்பரம் பிள்ளை**

மொரீஷியஸ் இந்து பெருங்கடலில் உள்ள ஒரு தீவாகும். அங்கு 12 இலட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். அவர்களில் 10 சதவீதம் பேர் தமிழர்கள் ஆவர். பல கலாச்சாரத்தைக் கொண்ட மக்களும் நல்லிணக்கத்துடனும் ஒருவருக்கொருவர் மதிப்பளித்தும் வாழ்ந்து வருகிறார்கள்.

எனது பெயரான ராமசாமி சிதம்பரம்பிள்ளை தமிழ்ப் பெயர் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. நான் மொரீஷியசில் உள்ள மூன்றாவது தலைமுறைத் தமிழன். எனது தாத்தா சிதம்பரத்தில் இருந்து மொரீஷியசுக்குச் சென்று குடியேறினார். மொரீஷியசில் எங்களின் சாதிப்பெயரை குடும்பப் பெயருடன் வைத்துக் கொண்டேன்.

இண்டர்நெட்டின் பயன்பாட்டுடன், தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பம் உலக சமுதாயத்தை மாற்றிக் கொண்டிருக்கிறது. வணிகம், கல்வி, கலாச்சாரத்தில் வாய்ப்பு பெருகி வருகிறது. உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கிடையே தகவல் தொடர்பை இண்டர்நெட் உண்டாக்கி வருகிறது.

தமிழ் இணையம் 99

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு– 1780களில்–பிரிட்டனில் தொழிற் புரட்சி வெடித்தது.

மனிதன் செய்த வேலைகளைச் செய்வதற்கு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

விவசாய சமுதாயம் (Agricultural Society) கொஞ்சம் கொஞ்சமாக இயந்திரங்கள், இயங்கும் தொழிலையும், தொழிற்சாலைகளையும் சார்ந்த சமுதாயமாக (Industrial Society) மாறிற்று.

இப்போது தோன்றியிருப்பது தகவல் தொடர்புப் புரட்சி (Information Revolution)!

குக்கிராமத்தில் எப்படி யாரும் செய்தித்தாளைப் படித்து உள்ளூர்ச் செய்தியைத் தெரிந்து கொள்ளவேண்டியதில்லையோ– எப்படி ஒரு செய்தி மின்னல் வேகத்தில் பரவுகிறதோ– அதுபோலப் பூவுலகு முழுதும் நொடிப் பொழுதில் செய்தித் தொடர்பு கொள்வது சாத்தியமாகிவிட்டது.

அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளில் விவசாய சமுதாயம் தொழில் துறை சமுதாயமாக மாறுவதற்கு 100 ஆண்டுகளுக்கு மேல் ஆனது. ஆனால் தகவல் தொடர்புப் புரட்சியைப் பயன்படுத்திக் கொண்டு அதைச் சார்ந்த தகவல் சமுதாயமாக (Information Society) மாறுவதற்குக் கால் நூற்றாண்டே போதுமானதாகிவிட்டது.

நாம் அன்னியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்தமையால் 'முதல் தொழிற் புரட்சி'யைத் தவறவிட்டோம்.

தகவல் தொடர்புப் புரட்சியைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறினால் அதற்கு இந்தத் தலைமுறையைச் சார்ந்த நாம் ஒவ்வொருவரும் காரணமாகி விடுவோம்.

தகவல் தொடர்புப் புரட்சியின் வாகனம் கணிப்பொறி!

இண்டர்நெட் என்கிற இணையம் அந்தப் புரட்சியை உலகெங்கும் எடுத்துச் செல்கிற மின்னல்வேக 'ஜெட்' விமானம்!

இன்றைய நவீன உலகில் நீங்கள் படிப்பறிவு பெற்றவர்களாகக் கருதப்பட வேண்டுமானால் உங்களுக்கு

# நான்காவது தமிழ்

– திரு. முரசொலி மாறன் எம்.பி., தலைவர் வரவேற்புக் குழு

தொழிற் புரட்சிக்கு அடிப்படை இயந்திரங்கள் என்றால் தகவல் தொடர்புப் புரட்சிக்கு அடிப்படை கணிப்பொறி (Computer) ஆகும்.

1958இல் அன்றைய சோவியத் நாடு ஸ்புட்னிக் என்கிற விண்வெளிக் கோளை வானில் செலுத்தியது. அதைத் தொடர்ந்து அமெரிக்கா சந்திர மண்டலத்திற்கு மனிதனை அனுப்பியது.

இவை காரணமாக விண்வெளிப் பயணம் சாத்தியமாயிற்று என்பது ஒரு புறம் இருக்க; இதன் விளைவாகப் பூமியைச் சுற்றி வரும் செயற்கைக் கோள்கள் மூலம் பூமிப் பந்தின் எல்லா பகுதிகளோடும் உடனடியாகத் தொடர்பு கொள்ளமுடியும் (Global Satellite Communication) என்கிற மகத்தான சாதனை பிறந்தது. ஆம்; மார்ஷல் மாக் லூகன் (Marshall Mc Luhan) சொன்னதுபோல, இந்தப் பூமிப் பந்தே ஒரு குக்கிராமமாக மாறிவிட்டது.

அமெரிக்க அதிபர் ஆப்ரகாம் லிங்கன் சுட்டுக்கொல்லப்பட்ட செய்தி இலண்டன் மாநகரத்திற்குத் தெரிவதற்கு 5 நாட்கள் பிடித்தன.

இப்போது இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு அஞ்சல் போய்ச் சேர்வதற்கு 10 நாட்கள் ஆகின்றது.

உள்நாட்டு அஞ்சல் போய்ச் சேர்வதற்கு இரண்டு மூன்று நாட்கள் ஆகின்றன.

கணிப் பொறியிலே கடிதத்தை தட்டச்சு செய்து, அதை E-Mail என்கிற மின் அஞ்சலாக அனுப்ப வேண்டுமா?

அமெரிக்காவிற்கு மட்டுமல்ல; அண்டத்தின் எந்தப் பகுதிக்கும் செல்ல இரண்டு நொடிகள் போதும்.


ஆங்கில மொழி, கம்ப்யூட்டர் மொழி ஆகிய இரு மொழிகளும் தெரிந்திருக்க வேண்டும் – என்பது நிலைமை.

ஏன்? தமிழால் முடியாதா?– என்று கேட்கக்கூடும்.

முடியும்– என்று நிரூபித்துக் காட்டிவிட்டனர் தமிழர்கள்!

பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் போற்றிக் காப்பாற்றி வரப்பட்டிருக்கும் தமிழ்! இன்று கணிப்பொறித் திரைமூலம் தகவல் நெடுஞ்சாலையில் பயணம் செய்துகொண்டிருக்கிறது.

தமிழ்மொழி உலகின் பல நாடுகளில் பேசப்படுவதாலும் – அங்கெல்லாம் ஆட்சி மொழியாக




இருப்பதாலும்—உலகெங்கிலும் பரவிக் கிடக்கும் தமிழர்களின் முயற்சியால், இன்று தமிழ் கணிப்பொறியில்—வேறு எந்த இந்திய மொழியையும் விட—நம்பமுடியாத அளவிற்கு அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

கணிப்பொறி என்பது ஒரு தொலைக்காட்சி பெட்டியைப் போல. வெறும் தொலைக்காட்சி பெட்டியின் திரையில் எதுவும் தோன்றாது. அலைவரிசைக்கேற்ப நிகழ்ச்சிகளை—ஒளிநாடாக்களை—இயக்கினால்தான் இந்தப் பெட்டியின் திரை மனமகிழ் வெள்ளித் திரையாக மாறும்.

அதுபோல சாஃப்ட்வேர் என்கிற மென்பொருள் இருந்தால்தான் கணிப்பொறியோடு பேசமுடியும்; இண்டர்நெட் என்கிற இணையத்தின் மூலம் உலகெங்கிலும் தொடர்பு கொள்ள முடியும்.

ஆங்கிலத்தில் எல்லா மென்பொருள்களும் ASCII என்ற ஒரே உள் குறியீட்டு முறையைப் (Coding Standard) பயன்படுத்துகின்றன—அதாவது ஒரே அலைவரிசையில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுவது போல!

ஆனால், தமிழிலோ ஒவ்வொருவரும் தங்களுக்கு உசிதம் என்று தோன்றிய மென்பொருளைத் தயாரித்துவிட்டார்கள்—ஒருவருக்கொருவர் போதிய தொடர்பின்மை காரணமாக! இன்று சுமார் 350 மென்பொருள்கள் கணிப்பொறியில் உலாவந்து கொண்டிருக்கின்றன.

இது உண்மையிலேயே பெருமைக்குரிய செய்திதான்!

ஆனால் ஒவ்வொருவரும் ஒரு தமிழ் வடிவக் குறியீட்டு முறையைக் கையாண்டு கொண்டிருக்கிறார்கள் (அதாவது—ஒவ்வொருவரும் தனித்தனி அலைவரிசையில் ஒலி பரப்புவது போல).

விளைவு என்ன?

இன்று இண்டர்நெட் இணையத்தில் '350 தமிழ்கள்' இடம்பெற்றிருக்கின்றன.

அதாவது—ஒரு மென்பொருளில் தயாரிக்கப்பட்ட தமிழ்ச் சொற்களை மற்றொன்று ஏற்றுக்கொள்ளாது.

இதனால் கணிப்பொறியில் தமிழைப் பயன்படுத்தும் தமிழர்கள் தனித்தனித் தீவுகளாகத் தொடர்பின்றி நிற்கிறார்கள்.

அதுபோலவே நூறுக்கு மேற்பட்ட விசைப்பலகை வடிவங்கள் (Key-board configurations) புழக்கத்தில் உள்ளன.

மேலும், வெளிநாட்டுத் தமிழ் ஆர்வலர்கள் இந்திய அரசின் மின்னணுத் துறையினரால் அமைக்கப்பட்டுள்ள கணிப்பொறி மேம்பாட்டு மையம் (C-DAC) இத்துறையில் செய்துள்ள முயற்சிகளை அறியாமலும் செயல்பட்டு வந்திருக்கின்றனர்.

எனவேதான் தனித்தனித் தீவுகளாகச் செயல்படும் மென்பொருள்களை ஒன்றிணைத்து, அவற்றின் குறியீட்டு அமைப்பையும், விசைப்பலகை வடிவத்தையும் பொதுமைப்படுத்தும் இன்றியமையாத பணியைத் தமிழ்நாடு அரசு இப்போது மேற்கொண்டிருக்கிறது.

அதாவது, இதுதான் தமிழுலகு ஏற்றுக்கொண்ட குறியீடும், விசைப்பலகை அமைப்பும் என்று உலகளாவிய தர நிர்ணயம் செய்யப்பட இருக்கிறது. அதன் விளைவுதான் மலேசியா, இலங்கை, சிங்கப்பூர், மொரீஷியஸ், அமெரிக்கா, கனடா, ஐரோப்பா போன்ற உலகின் பல பகுதிகளில் இருந்தும் வருகை தந்திருக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் ஆர்வலர்களையும், கணிப்பொறி வல்லுநர்களையும் தமிழக அரசு ஒரு இடத்தில் திரட்டி, அவர்களிடையே ஒத்த கருத்தினை உருவாக்கும் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த உன்னதப் பணியினை மேற்கொண்டிருக்கிறது.

இதைச் செய்து முடித்த பிறகுதான் – பனை ஓலையில் இடம் பெற்று பாங்குற வளர்ந்த தமிழ்மொழி எந்தவிதத் தடையுமின்றிக் கணிப்பொறித் திரை மூலம் உலகெங்கும் வலம் வரமுடியும்!

கன்னியாகுமரியில் வாழும் தமிழன் காஷ்மீரில் வாழும் தமிழனோடு மட்டுமின்றிக் கலிஃபோர்னியாவில் வாழும் தமிழனோடும், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தொல்காப்பியனோடும் தொடர்பு கொள்ளமுடியும்!

கிறித்துவ சகாப்தத்திற்கும் முற்பட்ட சங்க இலக்கியங்களை மட்டுமல்ல; உலகத்தின் அறிவுக் களஞ்சியங்களையெல்லாம் கணிப்பொறிக்குள் தமிழில் திணித்துவிட்டால்–நகரத்தில் வாழும் தமிழன் மட்டுமல்ல பட்டிக்காட்டில் வாழும் தமிழனும் அவற்றையெல்லாம் மேய்ந்து அறிவுச் சுடரை அடையமுடியும்.

தமிழில் பேசி உரையாடும் ஆற்றலும் கணிப்பொறிக்கு வந்துவிட்டால் தமிழ்நாடு மட்டுமல்ல! தமிழ் கூறும் நல்லுலகே ஒரு குக்கிராமமாக மாறிவிடும்!

இயல்–இசை–நாடகம் என்று வகுத்து, தமிழை முத்தமிழ் என்பார்கள்.

இப்போது நான்காவது தமிழ் உருவாகிறது. அதன் பெயர்தான் கணிப்பொறித் தமிழ்

அந்த நான்காவது தமிழைச் செப்பனிட்டுப் பொதுமைப்படுத்தி தமிழ்கூறும் நல்லுலகிற்கு வழங்க இருக்கும் பன்னாட்டுத் தமிழர் தலைவர்களையும், தமிழ் அறிஞர்களையும், கணிப்பொறி வல்லுநர்களையும்; இவ்விதம் நான்காவது தமிழ் உதயமாகிட உரிய முயற்சி மேற்கொண்டிருக்கும் கலைஞரையும், அவர்தம் அரசையும், 'நும் முயற்சி வெல்க! வாழ்க!!' என்று வாழ்த்துவது தமிழர் கடமையாகும்.

இனி நான்காவது தமிழ் அடுத்த தலைமுறையினரைச் சென்று சேர்ந்திட முயற்சி மேற்கொள்வது நம் கடமையும், அரசின் கடமையுமாகும்.

★ ★ ★

**உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு**

# வாழ்த்துச் செய்திகள்

சென்னையில் நடைபெறுகின்ற - தமிழ்நெட் 99 - தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ் பற்றிய சர்வதேச மாநாடு மற்றும் கருத்தரங்கு, உலகின் பல்வேறு பகுதிகளில் கம்ப்யூட்டரில் தமிழின் பயன்பாட்டை மேம்படுத்த வழிவகுக்கும் என்று நம்புகிறேன்.

இந்த மாநாட்டின் அமைப்பாளர்களுக்கும் பங்கேற்பாளர்களுக்கும் என் வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, மாநாடு சிறப்புற நடந்தேறவும் என் உளமார்ந்த வாழ்த்தினை தெரிவிக்கின்றேன்.

**திரு. கே. ஆர். நாராயணன்**
மேதகு குடியரசுத்தலைவர்

1999 பிப்ரவரி 7-8ஆம் நாட்களில், சென்னையில் ''தமிழ் இணையம் 99'' என்கிற உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டைத் தமிழ்நாடு அரசு நடத்த உள்ளதென்பதை அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நூற்றாண்டில் தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள புரட்சி கீழ்த்திசை மொழிகளுக்கு ஒருபெரும் சவாலை ஏற்படுத்தியுள்ளதோடு என்றுமில்லாத அளவிற்கு ஒரு வாய்ப்பை அவற்றிற்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இலக்கண விளக்கத்துடன் சொற்றொடர் அமைப்போடும் அமைந்துள்ள இந்த மொழிகள் குறைந்த அளவு முயற்சியுடன் கணினியில் தொகுக்கும் அளவிற்கு வளம் பெற்றுள்ளன.

இந்தியாவின் மிகப் பழமையான, வளம் நிறைந்த மொழியான தமிழைக் கணினியில் கொண்டு செல்ல இயலும். தமிழ்மொழியில் புலமையுடன் விளங்கும் மக்கள் கணினியை மிக எளிதாகப் பயன்படுத்தி, வளர்த்துவிடும் தகவல் தொழில் நுட்பத்தின் பயனை நுகர முடியும்.

உலகத்தரத்தின் மேம்பாட்டிற்கு ஏற்பத் தமிழைக் கணினியில் பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் படிப்படியாக - முறையாக தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருவது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன் அனைத்துத் துறைகளிலும் வெற்றியடைய வாழ்த்துகிறேன்.


**திரு. கிருஷ்ணகாந்த்**
மேதகு குடியரசுத் துணைத் தலைவர்

தமிழ் இணையம் 99 என்னும் தகவல்தொழில்நுட்பவியலில் தமிழ் குறித்த உலகத் தமிழ் இணையக்கருத்தங்க மாநாட்டை 1999ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7,8ஆகிய நாட்களில், சென்னையில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதை அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்திய நாட்டின் எதிர்காலம் தகவல் தொழில்நுட்பவியலில்தான் உள்ளது என்று ஏற்கெனவே கூறியுள்ளேன் எனினும், தகவல் தொழில்நுட்பவியல் வாயிலாகக் கிடைக்கின்ற பற்பல நன்மைகளையும் இந்தியர்கள் அனைவரும் பெற்றிட உறுதி செய்யும் பொருட்டு, தகவல் தொழில் நுட்பவியலில், நமது மாநில மொழிகளின் வளங்களைப் பெருக்குதல் நம் முன் உள்ள உடனடி தேவையாகும். தமிழ் ஒரு உயர் தனிச் செம்மொழியாகும். தற்காலத்தில் எழுகின்ற பல்வேறு அறைகூவல்களையும் எதிர்கொள்ளும் வகையில் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்கி, அவற்றைத் தன்வயப்படுத்திக் கொள்வதில் தமிழ்மொழிக்குள்ள ஆற்றலின் வாயிலாக, அதன் செழுமை பன்மடங்கு உயர்கிறது. தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பவியல் துறையில் தொழில் கல்வித்தகுதி பெற்றவர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் தோன்றி, பெரும் வெற்றியைப் பெற்றுள்ளார்கள். இவர்கள் இந்தியாவிலும் மற்றும் உலகெங்கும் உள்ள நாடுகளில் பரந்து செயல்பட்டு வருகிறார்கள்.

தகவல் தொழில்நுட்பவியல் புரட்சியில் தமிழைப் பெரும்பங்கேற்கச்செய்வதன் வாயிலாக, தகவல் தொழில்நுட்பவியல் பொதுமக்களையும் சென்றடையச்செய்வதற்கு, தமிழ்நாடு அரசின் தகவல் தொழில் நுட்பவியல் துறை இக்கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்துள்ளது எனக்கு பெரும் மனநிறைவை அளிக்கிறது.

இக்கருத்தரங்கிற்கும், இதில் பங்குபெறுவோர் அனைவருக்கும் என் மனம் கனிந்த நல்வாழ்த்துக்கள் உரியனவாகுக!

**திரு. ஏ.பி. வாஜ்பாயி**
மாண்புமிகு இந்தியப் பிரதமர்



# தகவல் தொழில் நுட்பத்துறையில் தமிழ்மொழிக்கு ஒளிமயமான எதிர்காலம்

திரு. எம். அனந்தகிருஷ்ணன்
துணைத் தலைவர், தமிழ்நாடு மாநில உயர்கல்விக் குழு

கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இந்தியாவிலும் மற்றும் உலக அளவிலும் நூற்றுக்கணக்கான தமிழறிந்த கணினி விஞ்ஞானிகள் முனைப்போடு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். தற்பொழுது இந்தியாவில் உள்ள கணினி நிபுணர்கள் இதற்கான புதிய அணுகுமுறையை வழிவகுப்பதில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறார்கள். பள்ளி மாணாக்கர்கள், ஆசிரியர்கள், அலுவலகங்களில் பணிபுரிவோர், வியாபாரிகள் மற்றும் பொருளீட்டாளர்கள் கணினியில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர். கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு, கலாச்சாரம் போன்ற அம்சங்களில் தமிழ் மொழியில் சி.டி. ரோம் பொருட்கள் நாள்தோறும் வந்த வண்ணம் இருக்கின்றன. புதிய புதிய வியாபாரம் தொடர்பான வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. தமிழ்நாடு அரசு, மக்களுக்குப் பெரிய அளவில் கணினி அறிவைப் புகுத்திட முடிவெடுத்துள்ளதால், கணினியில் தமிழைப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகிறது. அரசின் நடவடிக்கை, ஆக்கப்பணிகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளுக்கான படிவங்கள், தொலைதூரக் கிராமத்து மக்கள் கூட அவ்வப்பகுதிகளிலேயே 'இணையம்' (இன்டர்நெட்) மற்றும் கணினிகள் வாயிலாக தமிழிலேயே பெற்றிட வாய்ப்பு உள்ளது.

கடந்து பத்து பதினைந்து வருடங்களாக தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்குரிய முயற்சிகள் சீராக உயர்ந்து வருகின்றன. ஆரம்பத்தில் தமிழ் எழுத்து வடிவங்களை (Font) வடிவமைப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வந்தது. இவை வெவ்வேறு காலகட்டத்தில் 'மென்பொருட்கள்' மற்றும் வன்பொருட்களுக்குப் பயன்படுத்துவதற்காகவும், அச்சுக் கோர்வைக்காகவும் பயன்படுத்தப்பட்டது. வேறு சில சிறப்புக் காரணங்களுக் காகவும், உதாரணமாக தமிழ் மொழியைக் கற்பிப்பதற்காகவும், எளிய விளையாட்டுகளுக்காகவும் இந்த ஃபான்ட் வடிவமைப்பு பயன்படுத்தப்பட்டது.


'இன்டர்நெட்' மற்றும் 'ஈ—மெயில்' உலக அளவில் பெரிய வளர்ச்சியடைந்து தகவல் பரிமாற்றத்தில் புதிய சாதனை படைத்து வரும் வேளையில் இந்தியாவிலும் கடந்த ஐந்து வருடங்களில் அவைகள் பெரிய அளவில் பயன்படுத்துவதால் அதில் தமிழைக் கொண்டுவர முயற்சிகள் அதிகரித்துள்ளன. நூற்றுக்கணக்கான தமிழ் தகவல் பக்கங்கள் (வெப் சைட்ஸ்) திறக்கப்பட்டு நாளேடுகள், வார—மாத—நாளிதழ்கள் 'இணையத்தில்' (இன்டர்நெட்டில்) கிடைக்கின்றன. தமிழ் இலக்கியங்கள்—புதிய பழைய இலக்கியங்கள் பல்வேறு தகவல் பக்கங்களில் (வெப்சைட்ஸ்) சேர்க்கப்பட்டுள்ளன. பல தமிழ் மென்பொருட்களை 'இணையத்திலிருந்து' எளிதில் நகல் எடுத்துக் கொள்ளலாம்.

ஈ—மெயில் தொடர்புகளுக்காகவும், பல தகவல் பக்கங்களைத் தொடர்பு கொள்ள பாரம்பரிய கலாச்சார இசை கற்றுக்கொள்ள, கணினி விளையாட்டு விளையாடுவதற்குச் சொல்பிழை கண்டுபிடித்தல், தமிழ் அகராதி போன்றவைகளைப் பயன்படுத்திட ஏதுவாகச் சில நிபுணர்கள் தமிழை மட்டுமே பயன்படுத்தி மென்பொருள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர். தகவல் தொழில் நுட்பத்தின் வேகமான வளர்ச்சியின் மூலம் பல புதிய கண்டுபிடிப்புகள் உருவாகவுள்ளன. இதனால், தமிழில் அச்சுக்கோர்வை,

தகவல் பரிமாற்றங்கள், ஈ–மெயில் தகவல் தொடர்புடைய கணினி மூலம் குறிப்பாணைகள் மற்றும் கணினி மூலம் மொழி கற்றல் போன்றவை வெகுவாக முன்னேற்றம் அடையும். தகவல் தொடர்புடைய சாதனங்கள் வலுவடையும். அச்சுத்துறையில் தமி ழைப்பயன்படுத்துவதில் மிகப்பெரிய நவீன மாற்றங்களும் முன்னேற்றமும் அடையும்.

இது தொடர்பான பணிகளை மேற்கொள்ளத் துவங்கும் வேளையில் முக்கியமாக தமிழில் தொகுத்தல், பிரித்தல், முறைப்படுத்தி அதை திரும்பப் பெறுதல் போன்ற பணிகளில் நிபுணர்களுக்குச் சவாலாக அமையும் முக்கியப் பணிகளாகும். எதிர்காலத்தில் முக்கியமான பணிகள் என்று எடுத்துக்கொண்டால், மொழியினைத் தொகுத்தல், இயந்திர உதவியுடன் மொழிமாற்றம் செய்தல், ஒருவரது பேச்சை அறிதல், நூலக ஆவணக்காப்பகம் அமைத்தல் போன்ற பணிகளாகும். இவ்வகை வளர்ச்சியின் மூலம் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்மொழி பயன்படுத்துவதற்கான ஒரு சிறந்த எதிர்காலம் உள்ளது எனலாம்.

இவ்வகையான பெருமுயற்சிகளின் பலன்களை முழுமையாகப் பெறவேண்டுமானால், ஒரே வகையான தொழில்நுட்ப முறைகள் கடைப்பிடிக்க வேண்டும். கணினியில் தகவல்களை ஏற்றுதலில் – உதாரணமாக விசைப்பலகை (கீ–போர்டு) மற்றும் தமிழ் எழுத்துக்கள் மற்றும் எழுத்து வடிவ அமைப்புகளின் குறியீடுகள் ஒரே மாதிரியாக வரையறுக்கப்படல் வேண்டும். இதை நிர்ணயிப்பதில் பிப்ரவரி 7, 8 தேதிகளில் நடைபெறவுள்ள பன்னாட்டு இணையம் 99 கருத்தரங்க மாநாடு முடிவெடுக்கும்.



# தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு




*உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு 7.2.99 அன்று சென்னையில் தொடங்கியது. இருநாள் மாநாட்டிற்கு மேதகு ஆளுநர் பாத்திமா பீவி அவர்கள் தலைமையேற்றார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் மாநாட்டினைத் தொடக்கி வைத்தார். தமிழ் இணையம் - 99 கருத்தரங்கில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார்.*

*விழாவில் மாண்புமிகு மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ எஸ். சாமிவேலு, மாண்புமிகு இலங்கை கால்நடை வளர்ப்பு மற்றும் தோட்டக் கட்டுமானத்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், மாண்புமிகு மொரீஷியஸ் கல்வி-விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சர் திரு. ராமசாமி சிதம்பரம்பிள்ளை மற்றும் மாண்புமிகு புதுவை மாநில முதலமைச்சர் திரு. ஆர்.வி. ஜானகிராமன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார்கள். வரவேற்புக் குழுத் தலைவர் திரு. முரசொலிமாறன் எம்.பி. அவர்கள் வரவேற்புரையாற்றினார்.*

*கருத்தரங்க மாநாட்டில் இரண்டு நாட்கள் விவாதிக்கப்பட்டு எடுக்கப்பட்ட முடிவுகளை திரு. அனந்தகிருஷ்ணன் அவர்கள் 8.2.99 அன்று நிறைவுவிழாவில் அறிவித்தார். அதன் பின்பு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் நிறைவுவிழா பேருரையாற்றினார். விருந்தினர்களுக்கு முதலமைச்சர் அன்று இரவு விருந்து அளித்துச் சிறப்பித்தார்.*

# இணையத்தில் தமிழ்

திரு. சுஜாதா, தமிழ் எழுத்தாளர், வரவேற்புக்குழு உறுப்பினர்

இண்டர்நெட் இணையத்தில் நுழைந்த முதல் இந்திய மொழி தமிழ்தான்.

இதற்கு சில காரணங்கள் உண்டு.

துவக்க காலத்திலிருந்தே தமிழ் சொற்தொகுப்புக்கான மென்பொருள்கள் கணிப்பொறிக்காக அமைக்கப்பட்டன. என் நினைவில் தமிழ் சொல்தொகுப்பு மென்பொருள்களை 1978லிருந்து பார்த்து வருகிறேன்.

கான்பூர், சென்னை ஐ.ஐ.டி. நிறுவனங்களில் இந்த ஆரம்பகால முயற்சிகள் நிகழ்ந்தன.

தமிழ் மற்ற திராவிட மொழிகளை விட எளிமையானது. எழுத்துக்கள் குறைவு. நவீனத் தமிழ் எழுத்துக்களை ஒட்ட வைக்காமல் எழுதுகிறோம். நேராக தனித்தனியாக எழுதப்படும் ஒரே ஒரு இந்திய மொழியும் தமிழ்தான். இதனால் கணிப்பொறி விசைப்பலகையில் தமிழ் எழுத்துக்கள் அனைத்தையும் அடக்குவது மிக எளிது. 'ஃபோனட்டிக்' என்று சொல்லப்படும் ஒலியின் வகை விசைப் பலகையில் தமிழ்ச் சொற்களை "அப்பர் கேஸ்" என்னும் மேல் உயர்த்தும் விசையை பயன்படுத்தாமலேயே உள்ளிட முடிகிறது. மேல்நாடுகளில் பணிபுரியும் தமிழர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களிடம் கணிப்பொறி வசதியுடன் தமிழ் ஆர்வமும் இருக்கிறது. அவர்கள் உற்சாகமாக பல முயற்சிகள் எடுத்து இண்டர்நெட் இணையத்தில் தமிழைக் கொண்டு வருவதில் போட்டி போட்டுக் கொண்டு செயல்படுகிறார்கள். இவ்வாறான காரணங்களால் தமிழ் மொழி இணையத்தில் விரைவாக விரிவாகப் பரவியுள்ளது.

இன்று தமிழ் மொழிக்கென்றே நூற்றுக்கணக்கான "வலை மனைகள்" உள்ளன. சிறுகதைகள், கட்டுரைகள், சினிமா, கர்நாடக இசை, சங்க இலக்கியங்கள், திருக்குறள், கம்பன், பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன், கலைஞர் போன்ற தனிப்பட்ட ஆர்வலர் குழுக்கள் நூற்றுக்கணக்கில் இணையத்தில் உள்ளன. பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தின் வலை மனை, பேச்சுத் தமிழைக்கூடக் கற்றுத்தருகிறது. பேசியே காட்டுகிறது.

தமிழிலேயே வலையில் தேடும் "ஸர்ச் என்ஜின்" என்னும் தேடியந்திர மென்பொருள் ஒன்று இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் ஒரு தமிழ் வார்த்தையை உள்ளிட்டால் அந்த வார்த்தை உலகவலையில் எங்கிருந்தாலும் தேடிக் கொண்டுவந்து பட்டியலிடும் மென்பொருள் இது. இதெல்லாம் நமக்கு முழுவதும் மகிழ்ச்சி தரவேண்டும்தான். ஆனால், ஒரே ஒரு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

ஆரம்ப ஆர்வத்திலும் - ஏன், அவசரத்திலும் தமிழை இணையத்தில் உள்ளிடுவதில் சுறுசுறுப்பாக இருந்தவர்கள் தர நிர்ணயம் பற்றிக் கவலையேபடாமல் தத்தம் மனதுக்குப் பட்ட வழியில் தமிழை இணையத்தில் உள்ளிட்டார்கள். அதற்கான விசைப்பலகையிலோ உள்குறியீட்டிலோ எல்லோரும் ஒத்துப்போக வேண்டும் என்கிற தேவையை அவர்கள் உணரவில்லை.

இதனால் அவர்கள் ஆர்வத்துடன் உள்ளிட்ட எல்லாத் தமிழ் தகவல்களையும் எல்லோராலும் அணுக முடியாதபடி ஆகிவிட்டது. "என் வலை மனையில் தமிழ் இருக்கிறது. அந்தத் தமிழை நீங்கள் பார்க்க என் எழுத்துக்களைப் பயன்படுத்த வேண்டும். அதை விலைகொடுத்து வாங்குங்கள்" என்று அவர்கள் சொன்னார்கள். சிலர் தம் எழுத்துக்களை வலைமனையிலிருந்து இலவசமாக இறக்குமதி செய்து கொள்ள அனுமதித்தார்கள். இதனால் ஏற்பட்டதை ஒரே வார்த்தையில் சொல்லப் போனால், "குழப்பம்". தமிழ் ஒரே மொழிதான். ஆனால், இண்டர்நெட்டில் அது வெவ்வேறு வேடங்களில் உலவியது. இந்தக் குழப்பத்தைத் தீர்த்து வைக்க சிங்கப்பூரில் 1997–இல் நடைபெற்ற தமிழ் இணையக் கருத்தரங்கத்தில் முழுவதும் விவாதிக்கப்பட்டது.

அந்தக் கருத்தரங்கத்தில் கணிப்பொறிக்கான விசைப்பலகையையும் கணிப்பொறி நினைவகத்தில் தமிழ் எழுத்துக்களை உள்ளிட ஏற்பட்ட உள் குறியீடு களையும் தர நிர்ணயம் செய்தே ஆக வேண்டும் என்று தீர்மானம் போட்டார்கள். அவரவர் பணிக்குத் திரும்பியதும் தீர்மானத்தை மறந்து பழையபடி தங்கள் விருப்பப்படியே தமிழை உள்ளிடத் துவங்கினார்கள். இதன் காரணத்தை ஆராய்வது இந்தக் கட்டுரையின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டது.

இதையெல்லாம் சில நாட்களாக வெளியிலிருந்து கவனித்து வந்த தமிழக அரசு இப்போது தர நிர்ணயம் செய்தே ஆகவேண்டும். இல்லையேல் நிலை கட்டுக்கடங்காமல் போய் எல்லா முயற்சிகளும் விரயமாகிவிடும் என்று தீர்மானித்து 1999க்கான இணையக் கருத்தரங்க மாநாட்டிற்குப் பொறுப்பேற்று சென்னையில் நடத்துவதாகத் தீர்மானித்தது.

✦ ✦ ✦

# தமிழ் இணையம் 99

## உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டு அறிக்கை

கணிப்பொறி தொழில்நுட்பமும் இணையத் தொடர்புகளும் வளர்ந்து வரும் இன்றைய நிலையில், இணையத்தின் வாயிலாக உலகெங்கும் உள்ள தமிழர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் மூலம் தமிழ் மொழியை இந்த வளர்ச்சிகளில் முழு அளவில் ஈடுபடுத்த வேண்டும். அவர்களிடையே இணையத் தொடர்புகளை விரிவாக்கப்பட வேண்டும். இத்தகைய தேவைகளைக் கருதி, பிப்ரவரி 7,8 தேதிகளில் சென்னையில் தமிழக அரசு கூட்டிய இந்த உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டில் (தமிழ் இணையம் 99) கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. விசைப்பலகை தரப்படுத்துதல் பற்றிய பரிந்துரைகள்:


கணிப்பொறியில் தமிழில் உள்ளீடு செய்வதற்கான விசைப்பலகைகளின் வளர்ச்சியில் ஒரு பெரும் புரட்சியே உருவாகியுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் ஏராளமான விசைப்பலகைகள் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இவை ஆங்கில எழுத்து வழி விசைப்பலகைகள், தட்டச்சு வழி விசைப்பலகைகள், ஒலியியல் விசைப்பலகைகள் என மூன்று வகைகளில் அடங்கும். இவற்றில் மொழி இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்ட, குறைந்த முயற்சியில் நிறைந்த தகவல்களை உள்ளிடவல்ல எளிய ஒலியியல் விசைப்பலகை பெரும் வரவேற்பை பெற்று வருகிறது. விசைப்பலகையை தரப்படுத்தும் முயற்சியில் கீழ்க்கண்ட கருத்துக்கள் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

1. மிகுதியாக பயன்படுத்தப்படும் எழுத்துக்கள் சுட்டு விரல் இடங்களிலும், குறைவாக பயன்படுத்தும் எழுத்துக்கள் சுண்டு விரல் இடங்களிலும் இடல் வேண்டும்.
2. குறைந்த அளவில் பயன்படுத்தப்படும் வடமொழி எழுத்துக்கள் சாவியின் மேற்பகுதியில் இடவேண்டும்.
3. குறில் நெடில் உயிர் எழுத்துக்கள் அடுத்தடுத்து இடல் வேண்டும்.
4. இண எழுத்துக்களாகிய ஙக, ஞச, ணட, நத போன்றவை அடுத்தடுத்து இடல் வேண்டும்.

மேற்கண்ட கருத்துக்களைச் செயல்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ள ஒலியியல் விசைப்பலகை தரப்படுத்தல் படவேண்டி பரிந்துரை செய்யப்படுகின்றது. இந்த முயற்சியில் உலகில் பல பகுதிகளிலும் உள்ள ஆய்வாளர்களின் படைப்புகள் தொகுக்கப்பட்டு வெளியிடல் வேண்டும்.

ஒலியில் விசைப்பலகை பலராலும் ஏற்கப்பட்டு முழு அளவில் பயன்பாட்டிற்கு வரும்வரை, தமிழ்நாடு அரசின் மூலம் அமைக்கப்பட்ட விசைப்பலகைக் குழுவால் பரிந்துரைக் கப்பட்ட தட்டச்சு வகை விசைப்பலகை புழக்கத்தில் இருக்கலாம் என பரிந்துரைக்கப்படுறது.

தமிழக அரசின் விசைப்பலகைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட ஆங்கில எழுத்து வகை விசைப் பலகை, ஆங்கில எழுத்தைக் கொண்டு தமிழ்




**Key - Board Recommended by the Sub-Committee of the State - Level Task Force Committee on I.T., T.N. Govt.**

## Monolingual Glyph Encoding

| | 0 | 16 | 32 | 48 | 64 | 80 | 96 | 112 | 128 | 144 | 160 | 176 | 192 | 208 | 224 | 240 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | A | B | C | D | E | F |
| 0 | | | Space | 0 | @ | றி | ` | ஜ் | | ஞா | | ஞு | டூ | இ | ணை | ஞ் |
| 1 | | | ! | 1 | கி | னி | ணீ | ஹீ | 1 | ‘ | ா | து | ஞூ | ஈ | த | ட் |
| 2 | | | " | 2 | ஙி | ஸி | தீ | க்ஷீ | 2 | ’ | ீ | நு | தூ | உ | ந | ண் |
| 3 | | | # | 3 | சி | ஷி | நீ | • | 3 | “ | ் | பு | நூ | ஊ | ப | த் |
| 4 | | | $ | 4 | ஞி | ஜி | பீ | | 4 | ” | ு | மு | பூ | எ | ம | ந் |
| 5 | | | % | 5 | ணி | ஹி | மீ | | 5 | ஸ்ரீ | ூ | யு | மூ | ஏ | ய | ப் |
| 6 | Control | | & | 6 | தி | க்ஷி | யீ | | 6 | ஸ | ெ | ரு | யூ | ஐ | ர | ம் |
| 7 | | | ' | 7 | நி | கீ | ரீ | | 7 | ஷ | ே | • | ரூ | ஒ | ல | ய் |
| 8 | Characters | | ( | 8 | பி | ஙீ | லீ | | 8 | ஜ | ை | லு | லூ | ஓ | வ | ர் |
| 9 | | | ) | 9 | மி | சீ | வீ | | 9 | ஹ | © | வு | வூ | ஔ | ழ | ல் |
| A | | | * | : | யி | ஞீ | ழீ | | 0 | க்ஷ | | ழு | ழூ | ஃ | ள | வ் |
| B | | | + | ; | ரி | [ | ளீ | { | 10 | ஸ் | டி | ளு | ளூ | க | ற | ழ் |
| C | | | , | < | லி | \ | றீ | | | 100 | ஷ் | டீ | று | றூ | ங | ன | ள் |
| D | | | - | = | வி | ] | னீ | } | ஙு | ஜ் | கு | னு | னூ | ச | க் | ற் |
| E | | | . | > | ழி | ^ | ஸீ | ~ | ஞு | ஹ்ற | சு | கூ | அ | ஞ | ங் | ன் |
| F | | | / | ? | ளி | _ | ஷீ | DEL | ஙூ | க்ஷ் | டு | சூ | ஆ | ட | ச் | |

183 = Bullet

115 = Pulli

தகவல்களைக் கணிப்பொறிக்கு உள்ளிட விரும்பும் சிறுபான்மையினரின் பயன்பாட்டுக்குப் பரிந்துரைக்கப் படுகிறது.

2. பரிந்துரைக்கப்பட்ட ஒலியியல் விசைப்பலகையில் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3. கணிப்பொறி தமிழ் குறியீட்டுத் தர அமைவுகள்

(i) கணிப்பொறியிலும், இணையத்திலும் தமிழ் மொழியைச் செவ்வனே பயன்படுத்துவதற்குத் தேவையான மென்பொருட்களை உருவாக்குவதற்குத் தேவையான குறியீட்டு முறைகளை ஒருமிக்கப்படுத்தப்பட்ட வழிகளில் செயல்படுத்தப் பட வேண்டும்.

(ii) ஆங்கிலமும், தமிழும் ஒரே சமயத்தில் செயல்படுத்தப்படும் மென்பொருட்களுக்கு ஏற்ப, சிறப்பக்குறியீட்டுத் தொகுப்பு (Bilingual Glyph Encoding System) அட்டவணை பரிந்துரைக்கப் படுகிறது.

(iii) தனித்தமிழில் செயல்படும் மென்பொருட்களுக் கேற்ப கீழ்க்கண்ட சிறப்பக் குறியீட்டுத் தொகுப்பு (Monolingual Glyph Encloding System) அட்டவணை பரிந்துரைக்கப்படுகிறது.

4. தமிழுக்காக தற்போதுள்ள எழுத்துக் குறியீட்டுத் தொகுப்பை (Tamil Character Encoding System), தமிழ் எழுத்துக்களின் குறிப்பிடத்தக்க இயல்புகளுக்கும், தனித் தேவைகளுக்கும் ஏற்ப மாற்றி அமைக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தமிழக அரசு இதற்கான கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்ள ஒரு நிபுணர் குழு அமைக்க வேண்டும். UNICODEன் மாற்ற நிலை வரும் சமயத்தில், கீழ்க்கண்ட தமிழ் எழுத்துக் குறியீட்டு முறை அட்டவணையைக் கருதலாம்.

5. தற்போது புழக்கத்தில் உள்ள தமிழ் வழி மென்பொருட்களை மேற்கண்ட இரு சிறப்பக்குறியீட்டு முறைகளுக்கேற்ப மாற்றியமைக்கும் முயற்சிகளை மேற்கொள்ள ஊக்கம் அளிக்கப்பட வேண்டும். இத்தகைய மாற்றுப்பணி விரைவில் கைகூட தமிழ்நாடு அரசு தேவையான உதவிகளை அளிக்க வேண்டும்.

6. வருங்காலத்தில் கணிப்பொறியிலும், இணையத்திலும் ஏற்படும் புரட்சிகரமான பலவித வளர்ச்சிகளுக்கு இணையாக, தமிழ் மொழியைச் செயல்படுத்த உள்ள வாய்ப்புகளை நிறைவேற்ற, தீவிர ஆய்வுகளை உடனடியாக உலகளவில் மேற்கொள்ள வேண்டும். இதற்காக தமிழ் நாட்டில் ஒரு குறிப்பிட்ட தமிழ் இணைய நிறுவனத்தையும், உலகளவில் ஒரு தமிழ் இணைய வகைத் தொடர்பு அமைப்பையும் உருவாக்கவேண்டும்.


7. இத்தகைய அமைப்பின் மூலம் தமிழின் செவ்விலக் கியங்களும், தமிழ் இலக்கண விதிகளும் இணையத்தில் இடம் பெறவேண்டும். தமிழில் இணைச்சொல் அகராதி, பிழைத் திருத்தும் வசதி, மின் அஞ்சல், கையெழுத்து உணர்தல், ஒலி உணர்தல், எழுத்துரு உணர்தல், ஓலைச்சுவடிகளை அறிதல், மேலும் பல தேவைகளுக்கேற்ப மென்பொருள்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளை தமிழ் ஆட்சிமொழியாக உள்ள அரசுகளும், உலகளாவிய தனியார் நிறுவனங்களும், பல்கலைக் கழகங்களும் ஊக்குவிக்க வேண்டும்.

8. உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட வேண்டும்.

★ ★ ★

# தமிழ்நாடு முழுவதும் சமுதாய இணைய மையங்கள் அமைக்கப்படும்!

– முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு



இங்கே நம்முடைய அனந்தகிருஷ்ணன் அவர்கள் நேற்றும் இன்றும் நடைபெற்ற கருத்தரங்கில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகளையெல்லாம் அறிவித்திருக் கின்றார்கள். வரவேற்புக்குழு தலைவர் தம்பி மாறன் இங்கே உரையாற்றும்போது நேற்று முதலமைச்சர் அவர்கள் இரண்டு தமிழர்கள் ஒன்றாக இருக்க முடியுமா என்ற ஐயப்பாட்டை எழுப்பி அந்தக் கேள்விக் குறியோடு போய்விட்டார். இன்றைக்கு முதலமைச்சர் ஏமாறப்போகிறார் என்று குறிப்பிட்டார். நான் அறிஞர் பெருமக்களிடம் என்றைக்கும் ஏமாறமாட்டேன் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் – அதனை ஆதரித்து அமர்ந்திருக்கின்ற உங்களுடைய திருமுகங்கள் – வரவேற்று மகிழ்ச்சியைத் தெரிவித்து வாழ்த்துக்களை கூறியிருக்கின்ற – மேடையிலே அமர்ந்திருக்கின்ற நல்லவர்கள் – இதையெல்லாம் காணும்போது நான் முதலமைச்சராக கோட்டையிலே நாற்காலியிலே அமர்ந்திருக்கின்ற அந்த மகிழ்ச்சியை விட – இங்கே நாற்காலியில்நீங்கள் சூழ அமர்ந்திருக்கும் போது நான் நாற்காலியிலே அமர்ந்திருப்பதாகக் கருதவில்லை. கோபுரத்தின் உச்சியிலே அமர்ந்திருக்கின்ற அந்த மகிழ்ச்சியை அடைகிறேன்.

தமிழர்கள் ஒன்றுகூடி ஒரு நல்ல முடிவினை எடுத்தார்கள் என்பது உலகத்திலே இருக்கின்ற ஏழு அதிசயங்களுக்கும் அப்பாற்பட்ட எட்டாவது அதிசயமாக இன்றைக்கு உருவாகியிருக்கின்றது. எனவே தான் அளவற்ற மகிழ்ச்சியோடு நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

இந்த மாநாட்டினால் என்ன பயன் விளையப்போகிறது – இந்தக் கருத்தரங்கு சாதிக்கப் போவதென்ன – என்றெல்லாம் எண்ணியவர்கள், எழுதியவர்கள், பேசியவர்கள் உண்டு. இன்றைக்கு எடுக்கப்பட்ட முடிவு களுக்குப் பிறகும் கூட, விமர்சிப்பவர்கள் இருக்கக்கூடும். ஒரு பழமொழி உண்டு. கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல என்று. அந்தப் பழமொழியை எதற்குப் பயன்படுத்து கிறார்கள் என்றால், ஒரு நல்ல காரியம் செய்வதற்காக சென்ற போது அங்கிருந்து பயங்கரமான பூதம் புறப்பட்டுவிட்டது என்பதற்காக – நல்லது செய்யப் போய், கெடுதலாக வந்தது என்பதற்காக பயன்படுத்துகின்ற பழமொழி அது. ஆனால் ஒரு கவிஅரங்கத்திலே தலைமை வகித்து நான் ஒரு கவிதையைப் பாடும்போது குறிப்பிட்டிருக்கிறேன்,

*'கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது என்பாரே*
*அதன் பொருள் என்ன புரிகிறதா?*
*கிணறு வெட்ட 'மண்' குவியும் – அது ஒரு பூதம்.*
*பூமிக்குள் அடைந்திருந்த 'காற்று'*
*வெளிக்கிளம்பும் – மறு பூதம்*
*பொங்கி வரும் புது 'நீர்' – அடுத்த பூதம்*
*பொலிவுமிகு 'வான்' தெரியும் நீர் மீது – நாலாம் பூதம்.*
*புவியாளும் ஆதவனின் 'தீ' க் கதிரால்*
*அந்நீரும் தூய்மையாகும் – ஐந்தாம் பூதம்*
*இந்தப்*
*பஞ்ச பூதம் வருவதைத் தான் பழையவர்கள்*
*அழகாய்ச் சொன்னார்*
*கிணறு வெட்ட பூதம் புறப்படும் என்று!'*

நேற்றும் இன்றும் கருத்தரங்கில் கலந்து கொண்ட அறிஞர் பெருமக்கள் கிணறு வெட்டினார்கள். பஞ்ச பூதம் – நீர், நிலம், காற்று, நெருப்பு, வான் இவைகள் எல்லாம் புறப்பட்டதைப் போல் – அனந்த கிருஷ்ணன் அவர்கள் இங்கே அரிய முடிவுகள் எடுக்கப்பட்டதை விளக்கியிருக்கிறார்கள்.

இன்று வருகை தந்து உரையாற்றிய அன்பிற்குரிய 'சாம்பிட்ரோடா' அவர்களும் நேற்றையதினம் உரையாற்றிய மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்களும் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். உரிய நேரத்தில், உரிய இடத்தில் இந்தக் கருத்தரங்க மாநாடு நடைபெறுவதாக மாத்திரமல்ல – தமிழைப் பொருளாதார மொழி ஆக்குவதற்கு உலக அங்கீகாரம் வேண்டும், அதனைப் பெற தமிழ், பரவலாகப் பயன்படுத்தக்கூடிய மொழியாக வேண்டும். தமிழ் இணையம் ஆக்கப் பூர்வமாகச் செயல்பட்டால் தமிழ் நிச்சயமாக உலக உபயோக மொழியாக உருவாகும் என்று குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையிலும் அதை நோக்கி முன்னேறுகின்ற வகையிலும் ஆய்வுகள் நடத்தப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

இலங்கை அமைச்சர் திரு.தொண்டைமான் அவர்கள் நேற்று உரையாற்றும்போது – தமிழர்கள் வாழும் உலகில் சூரியனே அஸ்தமிப்பதில்லை என்ற வகையில் உலகம் முழுதும் தமிழர்கள் பரவியுள்ளார்கள். இந்தத் தமிழர்களை தமிழ்மொழி மூலம் இணைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. கணினியிலும் இணையத்திலும் பயன் படுத்தப்படும் தமிழ் மொழி தமிழ் மக்களுக்கு அந்நியமாகப் போய்விடக் கூடாது. தமிழ்மொழி ஆளுமையும் கணினி அறிவும் ஒன்றாக எடுத்துச் சொல்லப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதையும் மையக் கருத்தாக வைத்துத் தான் நேற்றும் இன்றும் ஆய்வரங்கம் நடைபெற்று நல்ல முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்பச் சிக்கல்களுக்கு இந்தக் கருத்தரங்கு நல்ல முடிவுகளை மேற்கொள்ளும். அதனால் உலகத் தமிழ் மக்களிடையே தடையற்ற இணைப்பு ஏற்படும் என்று மொரிஷியஸ் தீவின் கல்வி அமைச்சர் திரு.ராமசாமி சிதம்பரம் பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார். அதையும் மறவாமல் அந்த நிலை நோக்கி நடை போடுகின்ற வகையிலே முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இன்று நாம் இங்கே "தமிழ்நெட் 99" நடத்துகிறோமென்றாலும் – இதற்கு விதை போடுவதைப் போல – திரு. கோவிந்தசாமி அவர்கள் தமிழ்நெட் 97 என்று சிங்கப்பூரில் நடத்தி, அதனுடைய தொடர்பாக இந்த மாநாடு இங்கே நடைபெறுகின்ற நேரத்திலே வந்திருந்து எடுக்கப்பட்ட முடிவுகளை வரவேற்றிருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய ஒன்றாகும்.

இந்த மாநாட்டிலே தமிழக அரசின் Information Technology Task Force இன் துணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் அனந்த கிருஷ்ணன் அவர்களும், அந்தக் குழுவினரும்; மாநாட்டுப் பிரதிநிதிகளைக் கொண்ட செயற்குழுவும் இணைந்து இங்கே திரு. அனந்தகிருஷ்ணன் விளக்கிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

இது உள்நாட்டு, வெளிநாட்டுத் தமிழர்கள் அதாவது – **உலகளாவிய தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் உருவாக்கிய திட்டம் என்பதில் பெருமையடைகிறேன்.**

ஆங்கிலம் படைத்திருக்கும் சாதனைகள் மீது ஒட்டு மாங்கனி போல தமிழை ஒட்ட வைக்கவேண்டிய திறமை, தமிழ் மண்ணுக்கு இருப்பதையும், அதே நேரம் தமிழ் மொழியின் தனித் தன்மைக்கு ஒரு சிறிதும் ஊறு நேரா வண்ணம் அதைக் காத்திட வேண்டுமென்றும் மலேசிய அமைச்சர் திரு. டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதை மனதிலே வைத்துக் கொண்டு இன்றைய தினம் நல்ல முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

விசைப் பலகை அமைப்பைப் பொறுத்தவரையில் ஒரு ஒத்தக் கருத்து உருவாகியிருக்கின்றது. Phonetic என்கிற ஒலி இயல் அடிப்படையில் மாற்றங்கள் செய்யப்பட்ட விசைப் பலகைக்கே ஒத்த கருத்து உருவாகி யிருக்கின்றது; அது பரிந்துரைக்கப் பட்டிருக்கின்றது.

ஆனால் இது குறித்து சிலருக்கு அதிருப்தி இருக்கலாம் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ஏனெனில் ஏற்கெனவே பழகியவர்கள் தங்கள் பழக்கத்திலிருந்து மாற்றிக் கொள்வது இங்கு மட்டுமல்ல, உலகமெங்கிலும் மிகவும் கஷ்டமான காரியம்தான்.

ஆனால் நான் விசாரித்து அறிந்த வரையிலே பரிந்துரைக்கப்பட்டிருக்கும் இந்த விசைப் பலகையைப் பயன் படுத்துவதற்கு எந்தவித மறு பயிற்சியும் Re-training வேண்டாமென்றும்; இரண்டு



அல்லது மூன்று நாட்கள் முயன்றாலே போதும் என்றும்; சொல்லப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்ல –

இதன் அனுகூலம் என்னவென்றால் "ஷிப்ட் கீ"யை உபயோகப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று சொல்கிறார்கள். கிரந்த எழுத்துக்களுக்கு மட்டும் தான் அந்த "ஷிப்ட் கீ"யை உபயோகப்படுத்த வேண்டும்.

இதுவே "the best and the efficient" என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

தனியார் துறையும் இது போன்ற விசைப் பலகைகளை விரைவில் தயார் செய்து அளிக்க ஒப்புக் கொண்டிருப்பது அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்னொன்றையும் நான் குறிப்பிடுகிறேன்.

எதையும் வலுக்கட்டாயமாகத் திணிப்பதில் எனக்கோ, இந்த மேடையில் வீற்றிருப்பவர்களுக்கோ நம்பிக்கை இல்லை.

"மக்கள் குரலே மகேசன் குரல்" என்கிற தத்துவத்தில் நம்பிக்கை வைத்திருக்கிற இயக்கத்தைச் சேர்ந்தவன் நான்.

எனவே பெருவாரியானவர்கள் இந்த விசைப் பலகை முறையை ஆதரித்தால் அதுவே தானாக நிலைத்து நின்று விடும் என்பதில் எனக்குச் சந்தேகம் சிறிதுமில்லை.

மாற்றங்கள் நிச்சயம் தேவை தான் என்று எடுத்துரைக்கப்பட்டால் அது நிச்சயமாக கவனத்தில் கொள்ளப்படும்.

அடுத்தது–

ஆங்கில வழி உள்ள Romanised விசைப் பலகை KeyBoard – அதாவது ஆங்கில மொழியில் உள்ள சின்ன `a'வை அடித்தால் "அ" என்ற தமிழ் எழுத்தும், Capital `A'வை அடித்தால் "ஆ" என்ற தமிழ் எழுத்தும் – சின்ன `k'வை அடித்தால் "க" என்ற தமிழ் எழுத்தும் வரக்கூடிய விசைப் பலகை ஆகும்.

வெளிநாட்டில் தமிழைப் பேச மட்டுமே தெரிந்தவர்கள், இந்த முறையை நம்பி இருக்க வேண்டி இருக்கிறது. எனவே இதில் கை வைக்கவில்லை.

வெளி நாட்டில் வாழும் தமிழர்களுக்குத் தமிழை எழுதத் தெரியாத காரணத்தால் அவர்கள் இந்த முறையைக் கையாள வேண்டியிருக்கிறது. எனவே இதில் நாம் குறுக்கிட வேண்டிய அவசியமில்லை.

அடுத்தபடியாக

குறியீட்டு முறைகள்– Coding System.

இந்தக் குறியீட்டு முறை எப்படி ஒரு பிரச்சினையாக ஆயிற்று என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அரசியலில் – சமுதாயத்தில் – நாம் எல்லாம் இட ஒதுக்கீடு வேண்டுமென்று கூறி வெற்றி பெற்றவர்கள்.

இன்னமும் அதில் திருப்தி அடையாமல் உச்ச நீதி மன்றத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள்.

அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கோரிக் கொண்டிருப் பவர்கள்.

இந்தக் குறியீட்டு முறையிலும் இட ஒதுக்கீடு முறை வந்து புகுந்திருப்பது ஒரு ஆச்சரியமான விஷயம் தான்.

Uni Code என்கிற சர்வதேச அமைப்பு நம்முடைய தமிழ் மொழிக்கு இப்போதுள்ள Eight Bit முறைப்படி ஒவ்வொரு மொழிக்கும் 256 இடங்களைத் தான் ஒதுக்கியிருக் கிறார்கள். அதில் Control Characters களுக்கும் plus - minus - equal to - என்ற அடையாளங்களுக்கும் 1,2,3,4,5 என்கிற எண்களுக்கும் 64 இடங்கள் போய் விடுகின்றன. ஆக, தமிழுக்காக இட ஒதுக்கீடு செய்திருப்பது – அந்த 64

போக 192 இடங்கள் தான். நமக்குத் தேவையோ 512 இடங்கள். ஆக இந்த இட ஒதுக்கீடு பிரச்சினையில் இப்போதைக்குத் தீர்வு ஏற்படாது.

இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் இப்போதுள்ள Eight Bit System, 16 Bit System ஆக அமையும் என்றும்; அப்போது அந்த Uni Code இல் 65,000 இடங்கள் உருவாகும் என்றும்; அப்போது வேண்டுமானால் 512 இடங்களை நாம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். நான் இப்படித் தான் சொல்ல முடியும் – சொல்லியிருக்கிறார்கள் என்று – எனக்குத் தெரியுமென்று சொல்ல முடியாது. அப்படி 512 இடங்கள் ஒதுக்கப்பட்டால் இப்போது "கா"வை அடிக்க 'க'வுக்கு ஒரு இடமும், 'க' வுக்குப் பக்கத்தில் கால் வாங்க ஒரு இடமும் இருக்கிறது. இது இல்லாமல் 'கா' வுக்கே தனி ஒரு இடம் வந்து விடும்.

எனவே அந்த 512 இடங்கள் கொடுத்திருந்தால் இப்போது குறியீட்டு முறைகள் பற்றி நாம் விவாதிக்க வேண்டிய அவசியமே இருக்காது. எனவே அந்த இடங்களைப் பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? அதற்காக;

**தமிழக அரசு International Unicode Consortium (இண்டர்நேஷனல் யூனிகோட் கன்சார்ஷியம்) உறுப்பினர் ஆவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு இங்கே அறிவித்துக் கொள்கிறேன்.**

அதைப் போலவே,

நம்முடைய தமிழ் ஆட்சி மொழிகளாக இருக்கும் மலேசியா, இலங்கை, சிங்கப்பூர் போன்ற நாடுகளும் அதில் உறுப்பினர்களாக இருப்பதால் அவர்களும் நம்முடைய வருங்கால இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்குத் துணை புரிவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

எனவே அதுவரையிலே நாம் இருக்கிற இடங்களை வைத்துக்கொண்டு அவைகளை வரிசைப்படுத்தி ஒரு குறியீட்டு முறையை உருவாக்க வேண்டும்.

அதற்காக தமிழுக்காக மட்டுமே பயன்படக் கூடிய Mono lingual encoding முறை இப்பொழுது பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அடுத்து,

தமிழுக்கும் ஆங்கிலத்திற்குமான **bi-lingual encoding system** தேவை என்றால் இதையே சிறு மாற்றங்களோடு பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த முடிவுகள் கல்லால் செதுக்கப்பட்ட மாற்ற முடியாத முடிவுகள் அல்ல. உலகில் நிலையானது எதுவென்றால் மாறுதல் என்று காரல் மார்க்ஸ் சொன்னான். எனவே எதையும் மாற்றலாம். அதனால் தான் இந்த முடிவுகள் கல்லால் செதுக்கப்பட்ட மாற்ற முடியாத முடிவுகள் அல்ல என்றேன்.

இவைகளை எல்லாம் DRAFT CODE என்று தான் நான் அழைக்க விரும்புகிறேன். வெறும் DRAFT தான்.

உடனடியாக இவைகள் ஏடுகள் மூலமாகவும் இண்டர்நெட் மூலமாகவும் உலகமெங்கும் தெரிவிக்கப்படும். தமிழ்கூறும் நல்லுலகில் உள்ள தமிழ் ஆர்வலர்கள் இதைப் பார்த்து – உபயோகித்து அதில் தங்களுக்கு ஏற்படும் அனுபவங்களைக் கொண்டு அவர்கள் விரும்புகிற மாற்றங்களை உடனுக்குடன் தெரிவிக்கலாம்.

அதற்காக தமிழக அரசு – மலேசிய அரசு – சிங்கப்பூர் அரசு – பாண்டிச்சேரி அரசு – இலங்கை அரசு ஆகிய ஐந்து



அரசுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழு விரைவிலே அமைக்கப்படும்.

அந்தக் குழுவினர் தெரிவிக்க இருக்கின்ற அந்த மாற்றங்களை எல்லாம் ஆராய்ந்து மூன்று மாதக் காலத்தில் இறுதி முடிவுகள் அறிவிக்கப்படும்.

மீண்டும் இது போன்ற ஒரு மாநாட்டைக் கூட்ட வேண்டிய அவசியம் இருக்காது என்று நான் கருதுகிறேன்.

தேவையானால் வீடியோ Conferencing மூலம் தமிழ்நாட்டில் நானும், மலேசியாவில் டத்தோ அவர்களும், இலங்கையில் தொண்டைமான் அவர்களும், சிங்கப்பூர் பிரதிநிதியும் சேர்ந்து இறுதி முடிவினை அறிவிப்பது உகந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

எனவே, மே மாத இறுதிக்குள்ளாக உலகமெங்கும் இருக்கும் ஆர்வலர்களும் நிபுணர்களும் தங்களுடைய கருத்துக்களை இந்த முயற்சியில் ஏதாவது சிரமங்கள் இருந்தால், குறைகள் இருந்தால் அவைகளைத் தெரிவிக்கலாம்.

டத்தோ சாமிவேலு அவர்கள் பேசும்போது – The Tamils the world over will look to Tamil Nadu as the repository of Tamil learning என்று சொன்னார்கள்.

அதைப் போலவே – மதிப்பிற்குரிய மொரீஷியஸ் நாட்டின் அமைச்சர் ராமசாமி சிதம்பரம் பிள்ளை அவர்கள் I view this Conference as a land mark event, because it is setting the foundation to the creation of a Tamil Virtual World என்று சொன்னார்கள்.

---

# தமிழ்நாட்டில் ரூ.430 கோடியில் 10,000 சமுதாய இணைய மையங்கள்

தமிழ்நாட்டில் சமுதாய இணைய மையங்களை தமிழக அரசு வேர்ல்டு—டெல் நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கிறது. இதற்கான திட்ட அறிக்கையை முதலமைச்சர் **கலைஞர்** அவர்களிடம் வேர்ல்டு—டெல் நிறுவனத்தின் தலைவர் சாம்பிட்ரோடா 9.2.99 அன்று தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் வழங்கினார்.

இதன் பின்னர் திரு. சாம்பிட்ரோடா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழ்நாட்டில் சமுதாய இணைய மையங்களை அமைப்பதற்கு நூறு மில்லியன் டாலர் (430 கோடி) தேவைப்படுகிறது. இதில் ஒரு பங்கினை தமிழக அரசின் சார்பில் அளிக்குமாறு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் கோருகிறோம்.

வருகிற 12ஆம் தேதி எங்கள் நிறுவனத்தின் நிர்வாகக் குழுக் கூட்டம் இலண்டனில் நடைபெறுகிறது. அப்போது இந்தத் திட்டத்திற்கான முதலீட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

இந்த முதலீட்டுக்கு 11 சதவிகிதமோ அல்லது 26 சதவிகிதமோ தமிழக அரசு எடுத்துக் கொண்டு முதலீடு செய்யலாம். நாங்கள் பெரும் பகுதி முதலீட்டினை ஏற்போம். இந்திய சட்டத் திட்டத்திற்கு ஏற்ப இந்த முதலீடு இருக்கும்.

இதனை நிர்வகிக்க தனி நிர்வாகம் அமைக்கப்படும். இதற்காக இங்குள்ள சிறு முதலீட்டாளர்களை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இந்த திட்டப்படி முதல் ஓராண்டில் தமிழ்நாட்டில் 1500 சமுதாய இணைய மையங்களையும் நான்கு அல்லது ஐந்தாண்டுகளில் 10 ஆயிரம் மையங்களும் அமைக்கப்பட வாய்ப்புகள் உள்ளது.

இதற்காக நாங்கள் உலக வங்கி உதவியை கோர மாட்டோம். ஏனென்றால் இது பொருளாதார நோக்கிலான திட்டம். எனவே இதற்கு உதவியோ மானியமோ கோர மாட்டோம். தனிப்பட்டவர் களிடம் தற்போது இந்தியாவில் 33 இலட்சம் கம்ப்யூட்டர்கள் அளவிற்கு உள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் இது ஒரு கோடியாக உயரும்.


தமிழ்நாட்டில் அமையும் சமுதாய இணைய மையங்களுக்கிடையே இணைப்பு தருவதற்காக தனி கேபிள் தொடங்கப்படும்.

நேற்று நடந்த மாநாட்டில் ஒரே மாதிரியான விசைப் பலகையை உபயோகிப்பது என்று எடுத்த முடிவு இந்த மையங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

எழுத்தறிவு, கல்வி, சுகாதாரம் மற்றும் சமுதாயப் பணிகளில் இவை பொது மக்களுக்கு பயன்படும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை உருவாக்கித் தருமாறு முதல்வரிடம் கேட்டுள்ளோம். ஜூன் மாதத்திற்குள் உருவாக்கித் தருவதாக முதலமைச்சர் **கலைஞர்** உறுதியளித்துள்ளார்.

★ ★ ★



அதன் அடிப்படையில் வெளி நாட்டில் இருப்பவர்களும் தமிழ் பயிலுவதற்காக ஒரு **Virtual University** ஐ இண்டர் நெட் என்ற இணையத்தின் மூலம் துவக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறோம்.

**உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் என்று அதற்கு உங்கள் அனுமதியோடு பெயர் சூட்டுகிறேன்.**

திரு. ராமசாமி சிதம்பரம் பிள்ளை அவர்கள் மேலும் கூறினார் – Today we have a unique opportunity through the magic of electronic communication, the interne t, to consolidate ourties என்று கூறினார்கள். அதற்காகத்தான் இந்த இணையப் பல்கலைக்கழகம் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கணிப் பொறி மூலம் எதையும் செய்யலாம்; எதையும் சாதிக்கலாம். எனவே அதற்கு முழு முதல் தேவை Software என்கிற மென் பொருள்களாகும். எனவே, அந்த வாய்ப்பை நாம் உருவாக்க வேண்டும்.

**தமிழில் மென்பொருளை உருவாக்கும் வாய்ப்பை ஊக்குவிப்பதற்காக "தமிழ் மென் பொருள் வளர்ச்சி நிதி" Tamil Software Fund என்கிற நிதியை தமிழக அரசு உங்கள் அனுமதியோடு உருவாக்கவிருக்கிறது.**

தமிழ் மென்பொருள் உருவாக்குவதற்குத் தனியார்களை மட்டும் நம்பியிராமல் அதில் பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் தங்கள் பங்கினைச் செலுத்த வேண்டும் என்பதில் நாம் அக்கறை கொண்டுள்ளோம்.

தமிழின் வளர்ச்சியை இணையத்தில் மேம்படுத்தும் பொருட்டு – தமிழ் பேச்சுச் செயலாக்கம் (Voice Processing), **தமிழ் கையெழுத்துச் செயலாக்கம் (Hand writing Processing)**, ஒலி வழி எழுத்துரு அறிதல் (Optical Character Recognition) இணையத்தின் வலையை தமிழிலேயே தேடி அறிய செயலாக்கம் (Web Browsing); மற்றும் Multi Media போன்ற மென் பொருள்களில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள – சென்னை அண்ணா பல்கலைக் கழகம், கோவை பாரதியார் பல்கலைக்கழகம், திருச்சி ரீஜினல் பொறியியல் கல்லூரி ஆகியவைகளில் மூன்று ஆய்வு இருக்கைகள் (CHAIRS) உருவாக்கப்படும்.

தமிழ் இணையத்தின் வளர்ச்சிக்குத் தேவையான ஆய்வுகளை தொடர்ந்து மேற்கொள்ள "தமிழ் இண்டர்நெட் ரிசர்ச் அண்டு டெவலப்மெண்ட் சென்டர்" ஒன்று உருவாக்கப்படும்.

இத்தகைய பணிகளையெல்லாம் மேற்கொள்ள தமிழக அரசின் சார்பில் ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தகவல் துறை புரட்சியைப் பாமர மனிதனிடத்திலே கொண்டு செல்ல வேண்டும்.

அதுதான் நமது குறிக்கோள்.

இன்று நாம் எடுக்கும் முடிவுகள் ELECTRONIC GOVERNMENT - உருவாவதற்கான முதல் படியாகும். அத்தகைய அரசு ஒரு TRANSPARENT GOVERNMENT ஆகவும் இருக்கும். அதாவது ஒளிவு மறைவு இல்லாத வெளிப்படையான இப்போது இருக்கின்ற தமிழக அரசைப் போல இருக்கும்.

World Tel நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் சாம் பிட்ரோடா நாளை எங்களைச் சந்தித்து அவர்களது திட்டத்தை விளக்க இருக்கிறார்.

இந்த மாநாட்டினுடைய முடிவு களுக்காகவும் நாங்கள் காத்துக் கொண்டிருந்தோம். ஏனென்றால் இண்டர்நெட் ஆங்கிலத்தில் மட்டுமே கிடைத்து, அதை சிறு நகரங்களிலும், கிராமங்களிலும் பொருத்தினால் அது தமிழ்நாட்டு மக்களை ஆங்கிலம் தெரிந்து கொள்ளும்படி மறைமுகமாக வற்புறுத்துவது போல ஆகிவிடும்.

**எனவே, தமிழ் இண்டர்நெட் வசதியோடு இன்னும் ஓராண்டில் தமிழ்நாடு முழுதும் ஆயிரம் சமுதாய இண்டர்நெட் இணைய மையங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

அதைப் போலவே; அரசாங்கத்தின் எல்லா படிவங்களும் (Forms) இன்னும் ஓராண்டுக் காலத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் இணைந்து கிடைக்க வழிவகை செய்யப்படும்.

மதிப்பிற்குரிய மொரிஷியஸ் அமைச்சர் ராமசாமி சிதம்பரம் பிள்ளை அவர்கள் A Tamil global Village is in the making என்று சொன்னார். அதையே நானும் சொல்கிறேன். A TAMIL GLOBAL VILLAGE IS IN THE MAKING.

அதை உருவாக்க நாம் எல்லாம் பாடுபடுவோமாக. நன்றி – வணக்கம்.

– உலகத் தமிழ் இணையக்
கருத்தரங்க மாநாட்டின்
நிறைவு விழாவில்
8.2.99 அன்று முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.

★ ★ ★


# ஜாதி ஒழிந்த ஒரு சமுதாயத்தை மத வேறுபாடற்ற நாட்டை உருவாக்குவோம்!

**– முதலமைச்சர் கலைஞர்**

திருவாமூரில் நடைபெறுகின்ற இந்த இனிய நிகழ்ச்சியில் கடலூர் மாவட்டத்திற்கு பல்வேறு நலத்திட்டங்கள் - திறந்து வைக்கப்படுகிற கட்டிடங்கள் - அடிக்கல் நாட்டப்படுகிற திட்டங்கள் - இவைகளுக்கிடையே என்னுடைய நீண்டநாள் கனவான சமத்துவபுரம் தொடக்க விழா - இத்தனையையும் இணைத்து நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் காண்பதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன்.

ஒரு கோடியே 15 ஆயிரம் ரூபாய் செலவில் சமத்துவபுரம் உருவாக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப் பட்டிருக்கின்றது. 8 கோடியே 47 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் செலவில் 13,887 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப் படுகின்றன. அடையாளத்திற்காக ஏழெட்டு பேர்களுக்கு இங்கே வழங்கப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கெல்லாம் இந்த விழா நிறைவுற்று - அதிகாரிகள் வாயிலாக வழங்கப்பட இருக்கின்றது. 56 கோடியே 87 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் செலவில் 343 திட்டங்களுக்கு அடிக்கல்லும் நாட்டப்பட்டுள்ளது. 23 கோடியே 19 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் செலவில் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. 1,459 திட்டங்களும், கட்டடங்களும் இன்றைக்குத் தொடங்கப்பட்டுள்ளன.

ஆக மொத்தம் 89 கோடியே 55 இலட்சத்து 3 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான பல்வேறு திட்டங்கள் இந்த கடலூர் மாவட்டத்தில் இன்றைய விழா வாயிலாக மக்களின் பயன்பாட்டிற்காக அறிவிக்கப்பட்டுள்ளன. தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. அதற்கான அடிக்கற்களும் நாட்டப்பட்டுள்ளன.



**நால்வரில் உழைத்த பக்தசிகாமணி அப்பர் பிறந்த ஊர் திருவாமூர்**

திருவாமூர் என்கிற சிறப்பு மிகுந்த இந்த ஊரில் - மேலும் இந்த ஊருக்குச் சிறப்பு சேர்க்கின்ற வகையில் சமத்துவபுரம் உருவாகியிருக்கின்றது. முதலில் இங்கே பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் தன் வரவேற்புரையில் அப்பர் பிறந்த ஊர் திருவாமூர் என்று குறிப்பிட்டார். இந்தத் திருவாமூரில் பிறந்த அப்பர் நால்வரில் ஒருவர். சுந்தரர், சம்பந்தர், மாணிக்க வாசகர், அப்பர் என்ற இந்த நால்வரில் உழைத்த பக்தசிகாமணி யார் என்றால் - அவர் அப்பர்தான். சுந்தரர் திருநாவலூரில் பிறந்தவர். அந்த ஊரும் இதற்கு அருகே உள்ளதுதான். அவர் மிகுந்த மகிழ்ச்சியான வாழ்வு வாழ்ந்தார். அந்த-மகிழ்ச்சியின்

அடிப்படையில் பல பதிகங்களை அவர் பாடியிருக்கிறார். திருஞானசம்பந்தரோ பல்லக்கில் ஏறிச் செல்கிற அளவிற்கு அவர் வாழ்ந்தார். ஆனால் அப்பர் - முதலில் அவருடைய பெயர் திருநாவுக்கரசர் - பிறகு தான் அப்பர் என்று அழைக்கப்பட்டார். இவர் உழவாரப் பணியை மேற்கொண்டு கோவில்களில் மண்டிக் கிடக்கின்ற புல் பூண்டுகளை அகற்றி ஆலயங்களைத் தூய்மைப் படுத்துகின்ற உழவாரப் பணியை மேற்கொண்டு - அதற்கென்றே கையில் ஒரு கருவியை வைத்துக் கொண்டுதான் அப்பர் காட்சி தருவார்.

மாணிக்கவாசகரும் அமைச்சராக இருந்தவர். பாண்டிய மன்னனிடம் குதிரை வாங்கி வருவதாகக் கூறி பெற்ற பணத்தில் குதிரை வாங்காமல் கொடுத்த பணத்தில் ஆலயத்தைக் கட்டி முடித்து - அதன் பின்னர் அதற்காக மன்னனின் கோபத்திற்கு ஆளாக நேரிட்டது. எனவே இந்த நான்குபேரில் திருநாவுக்கரசர்தான் உழைத்து தன்னுடைய பக்தியை வெளிப்படுத்தியவர்.

அப்ப்டிப்பட்ட, உழைத்த உத்தமர் அப்பர் பிறந்த ஊர் இந்த திருவாமூர் என்கிற போது - அந்த உழைப்புக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற அந்த வகையில்தான் - உழைக்கும் மக்களுக்காக சமத்துவபுரத்தை இந்த ஆட்சி இங்கே உருவாகியிருக்கிறது.

5.7.1998 அன்றுதான் இந்த சமத்துவபுரத்திற்கு நான் தான் அடிக்கல் நாட்டினேன். மிக விரைவாகப் பணிகள் முடிவுற்று இன்று நாமெல்லாம் பாராட்டத்தக்க அளவிற்குத் திறக்கப்படுகிறதென்றால் - இந்த மாவட்ட ஆட்சித் தலைவருடைய பொறுப்பு மிகுந்த பணியும், மாவட்டத்தின் அமைச்சர் தம்பி பன்னீர் செல்வத்தின் பணியும் சட்டப் பேரவை உறுப்பினர் ராமசாமியின் பணியும் காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது.

**தமிழகத்தின் 12வது சமத்துவபுரமாக இந்த சமத்துவபுரம் அமைந்துள்ளது**

இந்தச் சமத்துவபுரங்களை அமைக்க ஏன் இந்த அரசு முயற்சி எடுத்து - இதுவரையில் 11 சமத்துவபுரங்களை ஆங்காங்குத் திறந்து வைத்து - 12வது சமத்துவபுரமாக இதை அமைத்திருக்கிறது என்பதை தயவு செய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இங்கே 100 குடியிருப்புகள் அமைந்துள்ளன. இதில் ஆதிதிராவிடர்களுக்கு 40 வீடுகளும் - பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கு 25 வீடுகளும், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு 25 வீடுகளும் - இதர வகுப்பினருக்கு ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அல்லாத ஓரளவு முன்னேறிய வகுப்பினருக்கு 10 வீடுகளும், இந்த 100 வீடுகளில் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன.



இந்த நூறு வீடுகள் கட்டுவதற்கான அரசு மானியம் 35 இலட்ச ரூபாயும் - கூட்டுறவு வீட்டு வசதி சங்கக் கடன் தொகையாக 10 இலட்சம் ரூபாயும் - குறைந்த செலவிலான கழிப்பிடங்கள் கட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வாயிலாக 2 இலட்சம் ரூபாயும் ஆக - இந்த நூறு சமத்துவபுர வீடுகளைக் கட்டிட மொத்தம் 47 இலட்சம் ரூபாயும் இந்தச் சமத்துவபுரத்தில் சாலை வசதி பணிகளுக்காக 9 இலட்சம் ரூபாயும் - சிறு பாலங்கள் அமைக்கும் பணிகளுக்கு 2 இலட்சம் ரூபாயும் - மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் குடிநீர்க் குழாய் இணைப்புகளுக்கு 8 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாயும்

மின் இணைப்பு கொடுக்க 81 ஆயிரம் ரூபாயும் - தெருவிளக்குகள் அமைக்க 35 ஆயிரம் ரூபாயும், சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு 4 இலட்சம் ரூபாயும் - வணிக வளாகம் கட்டுவதற்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் - சத்துணவுக்கூடம் கட்டுவதற்கு ஒரு இலட்சத்து 45 ஆயிரம் ரூபாயும் - நியாயவிலைக்கடை அமைக்க ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாயும் - நூலகக் கட்டடம் கட்ட 1 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாயும், தொலைக்காட்சிப் பெட்டி அறை அமைக்க 21 ஆயிரம் ரூபாயும், பேருந்து நிழற்குடை அமைக்க 35 ஆயிரம் ரூபாயும் - கழிவு நீர் கால்வாய் கட்டும் பணிகளுக்காக 2 இலட்சம் ரூபாயும் - மின் அழுத்த மாற்றி அமைக்க 5 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாயும் - சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக 1 இலட்சம் ரூபாயும் - சிறுவர் பூங்கா அமைக்க 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் - மரக்கன்றுகள் நட மற்றும் மரப்பாதுகாப்பு சுவர் அமைக்க 57 ஆயிரம் ரூபாயும் - சாலைப் பலகைகளை அமைக்க 7 ஆயிரம் ரூபாயும் - மற்றும் இந்த சமத்துவபுரம் அமைக்கப்பட்டிருக்கும் நிலத்தின் மதிப்பாக 9 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாயும் ஆக மொத்தம் ஒரு கோடியே 15 ஆயிரம் ரூபாய் செலவில் இந்த 12வது சமத்துவபுரம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இதைப்பற்றி இன்னமும் குறை சொல்பவர்களும் - விமர்சிப்பவர்களும் தமிழகத்தில் சிலர் இருப்பதாக முன்னால் பேசிய அமைச்சர்கள் குறிப்பிட்டார்கள். நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. குறை இருந்தால் அதை சுட்டிக் காட்டினால் அந்தக் குறைகளை தீர்க்கக்கூடிய முயற்சியில் ஈடுபடக்கூடிய அரசுதான் இந்த அரசு. அதற்காக சமத்துவபுரம் கட்டுவதே தவறு என்று யார் சொன்னாலும் அதை நான் கேட்பதாக இல்லை.

சமத்துவப்புரம் அமைப்பதால் சாதி வித்தியாசம் போய்விடுமா என்று கேட்பவர்கள் - சமத்துவபுரத்தால் தங்களுடைய பிழைப்புகெடுகிறதே என்று எண்ணுகிறார்களே தவிர - வேறு யாரும் சமத்துவபுரத்தை குறைசொல்ல மாட்டார்கள்.

**கல்கத்தாவிலிருந்து வெளிவரும் "ஸ்டேட்ஸ்மென்" ஏடு பாராட்டியுள்ளது**

இங்கே உள்ளவர்கள் இதைப் பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும் கல்கத்தாவிலிருந்து வெளிவருகின்ற "ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகை இந்த சமத்துவபுரத்தை பற்றி எழுதியுள்ள ஒரு கட்டுரையை உங்கள் முன்னால் நான் படித்துக்காட்ட விரும்புகின்றேன்.

13.10.1998 - "ஸ்டேட்ஸ்மென்" எழுதியிருப்பதாவது

"The Dravidian movement originally committed to social justice and atheism, played a crucial role in the emancipation of dalits and upliftment of backward classes".

"திராவிட இயக்கம் சமூக நீதி மேம்பாட்டிற்கும், பகுத்தறிவு வளர்ச்சிக்கும் பெரிதும் பாடுபட்டுள்ளது. தாழ்த்தப்பட்டவர்கள் எழுச்சி பெறவும், பிற்படுத்தப்பட்டவர்கள் முன்னேற்றம் காணவும் முக்கியப் பங்காற்றியுள்ளது."

"If the caste based parties are left alone, there will be fewer clashes"

சாதி அடிப்படையிலான கட்சிகள் தனித்து விடப்பட்டால் சாதி மோதல்கள் குறைந்துவிடும்" இப்படி எழுதுவது யார் தெரியுமா? கல்கத்தாவிலிருந்து வெளிவருகின்ற "ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகை.

சாதிமோதலுக்கு காரணம் என்ன? ஒரு ஊரிலே இருக்கின்ற ஒரு குறிப்பிட்ட சாதியார் இன்னொரு ஊரிலுள்ள ஒரு குறிப்பிட்ட சாதியாரோடு மோதிக்கொள்ள வேண்டுமென்று அவர்களாகவே முடிவு எடுத்து மோதிக் கொள்வதில்லை. யாராவது ஒருவர் சாதிகளை வைத்து பிழைக்க வேண்டுமென்று எண்ணுகிறவர், சாதிகளை வைத்துதான் தலைவராக ஆக வேண்டுமென்று எண்ணுகிறவர், சாதிகளை வைத்துப் பிறரை மிரட்டி பிளாக்மெயில் செய்ய வேண்டுமென்று எண்ணுகின்ற ஒருவர் இந்த சாதிகளுக்குத் தலைமையேற்று சாதிச் சண்டைகளைக் காண்டி



விடுகிறார்கள் என்பதை இங்கே உள்ள நாம் அறிந்திருக்கிறோமோ இல்லையோ கல்கத்தாவிலுள்ள "ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகை அறிந்து எழுதுகிறது.

**இத்திட்டத்திற்கு ஆதரவு அளிக்க "ஸ்டேட்ஸ்மென்" ஏடு வேண்டுகோள்**

மேலும் அந்தப் பத்திரிகை எழுதுகிறது.

"Instead of exploiting the situation for narrow political ends, mature leaders of political parties should extend whole hearted support to Karunanithi's concept of Samathuvapuram, a Government sponsored settelement scheme where families of different castes and communities live in harmony as neighbours"

இதன் தமிழாக்கம் :

"குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அமைதியை குலைக்கும் சூழ்நிலைகளைக் கைவிட வேண்டும். அரசியல் கட்சிகளைச் சேர்ந்த முதிர்ந்த தலைவர்கள், பல்வேறு சாதி மதங்களைச் சேர்ந்த குடும்பங்கள் நல்லிணக்கத்துடன் அடுத்தடுத்து சேர்ந்து வாழத்தக்க வகையில் அரசு சார்பில் சமத்துவபுரம் எனும் பெயரில் குடியிருப்புகளைக் கட்டி வழங்கி வரும் கருணாநிதியின் கொள்கைக்கு முழு ஆதரவு அளித்திட வேண்டும்" - என்று இங்கேயுள்ள அரசியல் கட்சித் தலைவர்களுக்கு "ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகை வேண்டுகோள் விடுக்கின்றது.

மேலும்,

"The shceme has made a small beginning and deserves to be expanded particularly in the violent prone southern districts"

இதன் தமிழாக்கம் :

"இத்திட்டம் சிறிய அளவில் தொடங்கப்பட்டுள்ளது. இதுமேலும் விரிவுப்படுத்தத்தக்கதாகும்.



குறிப்பாக தென் மாவட்டங்களில் அதிக அளவில் சமத்துவபுரங்கள் அமைக்கப்பட வேண்டும்" என்று மிகத் தெளிவாக தூய்மையான உணர்வோடு எழுதியிருக்கிறது.

இந்தச் சமத்துவபுரத்தில் எந்தெந்த வகுப்பினர் வாழ்கிறார்கள் என்ற நான் 11 சமத்துவபுரங்களைத் திறந்தபோதெல்லாம் சொல்லியிருக்கிறேன். இன்றைக்கும் சொல்கிறேன். எதிர்காலத்தில் இதைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாமல் இந்தச் சமத்துவபுரத்தில் வாழ்கிற மக்கள் எங்களுக்கு நல்ல மகிழ்ச்சியைத் தர வேண்டுமென்று அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சமத்துவபுரத்தில் உள்ள 100 வீடுகளில் ஆதிதிராவிடர் 39 பேர், அருந்ததியர் ஒருவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களில் 25 பேரில் வன்னியர் 17 பேர், மருத்துவர் 2 பேர், சலவைத் தொழிலாளி வகுப்பைச் சேர்ந்தோர் ஆறுபேர்.

பிற்படுத்தப்பட்டோர் 25 பேரில் கவரா நாயுடு 7 பேர், கருமார் 2 பேர், செங்குந்தர் 2 பேர், யாதவர் 4 பேர், வாணியச் செட்டியார் 3 பேர், கருணீகர் 2 பேர், முஸ்லீம் 4 பேர், கன்னடியன் ஒருவர், இதர வகுப்பினர் ரெட்டியார் 6 பேர், பிராமணர் 4 பேர். இந்த நூறு வீடுகளில் நான்கு பிராமணர்களும் வாழ்கிறார்கள்.

**ஆதிக்கக்காரர்கள் அந்த ஆதிக்க உணர்விலிருந்து விடுபட்டுள்ளார்கள்**

இதைச் சொல்வதற்குக் காரணம்; எட்டி நில், தூரப் போ, கிட்டே வந்தால் தீட்டு, பாவம், ஆண்டவன் கோபத்துக்கு ஆளாவாய் என்றெல்லாம் சொன்ன ஆதிக்கக்காரர்கள் இன்றைய தினம் அந்த ஆதிக்க உணர்விலிருந்து விடுபட்டு அவர்களும் பாரதியாரைப் போல, வா.ரா.வைப் போல "எல்லோரும் ஓர் குலம். எல்லோரும் ஓர் இனம்" என்று சொல்கின்ற அளவுக்கு முன்வந்திருக்கிறார்கள் என்றால் சமத்துவபுரத்தால் விளைந்த நன்மை இது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

ஆனால் ஒரு மாவட்டத்திலே ஒரு சமத்துவபுரம். எதிர்காலத்திலே எல்லா மாவட்டங்களிலும் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்று பத்துக்குக் குறையாத சமத்துவபுரங்களை நாம் உருவாக்கினாலும் கூட எனக்கு முன்னால் இங்கே பேசிய அமைச்சர் பெருமக்கள் சுட்டிக் காட்டியதைப் போல தமிழ்நாடே சமத்துவபுரமாக ஆக வேண்டும். அது இந்த வீடு கட்டி மாத்திரம் சமத்துவபுரமாக ஆனால் போதாது. அவரவர்களும் சமத்துவ உணர்வைப் பெற்றாக வேண்டும். ஆண்டவன் மக்களை படைத்தான் என்று சொல்கின்றோம். ஆனால் அந்த ஆண்டவனுடைய படைப்புக்கு விரோதமாக அவன்

படைப்பிலேயே வேறுபாடு காண்கிறோம். இது நியாயமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

**ஜாதி ஒழிய வேண்டும் என்று சொன்னதை ஏற்றுக் கொண்டிருக்கிறோமோ?**

பாரதியாரைப் புகழ்ந்து ஆண்டுதோறும் விழா நடத்துகிறோம். ஆனால் அந்த பாரதி சொன்னானே "ஜாதிகள் இல்லையடி பாப்பா" என்ற அந்தப் பாட்டை மாத்திரம் நமக்கு வசதியாக மறந்துவிடுகிறோம். இது நியாயமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். உத்தமர் காந்தியடிகளுக்கு ஆண்டுதோறும் விழா எடுக்கிறோம். காந்தி ஜெயந்தி கொண்டாடுகின்றோம். காந்தியின் பெயரால் மண்டபங்கள் கட்டுகிறோம்; காந்தியின் படங்களுக்கு மாலை அணிவிக்கிறோம்; வணங்குகிறோம். உத்தமர் காந்தி என்று பாராட்டிப் போற்றி புகழ்கிறோம் ஆனால் அந்த காந்தியடிகள் ஜாதிகள் ஒழிய வேண்டுமென்று சொன்னாரே அதை ஏற்றுக் கொண்டிருக்கிறோமா என்றால் இல்லை. அதைப் போலவே பெரியாருடைய பெயரை, அண்ணாவின் பெயரைச் சொல்கிறோம். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பெயரைச் சொல்கிறோம்.

*"இருட்டறையில் உள்ளதடா உலகம்*
*ஜாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே"*

- என்று புரட்சிக்கவிஞர் பாடினாரே அந்தப் பாட்டை வேகமாக முழங்குகிறோம்.

ஆனால் அவற்றை மனதார ஏற்றுக் கொண்டிருக்கிறோமோ என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே மேடையில் ஒன்று, வீட்டிலே ஒன்று, மக்களுக்கு முன்னால் ஒன்று, மறைமுகமாக ஒன்று என்று இல்லாமல் ஜாதி ஒழிந்த ஒரு சமுதாயத்தை, மத வேறுபாடற்ற ஒரு நாட்டை, மத நல்லிணக்கம் வாய்ந்த ஒரு நாட்டை, ஒரு மக்கள் சமுதாயத்தை உருவாக்குவதற்கு நாம் பாடுபட்டால்தான் எத்தனை நல்லத் திட்டங்கள் தீட்டினாலும் அவைகள் ஒழுங்காக மக்களைப் போய்ச்சேர முடியும். கோடிக் கணக்கிலே திட்டங்களைத் தீட்டி அந்தத் திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேர்ந்ததா என்பதைப் பற்றி எண்ணிப் பார்ப்பதா? அல்லது ஜாதிப்பூசல், மதப் பூசல் காரணமாக ஏற்படுகின்ற அமளிகளை ஒடுக்க, சட்டம் ஒழுங்கு அமைதியை நிலைநாட்ட ஒவ்வொருவரும் நாம் அந்த யோசனையிலே ஈடுபடுவதா என்று எண்ணிப் பார்க்கும்பொழுதுதான் மக்களுக்காகத் தீட்டப்படுகின்ற திட்டங்கள், அவர்களுக்குப் போய்ச் சரிவரச் சேர வேண்டுமேயானால் அந்த மக்கள் சமுதாயம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும்; சமத்துவமாக வாழ வேண்டும். அதுதான் இந்த அரசின் குறிக்கோள்.

**சாதி சமய பேதங்களில் விழுந்து நம்மை நாமே கெடுத்துக் கொள்ளக்கூடாது**

தி.மு. கழக அரசு நான் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று 96 முதல் இதுவரையிலே இந்த இரண்டரை ஆண்டுகளில் ஆற்றியிருக்கின்ற பணிகளையெல்லாம் நீங்கள் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். தம்பி கோ.சி. மணி இங்கே குறிப்பிட்டதைப் போல், வீராசாமி குறிப்பிட்டதைப் போல் தம்பி துரைமுருகன் குறிப்பிட்டதைப்போல் மற்றும் அமைச்சர்களாக வீற்றிருக்கின்ற தம்பிமார்களெல்லாம் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற சமுதாய நலத்திட்டங்கள், ஏழை, எளியோர்க்கான திட்டங்கள், பெண்களுக்கான திட்டங்கள், திருமண உதவித்திட்டங்கள், மாணவர்களுக்குப் பேருந்திலே இலவச பஸ்பாஸ் தருகின்ற திட்டமானாலும், இலவச மின்சாரம் இந்தியாவிலே முதன்முதலாக் தமிழ்நாட்டிலேதான் தி.மு.கழக ஆட்சியிலேதான் 89ஆம் ஆண்டு விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இலவச மின்சாரம் வழங்கப்படவில்லை. இப்பொழுதுதான் பஞ்சாப் மாநிலத்திலே தமிழ்நாட்டைப் பின்பற்றி இலவச மின்சாரம் வழங்குகிறார்கள்.

இவ்வளவு காரியங்களைச் செய்கிறோம். இன்னும் சொல்லப் போனால் நீங்கள் என்னைக் கூட நம்ப வேண்டாம். மாவட்டத்திலே, ஒன்றியத்திலே, நீங்கள் சுற்றி வந்தால் எந்த ஊரிலாவது எந்தவொரு வேலையாவது நடந்து கொண்டிருக்கிறதா? இல்லையா? ஒன்று, சாலை போடுவார்கள். அல்லது வாய்க்கால் வெட்டுவார்கள் அல்லது பள்ளிக்கூடம் கட்டுவார்கள். ஒரு பகுதியில் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் நிறைவேறும்; 'நமக்கு நாமே திட்டம்' இன்னொரு பகுதியில் நிறைவேறும். இவைகளெல்லாம் இன்னும் பயன்படுகின்ற வகையிலே மக்களைப் போய்ச் சேர வேண்டுமேயானால் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஜாதி, சமய பேதங்களிலே வீழ்ந்து, நம்மை நாமே கெடுத்துக் கொள்ளக் கூடாது. அதுதான் இந்தத் திட்டங்களின் முழுப் பயனை மக்கள் பெற்றார்கள் என்பதற்கு அடையாளம் என்பதை எடுத்துச் சொல்லி, அந்தப் பயனை நீங்கள் வழங்க வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு அருமைத் தாய்மார்களுக்கும், சகோதரிகளுக்கும், பெரியோர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***– பண்ருட்டித் தொகுதி திருவாமூரில் 12ஆவது சமத்துவபுரத்தை 24-1-1999 அன்று திறந்துவைத்து ஆற்றிய உரை.***

★ ★ ★

# குடியரசு தின விழா

தமிழக அரசின் சார்பில் குடியரசு தின விழா 26.1.99 அன்று சென்னை காமராஜர் சாலையில், காந்தி சிலை முன் எழுச்சியுடன் கொண்டாடப்பெற்றது.

முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் சாலைகளில் கூடிநின்ற பொதுமக்கள் வழங்கிய வரவேற்பையும், வாழ்த்தையும் பெற்றுக்கொண்டு அணிவணக்க மேடை அருகே வந்தார்.

முதலமைச்சரின் வருகையைத் தொடர்ந்து தமிழக ஆளுநர் செல்வி பாத்திமா பீவி அவர்கள், அணி வணக்க மேடை அருகே வருகை தந்தார்.

இதனைத் தொடர்ந்து காலை 8 மணியளவில் ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, தீரச் செயல்புரிந்த தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த இரா. வேல்முருகன், வேலூர் மாவட்டம் வாணியம்பாடியைச் சேர்ந்த செல்வி சுகுணா, செல்வி கவிதா ஆகியோரைப் பாராட்டி ரூ.2000 மதிப்புள்ள அண்ணா வீரப்பதக்கத்தினையும், ரூ.2000 காசோலையையும் அவர்களுக்கு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

மேலும் புதுடெல்லியில் நடைபெற்ற மத நல்லிணக்க மலர்ப் பேரணியில் தமிழகத்தின் சார்பில் பங்கேற்று முதல் பரிசு பெற்ற கலைமாமணி முனைவர் தீ.சோமசுந்தரம் அவர்களின் கலைத் திறமையை பாராட்டும் வகையில், அவருக்கு தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் சிறப்பு விருதினையும், பொற் பதக்கத்தையும் முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.



இந்நிகழ்ச்சியினைத் தொடர்ந்து தரைப்படை, இராணுவம், வான்படை, கப்பற்படை, தேசிய மாணவர் படை, தமிழக காவலர் படை, ரெயில்வே காவலர்படை என அணிவகுத்து வந்த பல்வேறு பிரிவினரின் அணிவகுப்பு மரியாதையை ஆளுநர் அவர்கள் அணிவணக்க மேடையில் நின்று ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து நடன நிகழ்ச்சிகளும், அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பும் நடைப்பெற்றது.

# கன்னியாகுமரி மாவட்டம்

| | |
|---|---|
| தலைநகர் | : நாகர்கோவில் |
| பரப்பு | : 1,684.4 ச.கி.மீ. |
| மக்கள் தொகை | : 16,00,349 |
| ஆண் | : 8,03,839 |
| பெண் | : 7,96,510 |
| வளர்ச்சி விகிதம் (1981–91) | : 11.79% |
| எழுத்தறிவு | : 11,48,778 |
| மக்கள் நெருக்கம் (ச.கி.மீ.) | : 945 |
| பிறப்பு விகிதம் | : 22.5% |
| இறப்பு விகிதம் | : 5.9% |

*நகராட்சி–4*

நாகர்கோவில், குளச்சல், குழித்துறை, பத்மநாபபுரம்.

*சட்டசபைத் தொகுதிகள்–7*

கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல், பத்மநாபபுரம், திருவட்டார், விளவங்கோடு, கிள்ளியூர்.

*பாரளுமன்றத் தொகுதி–1*

நாகர்கோவில் (திருச்செந்தூர் பாராளுமன்றத் தொகுதியில் இம்மாவட்டத்தின் சில பகுதிகள் அமைந்துள்ளன).

*வருவாய் நிருவாகம்*

கோட்டங்கள்—2 : நாகர்கோவில், பத்மநாபபுரம்

வட்டங்கள்—4 : தோவாளை, அகதீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு.

*பேரூராட்சிகள்–67*

1. கன்னியாகுமரி 2. அகஸ்தீஸ்வரம் 3. அஞ்சுகிராமம் 4. அழகப்பபுரம் 5. சுசீந்திரம் 6. மைலாடி 7. தென்தாமரைக்குளம் 8. தேரூர் 9. கொட்டாரம் 10. மருங்கூர் 11. தாழக்குடி 12. அழகியபாண்டியபுரம் 13. ஆரல்வாய்மொழி 14. பூதப்பாண்டி 15. தர்மாபுரம் 16. கணபதிபுரம் 17. மேலச்சங்கரன்குழி 18. ராஜாக் கமங்கலம் 19. ஆசாரிப்பள்ளம் 20. புத்தளம் 21. தெங்கம்புதூர் 22. திங்கள்நகர் 23. மண்டைக் காடு 24. வெள்ளிமலை 25. வில்லுக்குறி 26. ஆளூர் 27. மணவாளக் குறிச்சி 28. ரீத்தாபுரம் 29. கல்லுகூட்டம் 30. நெய்யூர் 31. வெள்ளிச்சந்தை 32. இரணியல் 33. குமாரபுரம் 34. கோதைநல்லூர் 35. முளகுமூடு 36. நுள்ளிவிளை 37. திருவிதாங்கோடு 38. கப்பியறை 39. வாள்வச்சான் கோட்டம் 40. விளாவூர் 41. திக்கணங்கோடு 42. ஆத்தூர் 43. பொன்மனை 44. பேச்சிப்பாறை 45. திற்பரப்பு 46. திருவட்டார் 47. வேர்க்கிளம்பி 48. காட்டாத்துறை 49. குலசேகரம் 50. பழுகல் 51. இடைக்கோடு 52. கடையால் 53. பாகோடு 54. களியக்காவிளை 55. அருமனை 56. விளத்துறை 57. புதுக்கடை 58. பைங்குளம் 59. மெதுகும்மல் 60. கொல்லங்கோடு 61. ஏழுதேசம் 62. பாலப்பள்ளம் 63. நல்லூர் 64. கிள்ளியூர் 65. கருங்கல் 66. கீழக்குளம் 67. உண்ணாமலைக்கடை.


ஊராட்சி ஒன்றியம் – 9, ஊராட்சி – 88.

***1) அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம்***

ஊராட்சிகள் – 13: 1. இரவிபுதூர் 2. கோவளம் 3. குலசேகரபுரம் 4. கரும்பத்தூர் 5. கரியமாணிக்கப்புரம் 6. லீபுரம் 7. மகாராஜபுரம் 8. வடக்கு தாமரைக்குளம் 9. நல்லூர் 10. பஞ்சலிங்கபுரம் 11. ராமபுரம் 12. சுவாமித்தோப்பு 13. தேரேகால்புதூர்

***2) ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம்***

ஊராட்சிகள் – 12: 1. அத்திக்காட்டுவிளை 2. எல்லூவிளை 3. காந்திபுரம் 4. கணியாகுளம் 5. கேசவன் புத்தன்துறை 6. மேலக்கிருஷ்ணன் புத்தூர் 7. மணக்குடி 8. வடக்குசூரங்குடி



9. புத்தேரி 10. பெரு விளை 11. ப்றக்கை 12. பள்ளம்துறை.

*3) தோவாளை ஊராட்சி ஒன்றியம்*

ஊராட்சிகள் – 16: 1. அருமநல்லூர் 2. பூமநகரி 3. செண்பகராமன்புதூர் 4. தெரிசனங்கோப்பு 5. ஈசாந்திமங்கலம் 6. இறச்சகுளம் 7. ஞாலம் 8. கடுக்கரை 9. காட்டுபுதூர் 10. மாதவலையம் 11. சகாயநகர் 12. தடிக்காரன் கோணம் 13. திடல் 14. திருப்பதிசாரம் 15. தெள்ளாந்தி 16. தோவாளை

*4) பத்மநாபபுரம் ஊராட்சி ஒன்றியம்*

ஊராட்சிகள் – 8: 1. இனயம் புத்தன்துறை 2. கொல்லஞ்சி 3. மத்திக்கோடு 4. மிடாலம் 5. முள்ளங்கினவிளை 6. நட்டாலம் 7. பலூர் 8. திப்பறமலை

*5) குருத்தன்கோடு ஊராட்சி ஒன்றியம்*

ஊராட்சிகள் – 8: 1. சுக்கோட்டுதலை 2. கட்டி மாங்கோடு 3. குருந்தன்கோடு 4. முட்டம் 5. நட்டான்கோடு 6. சைமன் காலனி 7. தலக்குளம் 8. தென்கரை

*6) மேல்புரம் ஊராட்சி ஒன்றியம்*

ஊராட்சிகள் – 10 : 1. தேவிகோடு 2. மலயாடி 3. மாங்கோடு 4. மஜலுமூடு 5. மருதங்கோடு 6. முழுக்கோடு 7. புலியூர்சாலை 8. வன்னியூர் 9. வெல்லம்கோடு 10. விளவங்கோடு

*7) முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம்*

ஊராட்சிகள் – 8 : 1. அடைக்காக்குழி 2. சுழல் 3. குளப்புறம் 4. மங்காடு 5. முஞ்சிறை 6. நடைக்காவு 7. தூத்தூர் 8. வாவரை

*8) திருவட்டார் ஊராட்சி ஒன்றியம்*

ஊராட்சிகள் – 8: 1. ஆயக்கோடு 2. அருவிக்கரை 3. பாலமோர் 4. செருகோல் 5. குமரன்குடி 6. கண்ணனூர் 7. சுருளோடு 8. ஏத்தக்கோடு

*9) தக்கலை ஊராட்சி ஒன்றியம்*

ஊராட்சிகள் – 5: 1. அதிவிளை 2. சடையமங்கலம் 3. கல்குறிச்சி 4. முத்தலக்குறிச்சி 5. மருதூர் குறிச்சி

*கல்வி*

பள்ளிகள்–701. கல்லூரிகள்–16.

*தொழிற்சாலைகள்*

இந்திய அருமண் தொழிற்சாலை, மணவாளக் குறிச்சி: கயிற்றுப் பாய் மற்றும் தரை விரிப்புகள், அம்மாண்டிவிளை: கன்னியாகுமரி நூற்பாலை, ஆரல்வாய்மொழி

> சாதிக்குள் திருமணங்கள் நடப்பதே,
> சாதிகள்
> அழியாமல் இருப்பதற்குக் காரணம்.
>
> – அம்பேத்கர்

*விவசாயம்*

நெல், தேங்காய், பருப்பு வகைகள், காய்கறிகள், வாழைப் பழங்கள், ரப்பர், தேயிலை, முந்திரிப்பருப்பு முக்கிய விளைபொருட்கள்

*ஆறுகள்*

பழையாறு, பறளியாறு, கோதையாறு

*மழையளவு*

சராசரி 1,456 மி.மீ.

*சான்றோர்கள்*

அதங்கோட்டாசான், கவிமணி தேசிக வினாயகம் பிள்ளை, சதாவதானி செய்குத்தம்பி பாவலர், பொதுவுடமை வீரர் ஜீவானந்தம், நேசமணி, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்.

*வழிபாட்டிடங்கள்*

பகவதியம்மன் கோவில், கன்னியாகுமரி; தாணுமாலையன் கோவில், சுசீந்திரம்; நாகராஜாகோவில், நாகர்கோவில்; பகவதியம்மன் கோவில், மண்டைக்காடு; சவேரியார் கோவில், கோட்டாறு; ஞானி பீர்முஹமது மசூதி, தக்கலை

*சுற்றுலாத் தலங்கள்*

கன்னியாகுமரி, தக்களை பத்மநாபபுரம் அரண்மனை, சுசீந்தரம், திற்பரப்பு அருவி, பேச்சிப்பாறை அணைக்கட்டு, வட்டக்கோட்டை

*வரலாறு*

கேரளத்தின் ஒரு பகுதியாய் இருந்த இம்மாவட்டம் 1956 நவம்பர் ஒன்றாம் தேதி தமிழ்நாட்டுடன் இணைந்தது.

*அமைவிடம்*

தமிழகத்தின் தென்கோடி முனையில் அமைந்துள்ளது. கிழக்கிலும், வடக்கிலும் திருநெல்வேலி மாவட்டம்; மேற்கில் கேரள மாநிலம் மற்றும் தெற்கில் இந்துப் பெருங்கடல், 68 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைக் கொண்டது.


# குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை


– மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர்

திரு. **வ. முல்லைவேந்தன்**

முக்கடல் சந்திக்கும் குமரிமுனையில், வான்புகழ் வள்ளுவருக்கு வான் முட்டும் சிலை அமைக்கும் முடிவு 1975ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையில் கூடிய அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்டது. கன்னியாகுமரியில் கடலிலுள்ள பாறையில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்கு அருகில் உள்ள பாறையின் மீது 133 அடி உயரமுள்ள சிலை எடுக்கப்படும் என்று







மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள்.

சிலை அமைப்புக்கான ஆயத்த பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது 1976ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் கலைஞர் அவர்களின் தலைமையில் சிறப்புடன் நடைபெற்ற தமிழ்நாடு அரசு கலைக்கப்பட்டது. அதன்பிறகு சிலை அமைப்புப் பணி தொய்வடைந்து, 1976ஆம் ஆண்டிற்கு பிறகு 1989ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மூன்றாவது முறையாக முதலமைச்சராக கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இப்பணிக்கான ஆய்வு நடத்தப்பட்டது. திருவள்ளுவர் சிலை அமைக்கின்ற பாறையின் தன்மை, திருவள்ளுவர் சிலையை தாங்கும் திறன் போன்றவை ஆய்வு செய்யப்பட்டன. இத்திட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் என்பதால் நியூயார்க்கில் உள்ள சுதந்திரதேவி சிலை போன்று கட்டுமானப்பணிகள் தொழில்நுட்பத் திறன் கொண்டதாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

அரசின் சார்பில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் மூலம் திருவள்ளுவர் சிலையினைக் கருங்கல்லால் அமைப்பது ஏற்புடையது என்றும், இந்தியக் கலாச்சாரத்திற்கு ஏற்புடையதாயிருக்கும் என்றும் கருதப்பட்டது. இது குறித்துப் பொதுப்பணித்துறையைச் சார்ந்த அலுவலர்கள் கொடுத்த அறிக்கையை அரசு ஆராய்ந்து, பின் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை கன்னியாகுமரி கடற்பாறையில் கருங்கல்லில் அமைத்திடும் ஆயத்தப் பணிகள் தொடங்கப் பட்டன.

திருவள்ளுவர் சிலை வடிவமைக்கின்ற பணியினைச் சென்னை திரு.கணபதி ஸ்தபதி அவர்களைக் கொண்டும், திருவள்ளுவர் சிலை அமைக்கின்ற பாறையினை சமன் செய்தல், கடற்கரையிலிருந்து சிலை அமைக்கின்ற இடத்திற்கு சிலைக்கான செதுக்கப்பட்ட கற்களை எடுத்துச் செல்லுதல் மற்றும் திருவள்ளுவர் சிலையினை அமைப்பதற்கான பொருட்கள் எடுத்துச் செல்லுதல் போன்ற பணிகளை தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூலமும் மேற்கொள்ள அரசு முடிவு எடுத்தது.

இதன்படி, 133 அடி உயர திருவள்ளுவர் சிலையினைக் கருங்கல்லால் வடிவமைப்பதற்கு திரு.கணபதி ஸ்தபதி அவர்களுக்கு ரூ.360.15 இலட்சமும், தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்காக ரூ.137.50 இலட்சமும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன.

1990ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 6ஆம் நாள் கன்னியாகுமரியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திருவள்ளுவர் சிலையை அமைக்கின்ற பணியினைத் தொடங்கி வைத்தார்கள். அதன்பின் திருவள்ளுவர் சிலை வடிவமைப்பதற்கான பணிகள் 27–1–1991 முதல் தொடங்கப்பட்டன.

திருவள்ளுவர் சிலையின் விவரம் :

திருவள்ளுவர் சிலையின் பீடத்தின் உயரம் : 38 அடி

பீடத்தின் மேல் சிலையின் உயரம் : 95 அடி

ஆகமொத்தம் சிலையின் உயரம் : 133 அடி ஆகும்.

திருவள்ளுவர் சிலை வடிவமைப்பதற்குத் தேவையான செதுக்கப்பட்ட கற்களின் எண்ணிக்கை : 3,681

133 அடி உயர திருவள்ளுவர் சிலையின் மொத்த எடை 7000 டன்.

ஒரு கல்லின் சராசரி எடை 3 டன் முதல் 8 டன் வரை இருக்கும்.

திருவள்ளுவர் சிலைக்குத் தேவையான கற்கள் செதுக்குகின்ற பணிகள் தமிழ்நாட்டில் சென்னை சோழங்கநல்லூர், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி ஆகிய மூன்று இடங்களில் நடைபெற்று



வருகின்றன. 1990ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தொடங்கப்பட்ட இப்பணிகள் 1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு மே திங்கள் வரையிலான காலத்தில் மிகவும் தொய்வடைந்து பணிகள் நின்றுவிட்ட நிலையில் இருந்தன.

மாண்புமிகு முதலமைச்சராக கலைஞர் அவர்கள் மீண்டும் 4ஆவது முறையாகப் பொறுப்பேற்றதும், 25-6-1997 அன்று அவரது தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் 1999ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணிகளை முடித்திட முடிவு செய்யப்பட்டது. திரு.கணபதி ஸ்தபதி' அவர்கள் மேற்கொண்டு வருகிற சிலையமைப்புப் பணிகளுக்குத் திருத்திய செலவின மதிப்பீடு ரூ.614 இலட்சமும், தமிழ்நாடு கட்டுமானப்பணிகள் கழகத்திற்குரிய திருத்திய செலவின மதிப்பீடு ரூ.172 இலட்சமும் வழங்க 30-7-1997 அன்று அரசு அங்கீகரித்தது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 18-4-1998 அன்று கன்னியாகுமரிக்கு வருகை தந்து சிலையமைப்புப் பணிகளை நேரில் பார்வையிட்டுப் பணிகளை விரைவுபடுத்திட அறிவுரைகள் வழங்கினார்கள்.


நானும், செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் உயர் அலுவலர்களும் அவ்வப்போது பணிகளை நேரடியாக ஆய்வு செய்து பணிகள் தொய்வின்றி நடைபெற முடுக்கி விடப்பட்டுள்ளன.

133 அடி உயரத்தில் அமைக்கப்படுகின்ற திருவள்ளுவர் சிலைக்கான பீடத்திற்கான உயரம் 38 அடி உயரப் பணிகள் முடிக்கப்பட்டு, பீடத்தின் மேல் வைக்கப்பட்டுள்ள 95 அடி உயர சிலைக்கான பணிகளில் தற்போது 20 அடி உயரப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 133 அடி உயரத்தில் அமைக்கின்ற சிலைக்கான பணியில் இதுவரையில் 58 அடி உயர பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

1999ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் குமரிமுனையில் குறள் ஆசானின் 133 அடி உயரசிலை அமைக்கின்ற பணிகள் முடிக்கப்படும்.

★ ★ ★

# கண் கவரும் கன்னியாகுமரி




**திரு. என். சுரேஷ் ராசன்**
**மாண்புமிகு**
**சுற்றுலாத்துறை**
**அமைச்சர்**

குமரி மாவட்ட மலராக "தமிழரசு" வெளிவருவதற்கு என் வாழ்த்தையும் மகிழ்ச்சியையும் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவாங்கூர் சமஸ்தானத்திலிருந்து இப்பகுதி 1956ஆம் ஆண்டு தமிழ்நாட்டோடு இணைக்கப்பட்டு, தனி மாவட்டமாக அமைக்கப்பட்டது. இதன் தலைநகர் நாகர்கோவில். நான்கு வட்டங்கள் கொண்ட சிறிய மாவட்டமாகும்.

இந்தியாவில் மொழிவாரி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டதற்கு பின்புதான் கன்னியாகுமரி மாவட்டம், தாய்த் தமிழகத்தோடு சேர்ந்தது. தாய்த் தமிழகத்தோடு சேர்வதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் அதில் முக்கியக் காரணம், மொழியும் ஒரு காரணம் என்பதை கன்னியாகுமரியின் வரலாற்றை ஊன்றிப் படித்தவர்கள் நன்றாக அறிவார்கள்.

இந்த மாவட்டத்தின் பெயரை உச்சரிக்காத இந்தியர்கள் இருக்கமாட்டார்கள். "இமயம் முதல் குமரி வரை" என்ற சொற்றொடரை பயன்படுத்தாதவர்கள் இருக்க முடியாது. இந்தியாவின் தென்கோடியில் அமைந்துள்ள குமரிமுனையின் மிகப் பெரிய சிறப்பு இந்துமாக்கடல், அரபிக் கடல், வங்காளக் கடல் இம்மூன்றும் சந்திக்கின்ற இடமாகக் காட்சி அளிப்பது தான். இதைத்தான் முக்கடல் முத்தமிட, முத்தமிழ் தவழ்ந்திட குமரித் தெய்வம் கொலுவீற்றிருக்கும் கன்னியாகுமரி என்று தமிழார்வம் கொண்டவர்கள் பேசுவார்கள்.





சுற்றுலாப் பயணிகள் பெரும்பாலும் உல்லாசமாக இன்பப் பொழுது போக்குவதற்காக கடற்கரை, குன்று, அருவி, ஏரி, விலங்குகள் நிறைந்த காடு, பள்ளத்தாக்கு, வரலாற்று நினைவுச்சின்னம் ஆகியவற்றை கண்டு களிக்கின்றனர்.

மேற்கூறிய அத்தனை அம்சங்களும் கொண்ட சுற்றுலா மையம்தான் 'கன்னியாகுமரி'.


இயற்கையழகு கொஞ்சும் குமரி முனையில் பௌர்ணமி நாளில் கீழ்க் கடலில் முழுநிலவு உதிக்கும்போது, மேற்கடலில் சூரியன் அஸ்தமிக்கும் அற்புதக்காட்சியினை ஒரே நேரத்தில் காணமுடியும்.

கன்னியாகுமரி, எல்லா சிறப்புக்களைவிட, இது ஒரு "சுற்றுலா மையம்" என்பதே ஒரு சிறப்பாகும். ஒரு இடம் அல்லது மையம் சுற்றுலா முக்கியத்துவம் பெற வேண்டுமென்றால் அந்த இடம் ஏதாவது ஒரு வகையில் சிறப்பிடம் வகிக்க வேண்டும். ஒன்று பயணியரைக் கவரும் வரலாற்றுச் சின்னம் அங்கு இருக்க வேண்டும் அல்லது கவர்ச்சி மிக்க இயற்கை எழில் கொண்டதாக இருக்க வேண்டும் அல்லது வழிபடக்கூடிய புனிதத் தலமாக இருக்க வேண்டும். சுற்றுலா முக்கியத்துவம் உள்ள ஓரிடத்தில் உண்ண, உடுக்க, தங்க, ஓய்வெடுக்கத்தக்க வசதிகள் நிறைந்த தங்கும் விடுதிகளும், உணவகங்களும் இருத்தல் அவசியமாகிறது. இவைகள் தவிர வேறுசில சிறப்புக் கூறுகளும் சுற்றுலா மையத்தைச் சிறப்படையச் செய்கின்றன. அவற்றுள் மகிழ்ச்சியூட்டும் தட்பவெப்ப நிலை, கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும் இயற்கைக் காட்சிகள், வரலாற்று – பண்பாட்டுப் பெருமை, இனிய மனங்குளிரும் வாழ்க்கை வசதிகள், அவ்விடத்திற்கு எளிதில் செல்லக்கூடிய வசதி ஆகியன மிகவும் குறிப்பிடத் தக்கனவாகும்.

கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும் இயற்கைக் காட்சி கடற்கரைக்குச் சற்று தூரத்தில் கடல் நீரில் இரட்டைப் பாறைகள் உள்ளன. ஒரு பாறையின் மீது, இந்தியாவின் பண்பாட்டை அமெரிக்காவில் பெருமைபடுத்திய புகழுக்குரிய பெரு மனிதர் சுவாமி விவேகானந்தர் மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல விவேகானந்தர் தவம் செய்து மோட்சம் சென்றார் என்ற பேச்சும், குமரி அம்மன் தவம் செய்த பாதம் பதிந்த இடம் என்ற பெருமைக்குரிய பேச்சும் உள்ள இடத்தைப் பயணிகள் பார்க்க, கடலில் செல்ல வேண்டிய ஒரு மகிழ்ச்சியான கப்பல் பயணம். இதனால் கோடிக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து போவதும், இந்தப் பாறையைப் பற்றி உலகம் முழுவதும் பேசுவதும் இதன் சிறப்பு.

இத்தகைய இயற்கைக் காட்சி அமைந்த இன்னொரு பாறையில் மேலும் சுற்றுலா பயணிகளைக் கவர்ந்திழுக்க, எங்கள் இலக்கிய வேந்தர், சங்கத் தமிழைச் சாமானியனும் படிக்க எளிமை காட்டி எழுதிய எழுத்தோவியர்; அது போல உலக பொது மறை நூல் என்ற பெருமை பேசக்கூடிய திருக்குறளை பயணிகள் பயணம் செய்யும் பேருந்துகளில் படிக்க வைத்தவர்; அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் இந்த முப்பாலையும் ஆண்பால், பெண்பால் அனைவரும் நின்று நிதானித்துப் படித்துப் பயன்பெற கோட்டம் கட்டியவர், ஆமாம் வள்ளுவர் கோட்டம் கட்டியவர் கலைஞர். அவர் ஆணைப்படி அந்த வான்புகழ் கொண்ட வள்ளுவருக்கு, இன்னொரு



பாறையில் வானளாவிய சிலை அமைக்கும் அதற்கான பணிகள் விரைந்து நடைபெற்று கொண்டிருக்கின்றன.

இந்திய அளவில், தமிழகம் அயல்நாட்டுப் பயணிகளைப் பெருமளவு கவர்ந்திழுக்கும் மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. தமிழ்நாடு இந்தியாவில் சுற்றுலா வளர்ச்சியில் மூன்றாவது இடத்தை எட்டியுள்ளது.

அதுவும் குறிப்பாக, கன்னியாகுமரி அயல்நாட்டு பயணிகளை அதிகமாக கவர்ந்திழுக்கும் இடமாகும். இந்த இயற்கைப் பாறையில் கட்டப்பட்டிருக்கும் விவேகானந்தர் சிலை அமையப் பெற்று எப்படி புகழ் பாடுகிறதோ 'அதே போல் இந்த வள்ளுவர் சிலையும் புகழ்பாடும்'. அந்தப் புகழைப் பாடவைத்த நம் தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் புகழும் பெருமையும் குமரிக் கடலின் அலையோசையை போல் நீங்காமல் பாடும், இந்தப் புகழ் மகுடம் தமிழ் தாய்க்கு வைத்த மகுடம் என்று சொன்னால் ஒவ்வொரு தமிழனும் பெருமைப்பட வேண்டும்.

அயல்நாட்டுப் பயணிகள், உள்நாட்டுப் பயணிகள் பேசுவது மட்டுமல்ல. அந்த மாவட்டத்து மக்களும் பேசுகின்ற சாதனைகளை கலைஞர் அரசு செய்துள்ளது. ஆம். மேல்மணக்குடி, கீழ்மணக்குடி இந்த இரண்டு ஊர்களில் வாழ்கின்ற மீனவச் சமுதாய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பாலம் அமைக்க ரூ.4 கோடி ஒதுக்கி, அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அது மட்டும் இல்லாமல் ஒரு ரப்பர் தொழிற்சாலை வேண்டும்; ஒரு மருத்துவக் கல்லூரி இவைகள் வேண்டும் என்பதும் இந்த மக்களின் கோரிக்கை. அதற்கான வேலைகளும் நடைபெற்று வருகிறன.

இங்கு குளச்சலில் ஒரு துறைமுகம் அமைக்க வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் நீண்ட நாள் அவா. அதையும் அமைக்க வேண்டும் என்பதற்காக நம் தமிழக முதல்வர் அவர்கள் இவ்வாண்டு (1999) ஜனவரியில் சிங்கப்பூர் பயணம் மேற்கொண்டபோது அங்குள்ள அரசாங்கத்திடம் இத்திட்டத்தைத் தெரிவித்து அதைச் செயல்படுத்திட பங்கேற்குமாறுக் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

நீர்வளம், நிலவளம் கொண்ட இயற்கை எழில்கொஞ்சும் மாவட்டம் இது. முக்கடல், முத்தமிழ், முக்கனி, (மா, பலா, வாழை) இம்மாவட்டத்தின் தனிச் சிறப்புகளாகும். இம்மாவட்டத்தில் அறிஞர்கள் ஆழ்ந்தச் சிந்தனையாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் பிறந்து பல்வேறு ஊர்களில் வாழ்ந்தாலும், இந்த குமரி மண்ணுக்கு பெருமை சேர்க்கின்ற பெருந்தகை யாளர்களாக வாழ்ந்து வருகிறார்கள். மறைந்தும் மறையாதவர்களாக இன்றும் என்றும் போற்றக்கூடியவர்களாக இம்மாவட்டத்திற்குப் புகழ் சேர்க்கிறார்கள்.

★ ★ ★

# வளர்ச்சிப் பாதையில் கன்னியாகுமரி மாவட்டம்

**வை. பாண்டியன் இ.ஆ.ப.**
மாவட்ட ஆட்சியர்

கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ளது. இம்முகமையின் மூலம் 1996–97, 1997–98 & 1998–99ஆம் ஆண்டுகளில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், இந்திரா குடியிருப்புத் திட்டம், நமக்கு நாமேத் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மாவட்ட பன்முகப்படுத்தப்பட்டத் திட்டம், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினரது தொகுதி மேம்பாடுத் திட்டம், மாநில நிதிக்குழுத் திட்டம், பத்தாவது நிதிக்குழுத் (மாவட்ட ஊராட்சி) திட்டம், புகையில்லா அடுப்பு மற்றும் சாண எரிவாயு கலன் அமைக்கும் திட்டம், கிராமப்புறங்களில் மத்திய ஊரக சுகாதார கழிப்பிடம் கட்டுதல், கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடுத் திட்டம், கிராம இளைஞர்களுக்குச் சுயவேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம், கைவினைஞர்களுக்குத் தொழிற்கருவிகள் வழங்குதல் ஆகியத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### *ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்*

இத்திட்டம் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும், ஊராட்சித் தலைவர்கள் மூலமாகவும் செயல்படுத்தப் படுகின்றன. இவ்வேலைகளை ஊராட்சித் தலைவர்கள், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்கின்றனர். 96–97ஆம் ஆண்டிலிருந்து இதுநாள் வரை மொத்தம் ரூ.16 கோடி மதிப்பீட்டில் 2,254 வேலைகள் எடுக்கப்பட்டு 1431 வேலைகள் ரூ.14 கோடி செலவில் முடிக்கப் பட்டுள்ளன. மீதமுள்ள அனைத்து வேலைகளையும் இந்நிதியாண்டிற்குள் முடிக்கத் திட்டம் வகுக்கப் பட்டுள்ளது.

### *வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்*

வேலையற்ற ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்திட உதவும் திட்டம் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம். இத்திட்டத்தில் 1997–98ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை மொத்தம் 898 வேலைகள் ரூ.11¼ கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. ரூ.9 கோடி செலவில் 542 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இதர வேலைகள் அனைத்தும் இந்நிதியாண்டிற்குள் முடிக்கப்படும்.

### *இந்திரா குடியிருப்புத் திட்டம்*


இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நலிவடைந்த பிரிவினருக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டி கொடுத்தலாகும். இத்திட்டத்தில் 1996–97ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை மொத்தம 1384 பயனாளிகளுக்கு ரூ.302 இலட்சம் செலவில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் மலைசாதியினர் மற்றும் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதர இன மக்களுக்கும் தகுதியின் அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது. ரூ.32,000 மதிப்பீட்டில் கழிவறையுடன் கூடிய வீடாக கட்டப்படுகிறது. கட்டப்படும் அனைத்து வீடுகளுக்குப் புகையில்லா அடுப்பு அமைத்து தரப்படுகிறது.

### *மில்லியன் கிணறுத் திட்டம்*

இத்திட்டத்தில் 1996–97 முதல் 1998–99ஆம் ஆண்டு வரை மொத்தம் 89 சிறு பாசன வேலைகள் எடுக்கப்பட்டு 88 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இதற்கு ரூ.92.32 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு 90 சதவிகிதம் தொகை செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### *ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்*

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களின் ஏழ்மை நிலையைப் போக்க நிலையான வருவாய் அளிக்கும் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி கிராம மக்களின் வறுமை நிலையை நீக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தில் ஒரு நபருக்கு 6000 ரூபாய்க்கு மிகாமல் மானியக் கடன் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் மலை சாதியினருக்கு 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படுகிறது. பிற இனத்தவர்களுக்கு 33.33 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ்பட்ட மக்கள் பயனடையத் தேர்வு செய்யப்படுகின்றனர்.



ஒவ்வொரு ஆண்டும் நிதியாண்டு ஆரம்பத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டக்குழு சம்பந்தப்பட்ட ஊராட்சி தலைவர் தலைமையில் உறுப்பினர்களுடன் அரசு பிரதிநிதி முன்னிலையில் பயனாளிகள் தேர்வு செய்கிறது. இத்திட்டத்தில் 1996–97 முதல் இந்நிதியாண்டு வரை 15,864 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு 15,296 நபர்களுக்கு ரூ.5 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

### நமக்கு நாமே திட்டம்

இத்திட்டம் 1997–98ஆம் நிதியாண்டில் இருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முழுமையான நோக்கம் "தனக்குதானே உதவி" என்பதாகும். ஒவ்வொரு கிராம மக்களும் தங்களுடைய கிராம சபை கூட்டத்தின்போது தங்களுடைய கிராமத்திற்கு எந்தெந்த வேலைகள் தேவை என்பதைச் சரியாக உணர்ந்து தாங்களாகவே தேர்வு செய்து பொதுமக்கள் பங்கு தொகையுடன் முடிக்கும் ஒரு உன்னதமானத் திட்டமாகும். இத்திட்டத்தின் மக்கள் பங்கு தொகை 25 சதவிகிதம் கண்டிப்பாக இருக்கவேண்டும். மீதமுள்ள 75 சதவிகிதமும் அரசுப் பங்குத் தொகையாக அமையும். மக்கள் பங்குத் தொகை என்பது பணமாகவோ பொருளாகவோ அல்லது மனித சக்தியாகவோ அமையலாம். இத்திட்டத்தில் மக்கள் தங்கள் கிராமத்திற்கு எந்த வகையான வேலைகள் தேவைப்பட்டாலும் தேர்வு செய்து செயல்படுத்தலாம். இத்திட்டத்தில் 1997–98ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை 133 வேலைகள் ரூ.29 இலட்சம் மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு 61 வேலைகள் ரூ.17.63 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 7 சட்டமன்ற தொகுதிகள் அடங்கியுள்ளன. சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதி உறுப்பினர்கள் அவரவருடைய தொகுதியில் அதிகமான மக்கள் தொகை கொண்ட கிராம ஊராட்சியை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் திட்டங்களை செயல்படுத்த தேர்வு செய்வார். 1997–98 முதல் 98–99ஆம் ஆண்டு வரை மொத்தம் 14 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட ஊராட்சிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் செய்து முடிக்கப் பெரும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இதுநாள் வரை ரூ.5.57 கோடி மதிப்பீட்டில் 660 வேலைகள் தேர்வு செய்யப்பட்டு ரூ.3.28 கோடி செலவில் 315 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அனைத்து வேலைகளும் இந்நிதி ஆண்டிற்குள் முடிக்கப்படும்.

### மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட திட்டம்

இத்திட்டம் ஊரகப் பகுதிகளிலும் நகர்ப்புறத்திலும் செயல்படுத்தப்படுகிறது. ஊரகப் பகுதிகளில் இத்திட்டத்தில் அனைத்து வேலைகளையும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர் பரிந்துரையின்பேரில் தேர்வு செய்யப்படுகின்றன. கிராம ஊராட்சிகளுக்கு 60 சதவிகிதத் தொகையும், நகர்ப்புற ஊராட்சிகளுக்கு 40 சதவிகிதத் தொகையும் விடுவிக்கப்படுகின்றன. நகர்ப்புறங்களுக்கு அந்தந்த மன்றங்களின் தேவையைக் கருத்தில்கொண்டு மாவட்ட ஆட்சியரால் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட அனைத்து வேலைகளுக்கும் மன்ற அங்கீகாரத்துடன் நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 1997–98 ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை 464 வேலைகள் ரூ.5.44 கோடி மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு 335 வேலைகள் ரூ.6.10 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. இதர வேலைகள் அனைத்தும் இந்நிதியாண்டிற்குள் முடிக்கப்படும்.

### நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடுத் திட்டம்

இத்திட்டத்தில் ஒரு பாராளுமன்ற/ராஜ்ய சபை உறுப்பினர்களுக்கு ஒரு நிதியாண்டிற்கு ரூ.1 கோடி அவரவர் தொகுதி மேம்பாட்டிற்கு வழங்கப்படுகிறது. தற்போது இத்தொகை ரூ.2 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற–ராஜ்ய சபை உறுப்பினர்கள் அவரவர் தொகுதி மேம்பாட்டிற்குத் தேவையான வேலைகளைப் பரிந்துரை செய்வதன் அடிப்படையில் வேலைகள் செயல்படுத்தப்படுகின்றன. 1996–97 முதல் இதுநாள் வரை இம்மாவட்டத்தில் ரூ.9.13 கோடி மதிப்பீட்டில் 848 வேலைகள் தேர்வு செய்யப்பட்டு 335 வேலைகள் ரூ.6.06 கோடி செலவினத்தில் முடிக்கப்பட்டுள்ளன.

### சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம்

தமிழ்நாட்டில் தான் இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த ஆண்டில் அறிவிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகிறது. 1997–98ம் ஆண்டிற்கு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ரூ.25 இலட்சமும் 1998–99ம் ஆண்டிற்கு 35 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இம்மாவட்டத்தில் 7 சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகள் அடங்கியுள்ளன. சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களின் தொகுதிக்குத் தேவையான வேலையை பரிந்துரை செய்வதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் ஒப்புதல் அளித்து சம்பந்தப்பட்ட துறை மூலம் பணிகள் எடுத்து முடிக்கப்படுகின்றன.

1997–98ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை இத்திட்டத்தில் மொத்தம் 358 வேலைகள் ரூ.4.20 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 150 வேலைகள் ரூ.3.14 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

### *மாநில நிதிக்குழு திட்டம்*

மாவட்ட ஊராட்சிகளுக்கு மாநில நிதிக்குழு பரிந்துரை அடிப்படையில் நிதி வழங்கப்படுகிறது. அதன்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் செயல்படுத்தப்படும் வேலைகளை மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் ஊராட்சி உறுப்பினர் பரிந்துரையின் பேரில் எடுக்கப்படுபவை. இத்திட்டம் இம்மாவட்டத்தில் 1997–98ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ரூ.28.58 இலட்சம் மதிப்பீட்டில் 43 வேலைகள் எடுக்கப்பட்டு ரூ.1.8 இலட்சம் மதிப்பீட்டில் 5 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. அனைத்து வேலைகளும் 31.3.99க்குள் முடிக்க திட்டம் வகுக்கப் பட்டுள்ளது.

### *10வது நிதிக்குழு (மாவட்ட ஊராட்சி)*

இத்திட்ட வேலைகளும் மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் ஊராட்சி உறுப்பினர் பரிந்துரையின்பேரில் எடுக்கப்படுபவை. இத்திட்டத்தில் 1996–97 மற்றும் 1997–98ஆம் ஆண்டிற்கு 100 வேலைகள் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 84 வேலைகள் முடிக்கப் பட்டுள்ளன.

### *புகையில்லா அடுப்பு மற்றும் சாண எரிவாயு கலன் அமைக்கும் திட்டம்*

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமச் சுற்றுப்புறம் மாசுபடுவதை தடுக்கும் நோக்கமாகும். அதனடிப்படையில் கிராமப்புற பகுதிகளில் அமைந்துள்ள வீடுகளுக்கு இதுவரை 6540 சூளா அடுப்புகள் ரூ.2.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

கரிமவாயு கலன் அமைக்கும் திட்டம் அல்லது சாண எரிவாயு அடுப்பு திட்டத்தில் பயனடைய குறைந்தது பயனாளிகளுக்கு 2 மாடுகள் இருத்தல் அவசியம். இத்திட்டத்தில் அதிகபட்சமாக ரூ.10,000 கடன் வழங்கப்படுகிறது. இதில் ரூ.2200 மானியத்தொகையாகும். இத்திட்டத்தின் மூலம் எரிபொருள் சேமிக்கப்படுவதுடன் சுற்றுப்புறச் சுகாதாரம் கெடாமல் பாதுகாக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் 1996–97 ஆம் ஆண்டு முதல் 1998 டிசம்பர் மாதம் முடிய 120 கலன்கள் ரூ.2.8 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

### *மத்திய ஊரகச் சுகாதாரத் திட்டம்*

இத்திட்டத்தில் கிராமப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குக் கழிவறை கட்டிக் கொடுக்கப்படுகின்றன. மேலும் அரசு பள்ளிகளுக்கும் கழிவறைகள் கட்டிக்கொடுக்கப் படுகின்றன. தனி நபர் கழிவறை கட்ட அரசு மானியமாக ரூ.2000 வழங்குகிறது. பள்ளிகளுக்குக் கழிவறை கட்ட அரசு 70% பங்குத் தொகையும் வழங்குகிறது. மீதமுள்ள 30% தொகையை சம்பந்தப்பட்ட பெற்றோர் ஆசிரியர் சங்கம் பங்குத் தொகையாக வழங்கவேண்டும்.



*மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட புத்தேரி சாலை உடைப்பைப் பார்வையிடுகிறார். மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. சுரேஷ் ராசன் அவர்கள் உடன் உள்ளார்.*

இத்திட்டத்தில் 1996–97 முதல் 1998–99ஆம் ஆண்டிற்கும் 56 பள்ளி கழிப்பிடங்கள் எடுக்கப்பட்டு 32 கழிவறைகள் ரூ.13.5 இலட்சம் செலவினத்தில் முடிக்கப்பட்டுள்ளன.

### கிராமப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (டோக்ரா)

இத்திட்டத்தில் ஒரே தொழில் தெரிந்த நபர்கள் குறைந்தது 15 பேர்களை கொண்டு குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அமைக்கப்பட்ட குழுக்களுக்குத் தலா ரூ.25,000ம் சுழல் நிதி தொழில் நடத்துவதற்காக விடுவிக்கப்படுகின்றது. இத்திட்டத்தில் 1996–97 ஆம் ஆண்டு முதல் 98ம் ஆண்டு டிசம்பர் வரை 109 குழுக்கள் அமைக்கத் திட்டம் தீட்டப்பட்டு 100 குழுக்கள் அமைக்கப்பட்டு 22.68 இலட்சம் ரூபாய் சுழல்நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பின்தங்கிய பெண்கள் நல்ல வருவாய் பெற்று அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

### கிராம இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு பயிற்சி அளித்தல் (டிரைசம்)

கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திடவும் சுயதொழில் தொடங்க வகை செய்யவும் இத்திட்டத்தில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. பயிற்சி காலத்தில் ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது.

இப்பயிற்சியில் பயன்பெற, 18 வயது முதல் 35 வயது வரையுள்ள நபர்கள் தகுதியுடையவர்கள். இத்திட்டத்தில் பனைநார் தொழில், மீன்பதப்படுத்தும் தொழில், சிப்பி கோர்த்தல், காகிதக் கூழ் பொம்மை செய்தல், ஆயத்த ஆடை தயார் செய்தல், தையல் பயிற்சி போன்ற பல்வேறு தொழில்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தில் 1996–97 ஆம் ஆண்டு முதல் 1256 நபர்களுக்குப் பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1206 நபர்கள் பயிற்சி முடித்துள்ளனர். ஊக்கத்தொகை ரூ.41.23 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

### கைவினைஞர்களுக்குத் தொழிற்கருவிகள் வழங்கும் திட்டம்

கிராமப்புறங்களில் உள்ள பல்வேறு கைவினைஞர்களுக்கும் தொழில் செய்வதற்கு ஏதுவாக நவீனக் கருவிகள் வாங்கி வழங்க மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப் படுகிறது. ரூ.2000 மதிப்புள்ள கருவிகள் வழங்கப்படும். 1996–97ஆம் ஆண்டுக்கு ரூ.9.71 இலட்சம் மதிப்பீட்டில் 500 நபர்களுக்கு நவீன தொழிற்கருவிகள் வாங்கி வழங்கப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டத்தை வளங்கொழிக்கச் செய்யும் வகையில் பல்வேறுப் பணிகளை இவ்வரசு மேற்கொண்டு வருகிறது. ●



மாத்தூர் தொட்டிப் பாலம்

20 அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னிலையில் இருந்து வருவது தெரிந்ததே. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் தங்கள் மாவட்டத்தின் நிலை என்ன என்று கேட்ட மாத்திரத்தில் உடனே கடகடவென்று பேசத்துவங்கினார்-

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் சென்ற ஆண்டு இம்மாவட்டம் முதலிடம் வகித்தது. இவ்வாண்டும் அந்தப் பெருமையை தக்க வைத்துக் கொள்ள முனைப்புடன்

# மாவட்ட ஆட்சியருடன் நேர்காணல்

செயல்பட்டுப் பணிகளை முடிக்கும்' என்றார். தொடர்ந்து பேசுகையில், இம்மாவட்டத்தில் மின்சார வசதி இல்லாதக் கிராமங்களே இல்லை எனலாம். புதிதாகத் தோன்றிய 'காலனி'களில் வேண்டுமானால் மின்சார வசதி இல்லாமல் இருக்கலாம். மற்றபடி எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் சாலை வசதி - எல்லாக் கிராமங்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு, பேருந்து வாகனப் போக்குவரத்து வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. அரசின் புதிய திட்டமான மினி பஸ் திட்டத்தில் தற்பொழுது மூன்று விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவை பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், ஒன்றன்பின் ஒன்றாக, சாதனைகளை அடுக்கினார் மாவட்ட ஆட்சியர்.



மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்மூலம் எத்தனைப் பயனாளிகள் பயன் பெற்றனர், என்ற கேள்வியை முடிப்பதற்குள் தனது பதிலளிக்கத் துவங்கிவிட்டார்.

ஒதுக்கப்பட்ட மூன்று கோடி ரூபாயும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டது என்றும், மேலும் தகுதி வாய்ந்த அனைவருக்கும் வழங்கிட ஏதுவாக மேலும் மூன்று கோடி ரூபாய் தேவை என்று அரசிடம் கோரியுள்ளதாகவும், அது கிடைத்தவுடன் தகுதிவாய்ந்த அனைவருக்கும் இவ்வுதவி வழங்கப்படும் என்றார்.

சமத்துவபுரம் அமைக்கும் பணி குறித்து பேசுகையில், சமத்துவபுரத்தின் கட்டுமானப்பணிகள் நிறைவுபெற்று திறக்கப்படத் தயார் நிலையில் உள்ளதாகவும், இத்தகவலை அரசுக்குத் தெரிவித்து விட்டதாகவும் கூறினார்.

தகுதிவாய்ந்தவர்களை தெரிவு செய்வதில் தாம் மிகுந்த கவனத்துடன், விழிப்புடன் செயல்பட்டதாகவும் 100 பயனாளிகளையும் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்ததாகவும் கூறினார். 'பயனாளிகள் தெரிவு செய்வதில் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக, முதலில் சமத்துவபுரம் பணிகள் தொடங்கப்பட்டு 60 சதவீதம் கட்டி முடித்தப்பின்னரே பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்' என்றார். இப்பயனாளிகளின் பொருளாதார மேம்பாட்டிற்கு அவர்களுக்கு எந்தப் பணிகள் செய்யமுடியும் என்று ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆரம்ப சுகாதார நிலையங்களை தொழிற்சாலைகள் தத்து எடுத்துக் கொள்ளும் திட்டத்தில், தற்பொழுது மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் தத்து எடுக்கப்பட்டுள்ளன.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ், அரசு அலுவலகங்களுக்கு வெள்ளையடித்தல் போன்ற சராசரி நிலையை மாற்றி, கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை முன்னிலைப்படுத்திப் பணிகள் அவர்கள் உதவியுடன் பூர்த்தி செய்கிறோம். வளர்ச்சிப் பணிகளில் மக்களின் பங்கை ஊக்குவிக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்கிறோம். சமுதாய நலக் கூடங்கள் இவ்வகையில் கட்டப் படுகின்றன.

### தூர்வாரும் பணிகளைப் பற்றி நாம் கேட்டபோது...

மாண்புமிகு முதலமைச்சர் அவர்க ளால் தொடங்கப்பட்ட 'மாநிலம் முழுவதும் தூர்வாரும் பணி' இம்மாவட்டத்தில், முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு, நீர்வரத்துக் கால்வாய், குளங்கள் போன்ற இடங்களில் ஆக்கிரமிப்பை அகற்றி, தூர்வாரும் பணியை மேற்கொண்டு மக்களின் நன்மதிப்புப் பெறப்பட்டுள்ளது.

பாசன நீர் வரத்துக் கால்வாய்கள் தூர் வாரப்பட்டன. மத்திய அரசுத் திட்டமான மில்லியன் கிணறுத் திட்டம் இங்கு செயல்படுத்த இயலாததனால், அந்த நிதி ஒதுக்கீட்டை நீர்வரத்துக் கால்வாய் மற்றும் பாசன நீர்த் தேக்கங்களைச் செம்மைப் படுத்துவதற்குப் பயன்படுத்துகிறோம்.

சுகாதாரத் திட்டம் குறித்துக் குறிப்பிடுகையில்... பிப்ரவரி 28 வாக்கில் இம்மாவட்டத்தை 'கண்பொறை இல்லாத மாவட்டம்' என்று அறிவிக்க இருக்கிறோம்.


கிராமபுற மற்றும் நகர்புறங்களில் பெரிய அளவில் கண்பரிசோதனை முகாம்கள் நடத்தி பாதிக்கப்பட்டவர்களில் இதுவரை 60 சதவிகிதத்தினர்க்கு கண் அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது. மீதம் உள்ள 40 சதவிகிதத்தினர்க்கு பிப்ரவரி மாதத்திற்குள் சிகிச்சை முடிக்கப்படும்! என்றார்.

என்னுடைய அன்றாட அரசு அலுவல்களில் பொது மக்களைச் சந்தித்து அவர்களின் குறை தீர்ப்பதுதான் முதல் பணியாக செய்து வருகிறேன். தினமும் முதலில் மக்களை பார்த்துக் குறை கேட்ட பிறகுதான் மற்ற அலுவல்களில் ஈடுபடுவேன்' என்றார்.

தொடர்ந்து பேசுகையில்... திட்டங்கள் செயல்படுத்துவதில் *(Plan Scheme)* முதல் இடத்தைப் பெறுவதில் பெரும் முயற்சிகள் மேற்கொள்கிறோம்' என்றார்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் குறித்துப் பேசுகையில்... 'பொதுவாக இத்திட்டத்தில் கிராமங்களுக்கு அடிப்படை வசதி ஏற்படுத்துவது ஆகும். நாங்கள் அதையும் செய்து அதற்கு மேலாக தனி நபர் கோரிக்கை *(Individual Demand)*களையும் கேட்டு, அவர்கள் அதற்குத் தகுதிவாய்ந்தவர்களாக இருந்தால், அந்த உதவியையும் செய்கிறோம் - உதாரணமாக பட்டா வழங்குதல் ஓய்வூதியம் போன்றவை.

பொதுவாக நிறைய பேர்க்கு அரசு செயல்படுத்தும் சமூக நலத் திட்டங்கள் தெரியாமல் உள்ளது. ஆகவே நாங்கள் அவர்கள் அதை புரிந்து கொள்ள வகை செய்வதோடு, தனியாக அக்கறை எடுத்து உதவி தேவைப்படுகின்ற நிலையில் உள்ளவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு எந்தத் திட்டத்தில் தகுதி இருக்கின்றதோ அந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற ஏதுவாக தனிக் கவனத்துடன் செயல்பட்டு வருகிறோம்'.





கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலையமைத்தல் குறித்துப் பேசுகையில் - ''வாரா வாரம் திங்கட்கிழமை, பொறியாளர்கள் மற்றும் சிலையமைக்கும் ஸ்தபதி ஆகியோருடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி அப்பணிகளின் முன்னேற்றங்களைக் கேட்டு துரிதமாக பணியாற்றிட அறிவுறுத்துகிறேன். இந்தத் திங்கள் நடைபெற்ற கூட்டத்தில் கூட, பணிகள் குறித்துப் பேசுகையில், அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுவதால் பணி பாதிக்கப்படுகிறது என்பதை அறிந்தவுடனேயே, அதுகுறித்து, அத்துறையின் உயர் அதிகாரிக்கு நேர்முகக் கடிதம் எழுதி கன்னியாகுமரியில் சிலையமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற மின் தடை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியுள்ளேன்'' என்றார்.

''சுற்றுலாப் பயணிகள் அதிகம் வந்துபோகும் கன்னியாகுமரியை அழகுபடுத்துவதற்கு பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன?'' என்றார்.

''நாகர்கோவில் நகரில் சாலை நெரிசலை தவிர்க்கும் வண்ணம் சில இடங்களில் ஒரு வழிப்பாதை அமைத்ததில் நிர்வாகத்திற்குப் பொதுமக்களிடமிருந்து நல்ல வரவேற்பு.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொருத்தமட்டில் இங்கு சாதி-மதச் சண்டைகள் கிடையாது. மேலும் தீண்டாமை என்பது அறவே இல்லை. மாவட்ட நிர்வாகம் முழு மூச்சாக வளர்ச்சிப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு செயல்படுத்தி வருகிறது.

'சிறிய பிரச்சினை என்று தெரிந்தால்கூட உயர் அலுவலர்கள் உடனே அங்கு சென்று உரிய நடவடிக்கை எடுக்கிறோம். பிரச்சினை என்று தெரிந்தவுடன், அதை அறிந்து, துரிதமாக செயல்பட்டு முளையிலேயே கிள்ளி விடுகிறோம்'.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்களில் சில கிராமங்களைத் தவிர அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. மீதமுள்ள கிராமங்களுக்கு இந்த வருட இறுதிக்குள் வழங்கப்படும் .

தொடர்ந்து பேசுகையில்- 'இம்மாவட்டத்தில் பொதுப் பணித்துறையினரால் கட்டப்படும் கட்டடங்கள் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்குள் வெகு விரைவில் - மூன்று, நான்கு மாதத்திற்குள் கட்டி முடித்திருக்கின்றனர்.

கேரள மாநிலத்தின் எல்லை இருப்பதால், உணவுக் கடத்தல் போன்ற சமூக விரோதச் செயல்களைத் தடுத்திடும் வண்ணம் 'செக்போஸ்டுகள்' அமைக்கப்பட்டுள்ளன.

அடுத்து, ஆற்றிலிருந்து மணல் திருடுவதை தடுக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். இது தொடர்பான சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்று கூறினார்.

குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று என்னவென்றால் பட்டா மாற்றல் ஆகும். பட்டா மாற்றுதலில் நிறைய மனுக்கள் நிலுவையில் இருந்துவந்தது. நான் பொறுப்பேற்றபிறகு தாசில்தாருடன் கலந்து ஆய்வு செய்து, மாதத்தில் இரண்டு தேதிகளில், மனுக்கள் பெற்று, அந்த இடத்திலேயே 'ஓவர் த டேபிள்' என்று சொல்லுவார்களே - அதைப்போல் அந்த இடத்திலேயே பட்டா மாற்றம் செய்யப்பட்டு மக்களுக்கு இடையூறு களைப் பெரிய அளவில் குறைத்துள்ளோம்' என்றார் பெருமிதத்தோடு.

பொதுச் சுகாதாரம், குடிநீர் வழங்கல், பொது விநியோகம் மற்றும் வளர்ச்சிப் பணிகளில் நான் அதிக கவனம் செலுத்துகிறேன் என்றார்.

வளர்ச்சிப் பணிகளில் தமிழகத் திலேயே முதலிடம் பெறுவோம் என்று மிகுந்த நம்பிக்கையோடு கூறி முடித்தார்.

*தொகுப்பு : எஸ்.எம். பஷீர் &*
*ஆர். ராஜசேகரன்*

# வேளாண்மை வளர்ச்சி

கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகள் நலன் கருதி வேளாண்மை துறையின் மூலம் பல அரசு மானியத் திட்டங்கள் ஆண்டுதோறும் செயல்படுத்தப் படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் (அதாவது 1996–97, 1997–98 ஆண்டுகளில்) நெல், பயறு விதைப் பெருக்கத்திட்டம், தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித்திட்டம், ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித்திட்டம், தேசியப் பயறு அபிவிருத்தித் திட்டம், தென்னை அபிவிருத்தி திட்டம், பண்ணை மகளிர் மேம்பாடுத்திட்டம் போன்ற பல திட்டங்கள் ரூ.1.60 கோடியில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இது போன்றே நடப்பு ஆண்டான 1998–99லும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ரூ.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டப்பணிகள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் தமிழக அரசால் பல திட்டங்கள் வகுக்கப்பட்டு வேளாண்மைத் துறையால் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களைப் பாா்ப்போம்:–

### நெல்விதை பெருக்கத் திட்டம்

நெல் பயிர் உற்பத்தியின் ஆதாரமான உயர்விளைச்சல் நெல் இரக விதைகளை விவசாயிகளுக்கு வழங்கிட அரசு விதைப்பண்ணை மற்றும் தேர்வு செய்யப்பட்ட விதைப்பண்ணை விவசாயிகள் நிலங்களிலும் உற்பத்தி செய்யப்பட்டு விதைச்சான்றளிப்புத் துறையினரால் சான்று வழங்கப்பட்டு மின் விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக விநியோகிக்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 700 மெ.டன் சான்று பெற்ற நெல்விதை விநியோகிக்கப்பட்டன. இத்திட்டத்திற்காக ரூ.52.38 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பு ஆண்டிற்கு ரூ.25.36 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை ரூ.20 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### பயறுவிதை பெருக்கத் திட்டம்

பயறுவகை பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக தேர்வு செய்யப்பட்ட விவசாயிகள் வயலில் விதைப்பண்ணை அமைத்து கடந்த இரண்டு ஆண்டுகளில் 20 மெ.டன் உளுந்துவிதை கொள்முதல் செய்து விதைச் சான்றளிப்புத் துறையினரால் சான்றளிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. இத்திட்டத்தில் ரூ.3.864 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பு ஆண்டில் ரூ.2 இலட்சம் செலவிடப்பட்டு 11 மெ.டன் சான்றுபெற்ற உளுந்துவிதை விநியோகத்திற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் வேளாண் விரிவாக்க பணிகளுக்காக, ஆராய்ச்சித் திடல்கள் அமைக்க கருத்தரங்குகள், விவசாயிகள் பேரணி, கல்விச் சுற்றுலா பணியாளர்கள், விவசாயிகள் பயிற்சி மற்றும் விளம்பரப் பணிக்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ரூ.7.5 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலும் இத்திட்டத்தில் ரூ.2.82 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டம்

மாவட்ட சராசரி அரிசி உற்பத்தியைவிடக் குறைவாக உள்ள வட்டாரங்களில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இராஜாக்கமங்கலம், கிள்ளியூர், முஞ்சிறை, மேல்புறம் ஆகிய வட்டாரங்களில் இத்திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தில் மானிய விலையில்

நிறைவேற்றப்பட்டு வருகிறன.

மேலும் 1998ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இயற்கையின் சீற்றத்தால் சாகுபடி செய்த பயிர்கள் வெள்ளத்தால் சேதம் அடைந்தன. நெல், வாழை, தென்னை, மரவள்ளி, ரப்பர் போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நஷ்டம் அடைந்த விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.13.59 இலட்சம் அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.

வேளாண் தொழில்புரியும் சிறு, குறு விவசாயிகள் ஆதிதிராவிடப் பழங்குடி விவசாயிகள் மற்றும் இதர விவசாயிகள் நலன் கருதியும், உணவு உற்பத்தியினை பெருக்கி



நெல்விதை விநியோகம் செய்யவும், மேம்படுத்தப்பட்ட வேளாண் கருவிகள் வழங்கவும், ஒட்டுநெல் செயல் விளக்கப்பாத்தி அமைக்கவும், வயல்வெளிப் பள்ளிகள் நடத்தவும் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.18.45 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.15.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை ரூ.9.6 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### தேசிய பயறு பெருக்கத் திட்டம்

பயறுவகைப் பயிர் உற்பத்தியைப் பெருக்க விதை விநியோக மானியம், கொள்முதல் மானியம், மினிகிட்டுகள் வழங்கல், செயல் விளக்கங்கள் அமைத்தல், விவசாயக் கருவிகள் மானியத்தில் வழங்குதல் போன்ற பல்வேறு இனங்களுக்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.3.5 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பு ஆண்டில் ரூ.1.8 இலட்சம் ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் நலிவடைந்துவரும் எண்ணெய்வித்துப் பயிரான நிலக்கடைலையை அதிகப் பரப்பில் பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்காக விதை கொள்முதல் விதை விநியோகம் மற்றும் ஆராய்ச்சித் திடல்கள் அமைக்க கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.1.13 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த தென்னை அபிவிருத்தித் திட்டம்

தரமான நெட்டை தென்னங்கன்றுகளை புத்தளம் அரசு தென்னை நாற்றுப் பண்ணையில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 1,20,000 நெற்றுகள் கொள்முதல் செய்யப்பட்டு தென்னை நாற்றுப்பண்ணையில் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக ரூ.9.615 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 60,000 கன்றுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டு இதுவரை ரூ.2.8 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### நெட்டை குட்டை தென்னங்கன்று உற்பத்தித் திட்டம்

தென்னை உற்பத்தியைப் பெருக்கும் நோக்கமாக நெட்டை மற்றும் குட்டை மரங்களில் ஒட்டுசேர்த்து உற்பத்தி செய்யும் நெற்றுகள் மூலம் வீரிய ஒட்டு தென்னங்கன்றுகள் கன்னியாகுமரி அரசு தென்னை நாற்றுப் பண்ணை மூலம் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.11 இலட்சம் செலவிடப்பட்டு சுமார் 1 இலட்சம் கன்றுகள் விநியோகிக்கப் பட்டது. நடப்பு ஆண்டில் 51,000 நெற்றுகள் கொள்முதல் செய்ய ரூ.6 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடை பெறுகின்றன.

### தென்னையில் உயிரியல் முறையில் பயிர் பாதுகாப்பு

தென்னையைத் தாக்கும் கருந்தலைப்புழு மற்றும் காண்டாமிருக வண்டை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையம் ஒன்றும், பச்சை பூஞ்சாணம் வளர்ப்பு மையம் ஒன்றும் பூதப்பாண்டியில் இயங்கிவருகிறது. இந்த மையங்களில் உற்பத்தி செய்யப்படும் ஒட்டுண்ணிகள் மற்றும் பச்சை பூஞ்சாணம் தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.2 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டும் ரூ.1.037 இலட்சம் ஒதுக்கப்பட்டு இதுவரை ரூ.0.95 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### தென்னை வளர்ச்சி வாரியத்திட்டம்

தென்னை உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில் காய்ப்பு குறைந்த பலன் இல்லாத தென்னை மரங்களை வெட்டி மாற்றி புதிய கன்று நடுவதற்கும், காய்ப்பிலுள்ள மரங்களுக்குப் பயிர் பாதுகாப்புச் செய்து உரம் வைக்கவும், தென்னந்தோப்புகளில் கூடுதல் வருவாய் பெற ஊடுபயிர் செய்வதற்கும் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ரூ.18.3 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.4 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### உழவர் பயிற்சி நிலையம்

வேளாண் தொழில்நுட்பப் பயிற்சிகள் விவசாயிகளுக்கு திருப்பதி சாரம் உழவர் பயிற்சி நிலையம் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சியாளர்களுக்கு ஊக்கத்தொகை, பயிற்சி உபகரணங்கள், செயல் விளக்கங்களுக்காக கடந்த இரண்டு ஆண்டுகளில், ரூ.77 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.37 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டம்

வேளாண் தொழில்புரியும் பெண்கள் முன்னேற்றத்திற்காக பெண் வேளாண்மை அலுவலர்களைக் கொண்டு செயல்படுத்தப்படும் திட்டம்தான் பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டம். இத்திட்டம், முதல் கட்டமாக அகஸ்தீஸ்வரம் மற்றும் கல்குளம் பகுதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேர்வு செய்யப்பட்ட சிறு குறு விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க, ஊக்கத்தொகை வழங்க, இடுபொருட்கள் வழங்க செயல்விளக்கங்கள் செய்ய மட்டும் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.13.64 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலும் ரூ.6.6 இலட்சம் ஒதுக்கப்பட்டு இதுநாள் வரை ரூ.5.5 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### விசை உழுவை மற்றும் டிராக்டர் விநியோகம்

சிறுகுறு மற்றும் ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு டிராக்டர் மற்றும் விசை உழுவைகள் ரூ.30,000 மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரையில் 20 விசை உழுவைகள் விநியோகிகப் பட்டுள்ளன.

### பயிர் விளைச்சல் போட்டி

நெல் பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. வெற்றிபெறும் முதல் இரண்டு போட்டியாளர்களுக்குப் பரிசுத்தொகை வழங்கப்படும். கடந்த இரண்டு ஆண்டுகளில் பரிசுத்தொகை ரூ.24,000 வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலும் ரூ.12,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

### சாலை ஓரம் மரம் நடும் திட்டம்

மழை வளம் காக்க மாண்புமிகு முதலமைச்சரின் சாலை ஓரம் மரம் நடும் திட்டத்தின் கீழ், அகஸ்தீஸ்வரம், பூதப்பாண்டி, குருந்தன்கோடு வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துக்கு உட்பட்ட ரோடுகளின் இரு ஓரங்களிலும் 25 கி.மீ. தூரத்திற்கு வேம்பு மற்றும் புளியங்கன்றுகள் 1997–98ஆம் ஆண்டில் ரூ.7 இலட்சம் செலவில் நடவு செய்யப்பட்டன.

### வேளாண்மைத் தகவல் தொடர்பு மையம்

கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் பகுதி–2இன் கீழ், பூதப்பாண்டி மற்றும் தக்கலையில் வேளாண்மை தகவல் தொடர்பு மையங்களும் பறக்கையில் வேளாண்மை விரிவாக்க மையம் ஒன்றும் ரூ.49 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் நாகர்கோவிலில் வேளாண்மை விரிவாக்க மையம் கட்டடம் கட்ட ரூ.9 இலட்சம் ஒதுக்கப்பட்டு பணி ஆரம்பிக்கும் நிலையில் உள்ளது.


### கணிப்பொறி மையம்


நடப்பு ஆண்டில் நாகர்கோவில் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் ரூ.9 இலட்சம் செலவில் கணிப்பொறி மையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

★ ★ ★

# அழகு மிளிரும் ஆலயங்கள்

குமரி மாவட்டத்தில் மும்மூர்த்திக்காக அமைந்த ஒரே கோவிலான சுசீந்திரம் தாணுமாலயர் ஆலயம், சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்னும் நான்கு இந்திய சமயங்களின் கூட்டு உருவமாகக் காட்சிதரும் நாகர்கோவில் நாகராஜர் ஆலயம், திருசரம்கோப்பு ராகேஸ்வரர் கோவில், இராமாயணக் கதை முழுவதையும் மரப்பலகைகளில் செதுக்கி வைத்துள்ள பத்மநாபபுரம் இராமசாமி கோவில், கல்லிலே எழுப்பப்பட்டக் கலைக்கூடமான திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் ஆலயம், கல்லைக்குடைந்து அமைக்கப்பட்ட திருநந்திக்கரக் குடவரைக் கோவில், எழில் கொஞ்சும் அருவியின் அருகே அமைந்துள்ள திருப்பரப்பு மகாதேவர் ஆலயம், மான் மழுவுடன் சிவன் சங்கு சக்கரத்துடன் திருமால், சதுர்புஜங்களுடன் பராசக்தி மூவரும் ஒரே கருவறையில் கருங்கல் பகவதி கோவில், பதினான்கு அடி உயரத்தில் கண்ணன் திருவுருவைக் கொண்ட திப்பரமலை கிருஷ்ணன் கோவில், பாரதத்தாயின் பாதச் சிலம்பொலியென முக்கடலும் கூடி முழங்கும் கன்னியாகுமரியில் நின்று அருளும் குமரி அம்மனின் பேராலயம் – இந்த அழகுமிகு ஆலயங்கள் யாவும் அழியாவரம் பெற்ற கலைச்செல்வங்களாக குமரி மாவட்டத்திலே காட்சி தருகின்றன.





மும்மூர்த்திக்கென்று எழுப்பபப்ட்ட ஒரே ஆலயமான சுசீந்திரம் தாணுமாலயர் ஆலயம் கல்லிலே கலையழகினைக் காட்டி நிற்கும் பல மண்டபங்களைத் தன்னகத்தே கொண்டது. பதினெட்டு அடி உயரத்தில் கைகூப்பி வணங்கிய நிலையில் காட்சி தரும் அனுமனது சிலை, அழகிலும், கம்பீரத்திலும் பாரத நாட்டிலேயே சிறந்து விளங்குகின்றது. அந்த அனுமனின் அரசயிலை ஒரேக் கல்லில் செதுக்கப் பட்டது. அதேபோன்று ஒரே கல்லில் வடித்தெடுத்த இசைத்தூண்கள் பல்வேறு இசைக்கருவிகளின் நாதங்களை எழுப்பி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்துகின்றன. இந்த ஆலயத்தில் காணப்படும் திருமலை நாயக்கன் கற்சிலையிலே மூக்குத்துளை சிரசு வரை செல்கிறது. காதிலுள்ள துவாரம் வழி செலுத்தும் கம்பி மறுகாது வழியாகவும், நாசித்துவாரம் வழியாகவும்வரும் வகையில் செதுக்கப்பட்டுள்ளது. இதைப் போன்று மிக நுண்ணிய வேலைப்பாடுகளைக் கொண்ட சிற்பங்கள் பலவற்றை இங்கே நாம் கண்டு களிக்கலாம். சுசீந்திரம் ஆலயத்தில் பாண்டியர்களும், சோழர்களும், சேரர் வழி வந்த வேணாட்டு அரசர்களும், விஜய நகர, நாயக்க மன்னர்களும், தங்கள் கைவண்ணங்களை அழகுறக் காட்டியுள்ளனர். இந்த ஆலயம் திராவிடக் கட்டக்கலை அமைப்பில் சிறப்புடன் திகழ்கின்றது.

நாகர்கோவில் நகரத்தின் நடுவண் அமைந்துள்ளது நாகராஜர் ஆலயம். இக்கோவிலின் பெயரால் இந்நகர் அழைக்கப்படுவது, ஒரு தனிச்சிறப்பாகும்.

நாகர்கோவில் நாகராஜர் ஆலயம், சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்னும் நான்கு இந்திய சமயங்களின் கூட்டுருவமாக நமக்குக் காட்சி தருகின்றது.

திருவட்டாறு ஆதிகேசவப்பெருமாள் ஆலயத்தில் கல்லிலும் மரத்திலும் அமைக்கக்கப்பட்ட பலகலைச் செல்வங்களைக் கண்டு களிக்கலாம். மூலவரின் முன்னால் உள்ள ஒற்றைக்கல் மண்டபம் 18 அடி சதுரமும், மூன்று அடி உயரமும் கொண்ட ஒரே கல்லின் மேல் எழுப்பப்பட்டுள்ளது. இதை அக்காலத்திய பொறியியல் திறனுக்குச் சான்றாகச் சொல்லாம்.

பத்மநாபபுரம் இராமசாமி கோவிலின் வெளிப்பிரகாரத்தில் இராமாயணக்கதை முழுவதும் நாற்பத்தி ஐந்து மரப்பலகைகளில் நாடக ரூபமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. மர வேலைப்பாட்டில் உள்ள நாட்டின் தலைசிறந்த கலைச்சின்னங்களில் ஒன்றாகக் கருதலாம்.

கன்னியாகுமரியில் நீலத்திரை கடலோரத்தில் முக்கடல் சங்கமத்தில் முக்கண்ணனை நோக்கித் தவம் செய்து நிற்கிறாள் அன்னை பராசக்தி.

கொந்தளிக்கும் கடலின் நடுவே பாறையின் மேல் கம்பீரமாகக் காட்சி தருவது சுவாமி விவேகானந்தரின் நினைவாலயம். இருபதாம் நூற்றாண்டில் எழுந்தக் கலைக்கூடம் இது.

### *பகவதிக்கோவில் மண்டைக்காடு*

மண்டைக்காடு சரித்திர பிரசித்தமான குளச்சல் துறையிலிருந்து சுமார் இரண்டு மைல்கள் தெற்காக, கடற்கரை ஓரத்தில் இருக்கும் சிற்றூராகும். புகழார்ந்த பகவதியம்மன்கோவில் இவ்வூரின் நடுவிலிருக்கிறது. தேவியின் சிலை மண் புற்றால் ஆனதாகும். இச்சிலை நாடொறும் வளர்ந்து கொண்டேயிருப்பதாக மக்களலால் நம்பப்படுகிறது.

செவ்வாய்கிழமைகளில் ஜாதிமத வேறுபாடின்றி எல்லா மக்களும் இக்கோவிலில் வணங்குவதைக் காணலாம்.

### *பூதப்பாண்டி*

சங்க இலக்கியங்களில் ''ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்'' என புகழப்படும் பாண்டிய மன்னன் பூதப்பாண்டியன் பெயரால் அவனுடைய மகன் "பசும் பொன் பாண்டியனால்" ஸ்தாபிக்கப்பட்ட ஊர் இது. சரித்திர, இதிகாசங்களில் இடம் பெறும் பழமையும் பெருமையுமிக்க பூதலிங்க சுவாமி" கோவில் இவ்வூரில் இருக்கிறது.

இக்கோவிலில், ''ஸ்ரீகோவில்'' பாறையைக் குடைந்து ஆக்கப்பெற்றது. அப்பாறையிலேயே ஸ்ரீலிங்கமும் செதுக்கப்பெற்றது. முன்னாலுள்ள அர்த்த, மகா மண்டபங்கள் பிற்காலத்தில் கட்டப்பட்டவை.


### *ஆயக்குடி*

வாழ் திருத்தலங்களில் ஆய்க்குடியும் ஒன்று. இது முன்பு திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தது.

அருணகிரியாரால் பாடல்பெற்ற திருத்தலங்களில் இதுவும் ஒன்று என்பதில் வாழ்பட சேனைபட என்று துவங்கும் திருப்புகழால் விளங்கும்.



நாகராஜர் திருக்கோயில், நாகர்கோவில்



SUCHINDRUM ANJANEYAR
சுசீந்திரம் ஆஞ்சநேயர்

தென்காசி மதுரை நெடுஞ்சாலையில் தென்காசியிலிருந்து நாலாவது மைலில் கிழக்காகப் பிரியும் குறுஞ்சாலையில் 3வது மைலில் இருக்கிறது ஆய்க்குடி.

*வடிவிஸ்வரம்*

நாகர்கோவில் நகரிலுட்பட்ட மூதூர் வடிவீஸ்வரம் அழகம்மன் கோவில் என்று வழக்கில் கூறப்படும், வடிவழக நாகர் அழகேஸ்வரி கோவில் இங்கு இருக்கிறது.

*கிருஷ்ணன் கோவில்*

நாகர்கோவில் நகரத்தில் இருக்கும் சிறப்பு வாய்ந்த கோவில்களில் ஒன்று.

*தழுவிய மகாதேவர் கோயில்*

வாணிபமும், தொழிலும் வளர்க்கும் வடசேரி, நாகர்கோவில் நகரின் வியாபாரக் கேந்திரமாகும். கன்னியாகுமரி மாவட்டத்தின் மிகப்பெரும் சந்தை இங்குதானிருக்கிறது. இங்கே வாணிகப் பேராரவாரம் எட்டாத் தொலைவில், அமைதியான சூழலில் அமைந்திருக்கிறது புகழ்பெற்ற மகாதேவர் கோவில்.

*திருப்பன்றிகோடு மகாதேவர்*

உலகத்தாரை துன்பத்தில் ஆழ்த்திய சிவபெருமான் பன்றியின் கோட்டை (கொம்பை) முறித்து ஆபரணமாக தன் மார்பகத்தில் அணிந்ததாகவும், பன்றியின் கோடறுத்தயிடமாகையால் இத்தலம் திருப்பன்றிகோடு என வழங்கப்படுவதாகவும் ஐதீகம்.

*திற்பரப்பு*

தொல்பொருள் புகழும், கவின்பெருவனப்பும் கொண்ட இத்தலம், குமரி மாவட்டத்தின் வடமலைப்பகுதியிலிருக்கிறது. உயர்ந்த மலைகளும், செறிந்த காடுகளும் காட்டிடையே ஓடிவரும் தெளிந்த கோதையாறும், பொங்குப் புனலருளியும் சூழ்ந்த இயற்சையெழில் கொழிக்கும் இடத்தில் அமைந்திருக்கிறது மகாதேவர்கோவில். கோவில் பிரகாரத்திலிருந்து பார்க்கும்போது மலையும், காடும், நதியும் அருவியுமான தோற்றம் கண்ணைக் கவருகிறது.

*தெரிசனங்கோப்பு இராகவேஸ்வரர்*

நாகர்கோவில் நகரிலிருந்து, வடகிழக்குத் திசையில் எட்டுகல் தூரத்திலிருக்கும் தெரிசனங்கோப்பு வயல் வெளிகளும், மலைகளும், காடுகளும் சூழ்ந்த எழில் கொழிக்கும் சிற்றூராகும். அதன் அருகாமையிலிருக்கும் செம்மலை ''தாடகைமலை'' என அழைக்கப்படுகிறது.

இங்கு ஐயன் இராகவேஸ்வரராகவும், அம்மை உலக நாயகியாகவும் தோற்றம் தரும் திருக்கோவில் உள்ளது.

*ஆரல்வாய்மொழி*

ஆரல்வாய்மொழிக்கணவாய், திருவிதாங்கூரின் கைபர், நாஞ்சில் நாட்டின் தலைவாசல், இதன் வழி உட்புகுந்த படைகள் நாஞ்சில் நாட்டை போர்க்களமாகிய வரலாறுகள் பலவுண்டு. பகைக்குலப் படைகளை புகுமுன் தடுத்ததால் இக்கணவாய்ப் பகுதி பிணவாய் பகுதியாக மாறிய வரலாறுகளும் உண்டு.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஆரல்வாய்மொழியின் வடக்காக மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் இருக்கிறது. இக்கோவிலின் பிரதான தெய்வம் சாஸ்தாவாகும்.

### சோழராஜா கோவில்

நாகர்கோவில் நகரின் வடகிழக்குப் பகுதியில் இருக்கிறது. இச்சிறிய ஆனால் சிறப்புமிக்க கோவில், தமிழ்நாட்டினுடையதாகவும், குறிப்பாக "பொழில்மல்கு" கோட்டாற்றினுடையவும் வரலாற்றுக்கதையில் இடம்பெற்றது இக்கோவில். சோழப்பேரரசர் இராஜேந்திரசோழ தேவரால் புதுப்பிக்கப்பெற்றது. இங்கு இறைவன் இராஜேந்திர சோழேஸ்வராக வீற்றிருக்கிறார்.

### நீலகண்ட சுவாமிக்கோவில்

திருவிதாங்கூர் நாட்டின் முன்னாள் தலைநகரம் பத்மனாபபுரம் என்று இன்று வழங்கப்படும் அன்றைய கல்குளம். முற்கால வேணாட்டின் தலைநகராயிருந்த இப்பகுதியில்தான் மாவீரர் மகாராஜா மார்த்தாண்ட வர்மா முடிசூட்டியது. அரசு கட்டிலிருந்து அவர் நடத்திய படைகள் விரிந்து பரந்த திருவிதாங்கூர் அரசை ஏற்படுத்தியது. வெற்றிகொண்ட பெருநாட்டை அனந்தபுரத்துப்பள்ளிகொள்ளும் பத்மநாபருக்கு மாமன்னர் அற்பணித்த பின்னர் தலைநகர் திருவனந்தபுரத்திற்கு மாறியது. கல்குளம் பத்மனாபபுரம் எனப் புதுப்பெயர் பூண்டது. ஆனால் அன்று கட்டிய அரண்களும், வெட்டிய அகழிகளும், அரசு கட்டிலிருந்த அரண்மனையும் இன்றும் இருக்கின்றன.

இங்கு ஐந்தடுக்கு கோபுரமும், அழகு சிலைகளும், அற்புதக் கலையழகும் கொண்ட இக்கோவில் கிழக்கு திசை நோக்கிக்கட்டப்பட்டிருக்கிறது. கோவிலில் முன்னால் அழகிய பெரிய தெப்பக்குளமுண்டு.


### கேரளபுரம்

நாகர்கோவிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் நெடுஞ்சாலையில், தக்கலை அருகில் இருக்கும் சிற்றூர் கேரளபுரம். நாயக்கர் படைகளை எதிர்த்து, களியாகுளம்

## ஜீவா மணிமண்டபம்

பொதுவுடமை வீரர் ப.ஜீவானந்தம் மணிமண்டபத்தினை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 13.4.98 அன்று நாகர்கோவிலில் திறந்துவைத்தார். விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் பெருமக்கள் ஆர்க்காடு திரு.வீராசாமி, திரு.வ.முல்லைவேந்தன், திரு.என்.சுரேஷ்ராசன் ஆகியோர் பங்கேற்றனர்.







போரில், வெஞ்சமர் நடத்திய திருவிதாங்கூர் படைத்தளபதி, மாவீரன் இரவிக்குட்டிப் பிள்ளையை நாட்டுக்களித்து பெருமை பெற்ற ஊர் இது. இங்கே 'வீர கேரளவரத்து மகாதேவர்' கோவில் இருக்கிறது. இக்கோவில் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கும் முந்திய காலத்தை சேர்ந்த வீரகேரளவர்மர் எனும் சேர அரசரால் கட்டப்பட்டதாக கருதப்படுகிறது.

உச்சியில் பல்வேறு பிரதிமைகள் அமைக்கப்பட்ட வட்ட வடிவமான ஸ்ரீகோவிலும், கோவிலின் பிரதான வாயிலும் கேரள கோவில்கள் ஒப்ப ரிஷிப மண்டபம் முதலானவைகள் கட்டப்பட்டிருக்கின்றன. பிரதான சன்னிதியின் அருகில் தெற்குப் பார்த்து நடராஜர் சிலைகள் சிவகாமி சிலை இருக்கின்றன. பிரகாரத்தில் சிவன், உமை நிற்கும் விநாயகர், கங்காளநாதர், சுப்பிரமணியர், சாஸ்தா மாணிக்கவாசகர் ஆகியோரின் பிரதிமைகள் இருக்கின்றன. வெளிப்பிரகாரத்தில் தென்கிழக்கு மூலையில் நிற்கும் அரசமரத்தினடியில் அமர்ந்திருக்கும் அற்புதப் பிள்ளையார் சிலை இக்கோவிலின் தனிச்சிறப்பாகும்.

### பறக்கை

சுசீந்திரத்திலிருந்து தென்மேற்கு திசையில் ஒரு மைல் தூரத்திலிருக்கும் ஓர் எழில்சேர் சிற்றூர் பறக்கை. பத்தாவது நூற்றாண்டைச் சேர்ந்ததாக கருதப்படும். மதுசூதனப்பெருமாள் கோவில் இவ்வூரின் கீழ்திசையில், கண்டன்குளத்தின் மேற்கு கரையில் இருக்கிறது.

### மருகூர் முருகன் கோவில்

நாகர்கோவில் – கன்னியாகுமரிப் பெருவழிப் பாதையில் சுசீந்திரத்தில் இருந்து வடகிழக்காக மூன்று மைல் தூரத்திலுள்ள "மருங்கூர் திருமலை முருகன் கோவில்" மிகப் பழமையும், பெருமையும் வாய்ந்தது. முருகன் கோவிலின் மருங்கில் (மிக அருகில்) அமைந்த ஊர் ஆதலால் மருங்கூர் என்று பெயர் பெற்றது.

சேர, சோழ, பாண்டியர், சரித்திர வரலாறுகள் இந்த மருங்கூர், இடையாற்று மங்கலம் என்றும் மங்கலக்கால் என்றும் அறிவிக்கப்படுகிறது. குமரியில் இராஜராஜ சோழரால் கட்டப்பட்ட "குகை நாதேசுவரர் கோவில் வடக்குப் பிரகாரக் கல்வெட்டு" "மானமுள்ள ஐவேலன் மங்கலக்கால்" என்று குறிப்பிடுகிறது.

மருங்கூரிலும் சுற்றுப்புறங்களிலும் இரும்பு கலந்த மண் உள்ளது. இதை இன்றும் காணலாம். இந்த மண்ணை உருக்கி, இரும்பு எடுத்தாகவும், இதில் பலவித போர்க் கருவிகளும், பலவித பொருட்கள் செய்ததாகவும், மீதியான இரும்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததாகவும், அயல்நாட்டு இரும்பு பெருமளவில் இறக்குமதி செய்த பின்னரே இங்குள்ள இரும்புத் தொழில் மறைந்துவிட்டதாகவும், திருவிதாங்கூர் வரலாறு" என்ற நூல் தெரிவிக்கிறது. இரும்பு உருக்கிய இடங்களில் உருக்கிய கழிவுப் பொருளான (சிஷ்டகல்) சிட்டங்கல் குன்று குன்றாக குவிந்திருப்பதை இன்றும் இங்குக் காணலாம்.

மருங்கூரின் தெற்கே அமைந்துள்ள, மருந்துவாழ்மலை, அகஸ்தீசுவர் கோவில், கன்னியாகுமரியில் விஸ்வநாதர்கோவில், குகநாதேசுவரர் கோவில், கன்னியாகுமரியின் கோவில் இவைகளில் எல்லாம் கணபதியைக் காணலாம். முருகனை காணமுடியவில்லை. இதனால் பாரதத்தின் தென்கோடி முருகன்கோவில் என்ற பெருமை குமரி மருங்கூர் பெற்றுள்ளது.

இவ்வாறு குமரி மாவட்டக் கோவில்கள் பல்வேறு சிறப்புகளைக் கொண்டு விளங்குவது மட்டுமல்ல பல்வேறு கலைகளை வளர்த்து சிறந்த கலைக் கூடங்களாகவும் திகழ்ந்து வந்துள்ளன. இம்மாவட்டத்திலுள்ள கோவில் அமைப்புகள், கோவிலின் கலையம்சங்கள், வழிபாட்டு முறைகள் இவை தமிழகத்தின் பிற மாவட்டங்களைப் போல் அல்லாமல் தனித்தன்மை பெற்று விளங்குகின்றன. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மண்ணுக்கும் கல்லுக்கும் மரத்திற்கும் உயிர்கொடுக்கும் மாபெரும் தெய்வீகக் கலையைக் கோவில்கள் மூலம் வளர்த்து கட்டடக்கலையிலும் வழிபாட்டு முறையிலும் தனித் தன்மை பெற்று குமரி மாவட்டம் பெருமைப்படுகிறது.

★ ★ ★

# குமரி மாவட்ட குடிநீர்த் திட்டங்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் இரண்டு கோட்டங்கள் மூலமாக நகராட்சி குடிநீர்த் திட்டப் பணிகளும் மற்றும் ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகளும், பராமரிப்பு கோட்டம் மூலமாக பராமரிப்பு பணிகளும் நடைபெற்றுவருகின்றது.

### ஊரகக் குடிநீர்த் திட்டம்

1996-97ஆம் நிதியாண்டில் ஊரகக் குடிநீர் முனைப்புத் திட்டத்தின் கீழ் 34 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டு ரூ.16.60 கோடி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவற்றுள் ரூ.1.7 கோடி செலவில் 21 குடியிருப்புகள் 1996-97ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு பயனுக்கு கொண்டுவரப்பட்டது. இதன்மூலம் 22,715 மக்கள் பயனடைந்துள்ளனர். மீதமுள்ள 13 குடியிருப்புகள் 1997-98 ஆம் ஆண்டில் தொடரும் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

1997-98ஆம் ஆண்டில் ஊரகக் குடிநீர் முனைப்புத் திட்டத்தின் கீழ் தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர் குடிநீர் விநியோக அளவுள்ள 112 குடியிருப்புகள் (கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட தொடரும் திட்டங்கள் 13 குடியிருப்புகள் உட்பட) எடுத்துக் கொள்ளப்பட்டு இதற்காக ரூ.4.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 85 குடியிருப்புகளுக்கு ரூ.4.16 கோடி செலவில் முழுமையாக குடிநீர் வசதி செய்யப் பட்டுள்ளது. இதன் மூலம் 63,173 மக்கள் பயனடைகின்றனர்.

1998-99ஆம் ஆண்டில் ஊரகக் குடிநீர் முனைப்புத் திட்டத்தின் கீழ் 194 குடியிருப்புகள் (கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட தொடர் திட்டங்கள் உட்பட) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ.60.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் டிசம்பர் 98 முடிய 47 குடியிருப்புகள் ரூ.23.49 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு 86,218 மக்கள் பயனடைந்துள்ளனர். மீதமுள்ள குடியிருப்புகள் மார்ச் 1999க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டுவரப்படும்.

### கிராமப் பேரூராட்சி மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

கணபதிபுரம் பேரூராட்சி மற்றும் அதனைச் சார்ந்த 6 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.78.57 இலட்சங்கள் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்று 1998ஆம் ஆண்டு முதல் சுமார் 15,000 மக்கள் பயன்பெறுகின்றனர்.

களியக்காவிளை, மெதுகும்மல் கிராமப் பேரூராட்சிகள் மற்றும் 19 வழியோர குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.1.99 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப்பட்டு திட்டப் பணிகள் முழுவதும் முடிவுற்று தற்போது சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. தற்போது இத்திட்டத்தினால் சில பகுதி மக்கள் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின் சோதனை ஓட்டம் முடிவுற்றதும் சுமார் 66,400 மக்கள் முழுமையாகப் பயன்பெறுவார்கள். இத்திட்டம் இவ்வாண்டு மார்ச் திங்களுக்குள் முழுவதுமாக பயனுக்குக் கொண்டு வரப்படும்.

காட்டாத்துறை, வாழ்வச்சகோஷ்டம், முளகுமூடு கிராம பேரூராட்சிகள் மற்றும் 55 வழியோர குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்றுவருகின்றன. இத்திட்டத்தினால் சுமார் 98,600 மக்கள் பயனடைவார்கள். இத்திட்டம் மார்ச் 99க்குள் முடிவடையும்.

கொல்லங்கோடு, ஏழுதேசம் மற்றும் 21 வழியோர குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.4.38 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த்திட்டம் வடிவமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுவருகின்றன. இத்திட்டத்தினால் சுமார் 90,400 மக்கள் பயனடைவார்கள். இத்திட்டம் மார்ச் 99க்குள் முடிக்கப்படும்.



திருவிதாங்கோடு கிராம பேரூராட்சி மற்றும் 11 வழியோர குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் உத்தேசமாக ரூ.2.32 கோடி செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப்பட்டு இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தினால் சுமார் 25,549 மக்கள் பயனடைவார்கள். இத்திட்டம் டிசம்பர் 99க்குள் மக்கள் பயனுக்கு கொண்டுவரப்படும்.

### புனரமைப்பு திட்டங்கள்

1996-97ஆம் ஆண்டு புனரமைப்பு திட்டத்தின் கீழ் 30 மின் விசையிறைப்பான் குடிநீர்த் திட்டங்கள் ரூ.38.15 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ளப்பட்டு திட்டங்கள் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டது. மேலும் 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.10.07 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ளப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டுவரப்பட்டது.

1997-98ஆம் ஆண்டில் ஊரக பேரூராட்சி புனரமைப்பு திட்டத்தின் கீழ் 17 குடிநீர்த் திட்டங்கள் ரூ.28.35 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்பட்டது.

1997-98ஆம் ஆண்டு தரம் உயர்த்துதல் (Upgradation) திட்டத்தின்கீழ் 3 குடியிருப்புகளில் புதியதாக மேல்நிலைத் தொட்டிகள் கட்டும் பணிகள் ரூ.12.13 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ளப்பட்டன. இதுதவிர 12 குடியிருப்புகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ரூ.8.98 இலட்சங்கள் செலவில் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

1998-99ஆம் நிதியாண்டில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்வதற்காக வாரியத்தால் ரூ.30 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியுதவியுடன் சம்பந்தப்பட்ட ஊராட்சியிடம் மதிப்பீட்டு தொகையில் 50 சதவிதம் பங்கு தொகையாகப் பெற்று மொத்தம் ரூ.60 இலட்சம் செலவில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சில ஊராட்சிகளிடம் 50 சதவீதம் நிதி பெற்று பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள பணிகளும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள முக்கியமான திட்டம் **"அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்"**. இத்திட்டத்தின்படி தமிழகத்தின் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கிராமத்தை தேர்ந்தெடுத்து அந்த கிராமத்தின் குடியிருப்புகளுக்கு அனைத்து வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படவேண்டும் என்பதாகும்.

அதன்படி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 7 சட்டமன்ற தொகுதிகளிலுள்ள 7 கிராமங்கள் 1997-98 மற்றும் 1998-99ஆம் ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்கிராமங் களில் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப் பட்டுள்ளன.

### சமத்துவபுரம் குடிநீர்த் திட்டம்

முஞ்சிறை ஒன்றியத்திற்குட்பட்ட ஏழுதேசம் பேரூ ராட்சியில் கலிங்கராஜபுரத்தின் அருகில் "சமத்துவபுரம்" அமைக்க தமிழக அரசால் தேர்வு செய்யப்பட்டு அதற்கான குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டது.

### நகராட்சி குடிநீர்த் திட்டம் – குளச்சல் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

24,000 மக்கள் பயன்பெறும் வகையில் குளச்சல் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூ.17.17 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1998ஆம் ஆண்டு முடிவுற்றது.

### நாகர்கோவில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

நாகர்கோவில் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு ரூ.17 கோடி மதிப்பீட்டில் சுமார் 2,00,000 மக்கள் பயன்பெறும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2000ஆம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் முடிவடையும்.

### வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

இம்மாவட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 11 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்குடிநீர்த் திட்டங்களினால் 20 ஊராட்சிகள், 18 ஊரக பேரூராட்சிகள், நகர பேரூராட்சிகள் மற்றும் ஒரு நகராட்சிக்குட்பட்ட 7 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டங்களினால் சுமார் 2,63,916 மக்கள் பயனடை கின்றனர். இக்குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்புக்காக 1998-99ஆம் ஆண்டிற்கு ரூ.1.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ஆய்விலுள்ள குடிநீர்த் திட்டங்கள்

★ ரூ.9 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி மற்றும் சுசீந்திரம் பேரூராட்சிகள் கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

★ ரூ.22.81 கோடி மதிப்பீட்டில் 14 பேரூராட்சிகள், கடலோரக் கிராமங்கள் மற்றும் உப்பு நீரால் பாதிக்கப்பட்ட கிராமங்களின் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

★ ரூ.12.64 கோடி மதிப்பீட்டில் வேர்க்கிளம்பி மற்றும் 6 பேரூராட்சிகளின் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

★ ரூ.2 கோடி மதிப்பீட்டில், பூதப்பாண்டி, தாழக்குடி பேரூராட்சிகள் மற்றும் 20 வழியோர கிராமங்களின் கூட்டுக் குடிநீர்த் திட்டம். ★

# சாலைப் போக்குவரத்தில் சாதனை

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில், 1996-97 நிதியாண்டின் தொடக்கத்தில் 125க்கும் அதிகமான பேருந்துகள், இஞ்சின் டயர், உதிரி பாகங்கள் இல்லாமையால் கன்னியாகுமரி மாவட்டத்தில் தடம் முடங்கி கிடந்தன. 250க்கும் மேற்பட்ட பேருந்துகள் பழுதடைந்த நிலையில் இயக்கப் பட்டு வந்தன. இந்த அரசு பொறுப் பேற்றவுடன், எடுத்த தீவிர நடவடிக்கையால் நிறுத்தப்பட்டிருந்த அனைத்து பேருந்துகளும் சாலையில் இயக்கப்பட்டன. பழுதடைந்த பேருந்துகள் சீரமைக்கப்பட்டன.

1996-97 நிதியாண்டில், 41 புதிய பேருந்துகள், 1997-98 நிதியாண்டில் 175 புதிய பேருந்துகள் மற்றும் 1998-99 நிதியாண்டில், 31.12.98 முடிய 54 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு பேருந்து இயக்கம் தடையின்றித் தொடரப்பட்டு வருகிறது.

1997-98ஆம் ஆண்டில், ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் இரண்டு பேருந்துகள் என்ற திட்டத்தின் கீழ் பதினான்கு பேருந்துகள், அனைத்துத் தொகுதிகளிலும் இயக்கப் பட்டுள்ளன.

இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு, 31.12.98 முடிய 270 பழைய பேருந்துகள் கழிக்கப்பட்டு, புதிய பேருந்துகள் பயணிகள் வசதிக்காக இயக்கப்பட்டு வருகிறது. மேலும் 57 புதிய சர்வீஸ்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

அகஸ்தீஸ்வரம் தாலுகா, கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிகளில் 1.11.96 முதல் விவேகானந்தபுரத்தில் புதிதாக ஒரு பணிமனை ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

அதுபோல், கல்குளம் வட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் குளச்சலில் 1.10.97 அன்று ஒரு புதிய பணிமனை ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

1997-98ஆம் ஆண்டில் இயக்கப்பட்ட 30 சர்வீஸ்களில் 20 சர்வீஸ்கள் கிராமப் பகுதித் தேவைக்கென ஒதுக்கி இயக்கப்பட்டன. இதன் மூலம் 50க்கும் மேற்பட்ட கிராமங்களுக்குக் கூடுதல் பேருந்து வசதியும் 16 கிராமங்களுக்குப் புதிய பேருந்து இணைப்பு வசதியும் கொடுக்கப்பட்டன.

1998-99ஆம் ஆண்டில், எங்கும் நிற்கும் பேருந்துகளாக இயக்கப்பட்ட 27 பேருந்துகள் நிரந்தர பேருந்தாக இயக்கப்பட்டு போக்குவரத்து தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளது.




ரயில் வந்து போகும் நேரங்களில் தனி நடைகள் (16) ரயில் நிலையங்களை தொட்டு இயக்கப்பட்டு, ரயில் மூலம் வந்து செல்லும் பயணிகளுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

புதிய பேருந்துகள், ராணித்தோட்டம் கூண்டு கட்டும் பிரிவிலிருந்து 1996-97ஆம் ஆண்டு 58, 1997-98ஆம் ஆண்டு 205, 1998-99ஆம் ஆண்டு 44 (31.12.98 முடிய) கூண்டுகள் கட்டி முடிக்கப்பட்டன.

சமீபத்திய அரசு ஆணையின் அடிப்படையில் 20 நடைகளுக்கான கட்டணம் செலுத்தி 30 நடைகள் நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் சீசன் டிக்கட் முறை 1.6.98 முதல் முதன் முறையாக கன்னியாகுமரி மாவட்டத்திலும் அமல் செய்யப்பட்டுள்ளது.

1997-98ஆம் ஆண்டிற்கான டீசல் சேமிப்பில், திறன் அதிகரிப்பிற்கான முதல் பரிசு அகில இந்திய அளவில் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும், இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

# ச
# மூ
# க
# ந
# ல
# த்
# து
# றை
# யி
# ன்

# சீ
# ர்
# மி
# கு

# ப
# ணி
# க
# ள்

**1996-97 முதல் - 31.12.98 முடிய சமூக நல உதவிகள் பற்றிய விவரம்:**

- ★ **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 3,440** ஏழைப்பெண்களுக்கு **ரூ.3.44 கோடி திருமண உதவியாக** வழங்கப்பட்டது.




- ★ **அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமணத் திட்டத்தின் கீழ், 43** பயனாளிகளுக்கு **ரூ.4.30 இலட்சம்** வழங்கப்பட்டது.

- ★ **டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டத்தில் 23** பயனாளிகளுக்கு **ரூ.1.31,000** வழங்கப்பட்டது.



- ★ **விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், ரூ.1,62,000 செலவில் 52 பேர் பயன்பெற்றனர்.**

- ★ **ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தில், 7** பயனாளிகளுக்கு **ரூ.20,000 வழங்கப்பட்டது.**



- ★ **விதவைக் குழந்தைகளுக்கு இலவசப் பாடப்புத்தகம் வழங்கும் திட்டத்தில், 1,125** பயனாளிகளுக்கு **ரூ.1,25,500 செலவிடப்பட்டது.**

- ★ **டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டத்தின் கீழ்,** ரூ.19.56 இலட்சம் நிதியுதவி 5,880 கருவுற்ற மகளிர்க்கு வழங்கப்பட்டது.




- ★ **இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தில், ரூ.2.60 இலட்சம் செலவில் 135** பயனாளிகள் பயன்பெற்றனர்.

- ★ **தமிழக அரசு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில், ரூ.31,80,000 செலவில் 2,120 குழந்தைகள் பயன் பெற்றனர்.**

கிராமங்களின் அடிப்படை வசதியின் முழுத்தேவையையும் பூர்த்தி செய்யும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களால் **அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்** ஆரம்பிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏழு சட்டமன்ற தொகுதிகளில் அதிக மக்கள் தொகை கொண்ட ஏழு ஊராட்சிகள் இத்திட்டம் செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ளன.

அவைகள் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதியில் தடிக்காரன்கோணம்; நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் மணக்குடி; குளச்சல் சட்டமன்ற தொகுதியில் முட்டம்; பத்மனாபபுரம் சட்டமன்ற தொகுதியில் ஆத்திவிளை; கிள்ளியூர் சட்டமன்ற தொகுதியில் இனையம் புத்தன்துறை; விளவங்கோடு சட்டமன்ற தொகுதியில் தூத்தூர்; திருவட்டார் சட்டமன்ற தொகுதியில் வெள்ளாங்கோடு ஆகிய ஊராட்சிகள் ஆகும். இத்திட்டத்திற்கு ரூ.2.63 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வொதுக்கீட்டுத் தொகையில், 42 சாலைவேலைகள் ரூ. 66.23 இலட்சத்திலும்; 28 கட்டட வேலைகள் ரூ.35.54 இலட்சத் திலும்; 343 தொகுப்பு வீடுகள் ரூ. 108.36 இலட்சத்திலும்; 1 பாலம் ரூ. 2 இலட்சத்திலும்; 268 தெரு விளக்கு ரூ. 10.22 இலட்சத்திலும்; 3 நிழற்குடைகள் ரூ. 2.30 இலட்சத்திலும்; 2 கிணறுகள் ரூ. 4 இலட்சத்திலும்; 2 குடிநீர் இணைப்பு நீட்டித்தல் ரூ.3 இலட்சத்திலும்; 7 துணை சுகாதார நிலையங்கள் ரூ. 24.66 இலட்சத்திலும்; 3 இதர வேலைகள் ரூ. 7.18 இலட்சத்திலும் எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன.

# அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்



வேலைக்கு உறுதியளிப்புத் திட்டம், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், நாடாளு மன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களது தொகுதி மேம்பாடுத் திட்ட ஒதுக்கீட்டிலும் வேலைகள் தேர்வு செய்யப்பட்டு மேற்படி ஊராட்சிகளில் செயல் படுத்தப்படுகின்றன.

தேர்வு செய்யப்பட்ட அண்ணா மறுமலர்ச்சித் திட்டக் கிராமங்களில் பல்வேறு துறைகளின் மூலம் முகாம்கள் நடத்தப்படுகிறது. விவசாயத்துறை மூலம் மாதிரி விளக்கப்பண்ணைகள், சுகாதார நலத்துறை மூலம் உடல் நலம் பேணல், எயிட்ஸ் விழிப்புணர்வு, குடும்பக் கட்டுப்பாடு, கண்பார்வை குறைவுத் தடுப்பு, காசநோய், மலேரியா தடுப்பு முகாம்கள், ஊரக வளர்ச்சித்துறை மூலம் 100 சதம் தெருவிளக்கு எரிதலை உறுதி செய்தல், சமூக நலத்துறை முகாம் மூலம் சமூக விழிப்புணர்ச்சி, மது ஒழிப்பு, தீண்டாமை ஒழித்தல் போன்று பல முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**மணக்குடியில் மீனவர் இளைப்பாறு கொட்டகை**

மீனவர்கள் தங்களது மீன்பிடிக்கருவிகள், வலைகள் ஆகியவைகள் நிழலிலிருந்து சீர் செய்யவும் இளைப்பாறவும் மீனவர் இளைப்பாறு கொட்டகை கட்டப்பட்டுள்ளது. இதனால் சுமார் 100 மீனவர்கள் பயன் பெறுகின்றனர்.

**மீனவர் குடியிருப்புகளுக்கு ஒரு கான்கிரீட் மற்றும் கழிவு நீர் கால்வாய் (ரூ.1 இலட்சம்)**

சகதியும், சேருமாக இருந்த மீனவர் குடியிருப்புகளிலுள்ள இணைப்பு சந்துகளுக்குக் கான்கிரீட் தளம் அமைத்து கழிவுநீர் வடிகாலும் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 200 குடும்பங் களின் சுற்றுப்புறச் சூழல் மேம் பட்டுள்ளது.

**தடிக்காரன் கோணம்**

தடிக்காரன் கோணம் மூன்று பக்கங்களிலும் ஒதுக்கப்பட்ட காடுகளுள்ள (Reserve Forest) மலைப்பாங்கான பகுதியாகும். மக்கள் மேடான பகுதியிலிருந்து தாழ்வான பகுதிக்கும், தாழ்வான பகுதியிலிருந்து மேடான பகுதிக்கும் மலைச்சரிவுகளில் ஊர்ந்து சென்றார்கள். எனவே மலைச் சரிவில் ஓர் பக்கச் சுவர் கட்டி, படிக்கட்டுகளும் கட்டப்பட்டுள்ளன. இதனால் சுமார் 100 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

**இணையம்புத்தன்துறை**

இங்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டப்



பட்டுள்ளது. இதற்கு முன்னால் இச்சுகாதார நிலையம் ஓர் இடிந்த ஓட்டுக்கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இப்புதிய கட்டடத்தால் இக்கிராம மக்கள் மட்டுமல்லாது சுற்று வட்டார மக்களும் பயன் பெறுவார்கள்.

**நமக்கு நாமே திட்டம் 1997 - 98**

கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் நோக்குடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 1997–1998ஆம் ஆண்டு ரூ.11 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு பதினேழு ஊராட்சிகள் பயன்பெற்றுள்ளன.

இத்திட்டத்தில் 1997–98ஆம் ஆண்டில், சாலைகள் –9; தடுப்புச்சுவர் கட்டுப் பணிகள் –11; குடிநீர் வேலைகள் –2; படிப்பகம் கட்டும் பணி –2; தொலைக்காட்சி அறை கட்டும் பணி –1; சத்துணவு கூடம் –1; வடிகால் வசதி –2; புதிய தெருவிளக்கு –1, ஆகமொத்தம் 29 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் பங்குத் தொகையாக பணமாக ரூ.25 இலட்சம் பெறப்பட்டு மேற்கண்ட பணிகள் முடிக்கப்பட்டன. 1998–99ஆம் ஆண்டிற்கு ரூ.18 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு 69 கிராமங்களில் 104 பணிகள் எடுக்கப்பட்டன. இவற்றில் 32 பணிகள் நிறைவு பெற்றுவிட்டன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**திருப்பதிசாரம் ஊராட்சி**

நமக்கு நாமே திட்டத்தில் திருப்பதிசாரம் பெருமாள் கோவில் தெருவில் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி அறை ரூ.16,000 மதிப்பீட்டில் (பொதுமக்கள் பங்களிப்புத் தொகை ரூ.4,000) கட்டப்பட்டுள்ளது. தொலைக்காட்சிப் பெட்டி இருந்தும், அறை இல்லாமல் பயன்படுத்த முடியாத நிலை முன்பு இருந்தது. தற்போது தனியே தொலைக்காட்சி அறை கட்டப்பட்டு விட்டதால் பொது மக்கள் தொலைக்காட்சியைக் கண்டுகளிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.


**சரல்விளை ஊராட்சி**

சுமார் 200லிருந்து 300 ஏக்கர் விளை நிலங்களுக்கு இணைப்புச் சாலையின்றி வரப்புகளின் வழியே விவசாயிகள் தங்கள் நிலங்களுக்குச் செல்லவும் விளைப் பொருட்களை எடுத்து வரவும் முடியாமல் அல்லல்பட்டனர். நமக்கு நாமே திட்டத் தின் கீழ் அவர்கள் ஓர் இணைப்புச் சாலையும், பக்கச் சுவரும் அமைக்க முன் வந்தனர்.



இச்சாலையின் மதிப்பு ரூ.1.32 இலட்சம். இதில் பொது மக்களின் பங்குத் தொகை ரூ.33,000 ஆகும்.


மேலும் சுமார் 50 பட்டாதாரர்கள் தங்களின் நிலங்களில் அரை சென்ட் முதல் ஒரு சென்ட் நிலம்



இலவசமாக விட்டுக் கொடுத்து இவ்விணைப்புச் சாலை அமைக்க வழி வகுத்தனர்.

இச்சாலையின் தற்போதைய அகலம் 5.5 மீட்டராகும். எனவே இதில் லாரி போன்ற கனரக வாகனங்கள் சென்று விவசாய விளைபொருட்கள் எளிதில் கொண்டு செல்ல ஏதுவாக வுள்ளது. மேலும் இந்த இணைப்பு சாலையின் மறு புறத்தில் குடியிருப்பு மனைகள் உள்ளன.

இணைப்புச்சாலை அமைக்கப்பட்டுள்ளதால் தற்போது 50 குடியிருப்பு வீடுகள் கட்டவும் ஏதுவாகவுள்ளது.



★ ★ ★

# தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் கன்னியாகுமரி மாவட்டக் கிளை, மாவட்டத்தில் உள்ள தொழில் முனைவோர், வாகன உரிமையாளர்கள் மற்றும் மருத்துவர்களின் கடன் தேவைகளை நிறைவேற்றுவதில் முன்னணி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. இதுவரை வழங்கப்பட்டப் புதிய கடன்கள் உதவி விவரம் பின்வருமாறு:

**1996–97**ல் சிறுதொழில் கடன்கள் – **32** நபர்களுக்கு ரூ.3.47 கோடியும், **1997–98**ல் **40** நபர்களுக்கு ரூ.2.25 கோடியும், **1998**ல் **26** நபர்களுக்கு ரூ.**80.71** இலட்சமும் வழங்கப்பட்டது.

வாகனக் கடன்கள் **1996–97**ல் **95** நபர்களுக்கு ரூ.1.34 கோடியும், **1997–98**ல் **89** நபர்களுக்கு ரூ.1.19 கோடியும், **1998**ல் **49** நபர்களுக்கு ரூ.**70.82** இலட்சமும் வழங்கப்பட்டது.

தனியார் மருத்துவமனை கடன்கள் **1996–97**ல் **4** நபர்களுக்கு ரூ.34.45 இலட்சமும், 1997–98ல் 5 நபர்களுக்கு ரூ.**47.49** இலட்சமும், **1998**ல் **1** நபருக்கு ரூ.**8.20** இலட்சமும் வழங்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்டுவரும் முக்கிய தொழிலாகிய தானியங்கி இயந்திரங்கள் மூலம் மீன்பிடி வலை உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களது வளர்ச்சியில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகத்தின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இதுவரை 35 தொழிற்சாலைகளுக்கு ரூ.9 கோடி கடனாக வழங்கி அத்தொழில் கன்னியாகுமரி மாவட்டத்தில் செழித்தோங்கி வளர உதவி செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை கருத்தில் கொண்டு நாகர்கோவில் மற்றும் சுற்றியுள்ள நகரங்களான குழித்துறை, தக்கலை, பூதப்பாண்டியில் தனியார் வணிக வளாகங்கள், திருமண மண்டபங்கள், குளிர்பதன வசதியுடன் கூடிய கிட்டங்கிகள் கட்ட நிதி உதவி வழங்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இளைஞர்கள் மற்றும் மகளிர் தொழிற்துறையில் ஈடுபட ஊக்குவிக்கும் பொருட்டு முதலீட்டில் 25 சதவிகிதம் வரை சுலபக்கடன்களை 1 சதவிகிதம் வட்டியில் வழங்கவும், அரசு வழங்கும் மானியங்களை கடன்தொகையுடன் உடனடியாக வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ★


# வனவளம் கொழிக்கும் கன்னியாகுமரி

'வனம்' இந்நாட்டிற்குக் கிடைக்கப் பெற்ற ஒரு வரப்பிரசாதம். இம்மாவட்ட பசுமை மாறா வனத்திற்கு 75 மில்லியன் வருட வயது எனச் சொல்லப்படுகிறது. 1,67,130



ஹெக்டர் மாவட்ட பரப்பில் அரசுக் காடுகள் 50,486 ஹெக்டர் பரப்பில் அமைந்துள்ளன. இது இம்மாவட்ட பூகோளப் பரப்பில் 30.2 சதவீதமாகும்.

இக்கோட்டத்தில் அழகியபாண்டியபுரம், வேளிமலை, குலசேகரம். களியல், பூதப்பாண்டி ஆகிய ஐந்து வனச்சரக அலுவலகங்களும், தடிகள் விற்பனை மண்டி, வடசேரியில் வனமண்டி சரகங்களும் வனச் சட்டங்களை அமல்படுத்தும்



பொருட்டு வனச் சட்டச் செயலாக்கச் சரகமும், வனங்களை பாதுகாக்கும் பொருட்டு வனக் காவல் நிலையச் சரகமும், தொழில்நுட்பச் சரகமும் ஆக மொத்தம் 9 சரகங்கள் செயல்படுகின்றன.

இம்மாவட்ட வனத்தில் கோங்கு, நாங்கு, மிளாசதையன், மயிலை போன்ற மரங்களும், நாய்த் தேக்கு போன்ற சிறிய மரங்களும், கொடிகளும், செடிகளும், மூலிகைகளும், கள்ளி இன வகைகளும், அநேக வகை பிரம்பு, பனை, கூந்தல் பனை, ஈச்சை பனை ஆகியவை உள்ளன. விலையுயர்ந்த தரமான தேக்கு, ஈட்டி, வேங்கை, ஆயினி போன்ற மரங்களும், மூங்கில், ஈத்தல், மென்மரம், புளி, ஏலுமிச்சை மணம் கொண்ட புல், ரப்பர், தென்னை, கமுகு, கடுக்காய், லவங்கம், நெல்லிக்காய், ஏலம் மாவு மற்றும் மருந்து வகைச் செடிகள் கிடைக்கின்றன; மருந்துவாழ்மலையில் அரிய மூலிகை வகைகள் கிடைக்கிறன. 4,785.70 ஹெக்டர் அரசு ரப்பர் தோட்டமும், 110 ஹெக்டர் கிராம்பு தோட்டமும் இம்மாவட்டத்தில் உள்ளன.

இம்மாவட்ட வனத்தில் 25 வகையான பாலூட்டிகளும், 14 வகையான இடம் பெயர்ந்து வரும் பறவைகளுடன்



சேர்த்து 60 வகையான பறவையினங்களும், பல்வேறு வகையான மீனினங்களும் ஊர்வன வகைகளும் உள்ளன. இவ்வனம் பல தரப்பட்ட உயிரினங்களுக்குப் பெட்டகமாக உள்ளது.

இவ்வனத்தில் தென்னிந்திய யானைகள், வரையாடுகள், பெரிய அணில்கள், காட்டெருமைகள், மலைப் பாம்புகள், காட்டுக் கோழிகள் ஆகிய அரிய வனவிலங்குகளும் உள்ளன. ★

கன்னியாகுமரி மாவட்டம்

# மின் வசதி

கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டத்தில் 9ஆவது திட்டத்தில் நான்கு 110/11 கே.வி. மற்றும் ஒரு 33/11 கே.வி. துணை மின் நிலையத்திற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு அதற்கான நிலம் கையகப்படுத்துதல் மற்றும் அதற்கான இதரப்பணி நடைபெறுகின்றன.

மீனாட்சிபுரம், தெங்கம்புதூர், திக்கணங்கோடு, மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் 110/11 கே.வி. துணை மின் நிலையங்களும், தடிக்காரன்கோணத்தில் 33/11 கே.வி. துணை மின் நிலையமும் அமைக்கப்படுகின்றன.

### இலவச ஒரு குடிசை ஒரு விளக்குத் திட்டம்

ஒரு குடிசை ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் குடிசைகளுக்கு இலவச மின்னிணைப்பு வழங்கப்படுகிறது. இதற்கான தகுதிகள் கிராம பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட இடங்களில் சுவர் மண்ணால் கட்டப்பட்டதாகவும், மேல்பாகம் கூரை மேவப்பட்டதாகவும், பரப்பளவு 200 சதுர அடிக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும். மேலும் தே.ஊ.வே. திட்டம், ஊரக நிலம் அற்றோர் வேலைவாய்ப்பு திட்டம், ஜவகர் வேலை வாய்ப்பு திட்டம், மற்றும் தாட்கோ திட்டங்களின் மூலம் கட்டப்பட்ட வீடுகளுக்கு இச்சலுகை வழங்கப்படுகிறது.

### விவசாய பம்பு செட்டுக்கான மின் இணைப்புத் திட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1996 மே திங்கள் முதல் 1998 டிசம்பர் திங்கள் விவசாயத்திற்காக 915 புதிய மின் இணைப்புகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.


மேலும் குறைந்த மின் அழுத்த தொழில் நிறுவனங்களுக்காக 599 புதிய மின் இணைப்புகளும், 287 கூடுதல் மின்பளு இணைப்புகளும், 1 உயர் அழுத்த மின் இணைப்பும் 39,169 குடியிருப்புகளுக்கு புதிய மின் இணைப்புகளும், 164 நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு மின் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. புதிதாக 8105 தெருவிளக்குகள் போடப்பட்டுள்ளன.

குறைந்த மின் அழுத்தத்தை நிவர்த்தி செய்வதற்காக செண்பகராமன்புதூரில் 230 கிலோ வோல்ட்டில் புதிய துணை மின் நிலையமும், வியன்னூரில் 110 கிலோ வோல்டில் ஒரு புதிய உபமின்நிலையம் ரூ.5,288 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

ரூ.92.86 இலட்சம் செலவிடப்பட்டு நாகர்கோவில் மற்றும் மணவாளக்குறிச்சி உப மின் நிலையங்களில் மின் மாற்றிகளின் திறன் உயர்த்துப்பட்டுள்ளன. 135.282 கி.மீ. நீளத்தில் உயர் அழுத்த மின் பாதையும் 468 கி.மீ. நீளத்தில் தாழ்வழுத்த மின் பாதையும் அமைக்கப்பட்டுள்ளன.

குறைந்த மின் அழுத்தம் சரி செய்யவும் மின்மாற்றிகள் அமைக்கவும் ரூ.84.78 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

* * *



வட்டக்கோட்டை

# பால் வளம்

**க**ன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் 25.1.1949இல் நாஞ்சில் நாடு கூட்டுறவு பால் வினியோக சங்கமாகப் பதிவு செய்யப்பட்டு 7.2.1950 அன்று பணி துவங்கியது. தற்பொழுது 144 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பொது பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் 81, மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் 56, அனைத்து மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் 4, ஆதிதிராவிட மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் 3 எனச் சங்க உறுப்பினர்களின் கறவை மாநாடுகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் மருத்துவ வசதியும் ஒன்றியம் வழியாக நடைமுறைப் படுத்தி வருகிறது.

1996ஆம் ஆண்டு நாள் ஒன்றுக்கு 15,000 லிட்டர் பால் விற்பனையாக இருந்தது தற்பொழுது 18,000 லிட்டர்களாக உயர்ந்துள்ளது. இதை நாள் ஒன்றுக்கு 25,000 லிட்டர்களாக உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

## அரசு நலத்திட்டங்கள்

தமிழக அரசு நலத்திட்டங்களை இவ்வொன்றியம் பெற்று நலிந்த பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கி அவர்கள் நிலை உயர உறுதுணையாக இருக்கிறது.

## ஆதிதிராவிடர் மற்றும் தாட்கோ திட்டம்

இத்திட்டத்தின் கீழ் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு கறவை மாடு ஒன்றுக்கு ரூ.6,000 வீதம் 50 சதவீதம் அரசு மானியத்தில் வங்கி வழியாக கடன் வழங்கி உதவி வருகிறது. அதன் வகையில் 1996–97 முதல் 1997–98 வரை 104 பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வாங்க மானியமாக ரூ.3,12,000 வழங்கப்பட்டுள்ளது.

## கன்றுகள் வளர்ப்புத் திட்டம்

தாட்கோ மற்றும் ஆதிதிராவிடர் நலத் திட்டத்தில் 50 சதவீதம் மானியத்தில் கறவை மாடுகள் வாங்கிய உறுப்பினர்களின் கிடாரிக் கன்றுகளை உரிய வயதில் பருவத்திற்குக் கொண்டு வருவதற்காக 4வது மாதம் முதல் 32வது மாதம் வரையில் ஊட்டச்சத்து மிக்க கன்றுகள் தீவனம் இலவசமாக தமிழக அரசால் ஒன்றியம் வழியாக வழங்கி வருகிறது. 1996 முதல் 1998 வரை ரூ.5,28,388 மதிப்புள்ள கன்றுகள் தீவனம் வழங்கப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தில் 1996–97ஆம் ஆண்டில் ரூ.2,12,697 மதிப்புள்ள 165 பால் கேன்கள் 50 சதவீதம் மானியத்தில் வாங்கப்பட்டுள்ளன.

ஐயாவைகுண்டர் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.30,000 மதிப்புள்ள நவீன பால் பரிசோதனை கருவி ஒன்று 50 சதவீதம் தொகை ஐ.ஆர்.டி.பி. வழியாகவும் மீதம் 50 சதவீதம் தொகை தமிழக அரசு மானியமும் ஆக 100 சதவீத மானியத்தில் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த பால்பண்ணை மேம்பாட்டுத் திட்டம்

தமிழக அரசு, ஒன்றியத்திற்கு மத்திய அரசின் ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தில் ரூ.96.45 இலட்சம் 100 சதவீத மானியமாகப் பெற்று தந்துள்ளது. இத்திட்டம் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 19.4.1998 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

அரசு அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்ட இந்நிறுவனம் கூட்டுறவுக் கொள்கையின் அடிப் படையில் உறுப்பினர்களின் பிரதிநிதிகளே நிர்வகிக்க வேண்டும் என்ற சீரிய கொள்கைக்கு ஏற்ப தேர்தல் நடத்தப்பட்டு 2.10.1998 முதல் புதிய நிர்வாகக்குழு பொறுப்பு ஏற்று நிர்வகித்து வருகிறது.

★ ★ ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **க.முத்துசாமி,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:568926/568927/564906




தூய
பட்டு

தூய
சரிகை





ராஜகம்பீரமான ஊதா...

செந்தூரப்பூபோல் சிகப்பு...

மங்களகரமான மஞ்சள்...

வான்வெளிபோல் நீலம்...

கற்பனைக் கடங்கா

அற்புத வண்ணங்களில்

நேர்த்தியான பட்டு,

நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA 7556

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



